விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை (08.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

## 5 ஆயிரத்தை கடந்த கொரோனா பலியெடுப்பு

### மேலும் 98 பேர் ஒரே நாளில் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா பலியெடுப்பு 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது.
நாட்டில் கொரோ னாத் தொற்றினால் ▶15

## பருத்தித்துறையில் இரு இந்து ஆலயங்கள் தனிமைப்படுத்தப்பட்டன



(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறையில் இரண்டு இந்து ஆலயங்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் வழிபாடுகள் அனைத்தும் 14 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டு மூடப்பட்டன.
பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி, பொலிஸார் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்று பிற்பகல் முன்னெடுத்தனர்.
பருத்தித் துறைசுப்ர்மடம் ▶15

## கொரோனாத் தொற்றால் யாழில் நால்வர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.
யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் கொரோனாவால் உயிரிழந்ததுடன், ஏனைய மூவர் ஏற்கெனவே உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு மேற்கொள் ▶15

## யாழ்.நகரில் இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அதிகளவான இராணுவத்தினர் ▶15


## நாட்டில் மேலும் +2,796 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)
நாட்டில் நேற்று ▶15

### நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாக நடந்து கொண்டால்

# சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்போம்

### யாழில் முன்னாள் போராளிகளுக்கான உதவித் திட்டத்தில் சவேந்திர சில்வா



(யாழ்ப்பாணம்)
நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாக நடந்து கொண்டால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கூடியதாக இருக்கும் என யாழில் நேற்று நடைபெற்ற முன்னாள் போராளிகளுக்கான உதவித் திட்ட நிகழ்வில் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 73 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
வவுனியா மாவட் ▶15

## விசுவமடுவில் விபத்து; 19 வயது இளைஞன் பலி



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு விசுவமடு நகர்ப்பகுதியில் இடம்பெற்ற விபத்தின்போது படுகாயமடைந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ். போதான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று ▶15

### நாட்டு மக்களுக்கு
## அரசாங்கம் அவசர அறிவிப்பு

- வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம்.
- தடுப்பூசிகளை விரைவாக பெறுங்கள்.
- விழாக்களில் பங்கேற்பதை முற்றாகத் தவிருங்கள்.

03ஆம் பக்கம் பார்க்க

### கீரிமலை, காரைநகர் கடற்கரைகளில்
## பிதிர்க்கடன்களை நிறைவேற்றத் தடை

(யாழ்ப்பாணம்)
கீரிமலை, காரைநகர் கடற்கரைகளில் பிதிர்க்கடன்களை நிறைவேற் ▶15

## யாழில் பிறந்த ஒரு நாளேயான சிசுவுக்கும் கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பிறந்து ஒரு நாளேயான சிசு ஒன் றுக்கு கொரோனாத் ▶15

## மாகாணங்களுக்கிடையில் மீண்டும் பயணத் தடை?

### அரசு தீவிர ஆலோசனை

கொரோனாத் தொற்றின் அச்சுறுத்தல் மீண்டும் அதிகரித்திருப்பதால் அண்மையில் நீக்கப்பட்ட மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை திரும்பவும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகின்றது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த தொற்றாளர்கள்; திணறும் வைத்தியசாலைகள்

(கொழும்பு)

நாளாந்தம் கோவிட்-19 தொற்றுறுதியாகின்றவர்களினதும் மரணிப்போரினதும் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் என்பவற்றின் கொள்ளளவு கடந்துள்ளது.

தனியார் வைத்தியசாலைகளிலும் தொற்றுறுதியாகின்றவர்களை அனுமதிக்கும் செயற்பாடு தாமதமடைந்துள்ளது.

அத்துடன் நாடு முழுவதும் உள்ள அரச வைத்தியசாலைகளில் கொரோனா பிரிவு நிரம்பியுள்ளது.

பிரதான வைத்தியசாலைகள், அதன் அருகிலுள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் உதவி பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 11 அறைகளில் கொவிட்-19 தொற்றுறுதியான 600 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்

அத்துடன் அவர்களில் நாளாந்தம் 15 பேர் வரை மரணிப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ராகம போதனா வைத்தியசாலையில் 10 அறைகளில் 240 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தீவிர சிகிச்சை பிரிவில் 10 கட்டில்கள் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-03)

உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (7592)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## பரு. சிவன் கோவில் முன்றலில்

# திருவிழாவை நடத்தக் கோரி பக்தர் ஒருவர் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சிவன் கோவில் திருவிழாவை உள்வீதிப் பிரகாரம் பூஜைகள் நடத்த அனுமதி வழங்குமாறு கோரி பக்தர் ஒருவர் நேற்று மதியம்முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சிவன் ஆலயத்தின் நேற்றைய ஆறாம் திருவிழாவின் போதும் கடந்த ஐந்து நாட்களாக வெளிவீதி சுவாமி ஊர்வலம் இடம்பெற்றுள்ளது. கோவிட் நிலைமை காரணமாக கோவில் திருவிழாக்கள் வெளிவீதி சுவாமி சுற்ற முடியாது என அறிவிக்கப்பட்ட நிலையில் வெளிவீதி சுவாமி சுற்றியதன் காரணமாக, நேற்று பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் கோவிலுக்கு சீல் வைத்துள்ளனர்.

குறித்த சிவன் கோவிலின் திருவிழாவை உள்வீதிப் பிரகாரம் பூஜைகளை நடத்தி திருவிழாவை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரியே பக்தர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளார். (ம-03)

# சிறுவர்களை வெளியில் அழைத்து செல்வதனைத் தவிருங்கள்

## மருத்துவ வல்லுநர் சன்ன பெரேரா

நாட்டில் சிறுவர்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்படுவதற்கான அதிகபட்ச சந்தர்ப்பமுண்டு. இந்த நாட்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சமூகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ வல்லுநர் சன்ன பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இலங்கையில் பதிவாகும் நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்" என்றும் மருத்துவ வல்லுநர் சன்ன பெரேரா கூறினார். இதற்கிடையில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற குழந்தை மருத்துவ வல்லுநர் தீபால் பெரேரா, கோவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை வீட்டில் எப்படி பராமரிப்பது என்பது குறித்து தனது கருத்துக்களை தெரிவித்தார்.

நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். கோவிட் -19 தொற்று உள்ள குழந்தைக்கு சத்தான உணவுகளை வழங்கவேண்டும் என்றும் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா குறிப்பிட்டார். (ம-03)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 – 09 – 1933



இறப்பு 07 – 08 – 2021

## பாக்கியம் இராமலிங்கம்

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் சந்தை மேற்கு ஒழுங்கை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் இராமலிங்கம் நேற்று (07.08.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - காளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பவளம்மா, விநாயகமூர்த்தி, லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் இராமச்சந்திரன், இராஜேஸ்வரி, இராசநாயகம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகுரு, சூரிய கமலா, சந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆனந்தரூபன், ஆனந்தகுமாரி, ஆனந்தரூபி, ஆனந்தஜெகன் (லண்டன்), ஆனந்தஜெசிந்தா, ராகவன் (தாதிய உத்தியோகத்தர்), ரஜீவன் (வெளிக்கள காணி போதனாசிரியர் - பருத்தித்துறை செயலகம்), சுபாசினி, இளங்கோ, மனோஜா (லண்டன்), வினோத் (வைத்திய அதிகாரி - லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2480)

சந்தை மேற்கு ஒழுங்கை. பருத்தித்துறை. 077 652 9196 தகவல்:- குடும்பத்தினர்

# கண்ணீர் காணிக்கை

அமரர்

## அன்னலட்சுமி சுப்பிரமணியம்



உங்கள் இரு விழிகள்
மூடியதனால்
பல விழிகள் ஈரத்தால்
நனைகின்றன...
எம் கண்ணீர்ப் பூக்களை
உங்கள் பாதங்களில்
காணிக்கையாக்குகின்றோம்...!

அமரர் **அன்னலட்சுமி சுப்பிரமணியம்** அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மணற்காடு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 27.03.1937
உதிர்வு : 02.08.2021

பிரிவால் துயருறும்
கணேசபிள்ளை பாலச்சந்திரன்
உப தவிசாளர், காரைநகர்.

(7585)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## அன்னலட்சுமி சுப்பிரமணியம்

நிலையில்லா வாழ்வினிலே
நெஞ்சமதில் நீங்கா
நினைவுகளை பதித்துவிட்டு
பாசம் காட்டிய உறவுகளை
பரிதவிக்க வைத்து விட்டு
மறைந்தாயே!

அமரர் **அன்னலட்சுமி சுப்பிரமணியம்** அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மணற்காடு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 27.03.1937
உதிர்வு : 02.08.2021

(7584)

உரிமையாளரும் ஊழியர்களும்


லலிதா ரெக்ஸ்
இல. 5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லலிதா பெஷன்
இல. 165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக மரண வீதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை முதலிடத்தை பிடிக்கக் கூடும்

## எதிர்க்கட்சி எச்சரிக்கை



(கொழும்பு)

**உலகில் அதிக மரண வீதம் பதிவாகிய நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தை பிடிக்கக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரி வித்தார்.**

இந்தியா மற்றும் அமெ ரிக்கா ஆகிய நாடுகளில் கொவிட் பரவல் இரண்டாம் அலையில் மரணங்களின் எண்ணிக்கை சடுதியாக அதி கரித்ததைப் போன்ற நிலை மையே தற்போது இலங்கை யிலும் காணப்படுகிறது.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத் தில் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், இந் தியா மற்றும் அமெரிக்காவில் இரண்டாம் அலையில் கொவிட் மரணங்கள் அதிகரி த்துச் சென்றமை தொடர்பான வரைபுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மரணங்கள் அதிகரித்துச் செல்லும் வேகம் தொடர்பான வரைபு உயர் மட்டத்தில் காணப்படு கிறது.

அதற்கமைய அவதானிக் கும் போது எதிர்வரும் வாரங் களில் உலகில் கொவிட் மரண வீதம் அதிகமாகக் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடிக்கக்கூடும்.

காரணம் தற்போது பெரு மளவான வைத்தியசாலை களில் கொள்ளளவை மீறிய தொற்றாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

இந்த நிலைமையைத் தடுப் பதற்கு மேலும் தாமதிக்காது நாட்டிலுள்ள சகல பிரஜைகளு க்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். இதற்கு 60 பில்லியன் ரூபாய் கூட செல வாகாது.

அத்தோடு நாட்டு மக்கள் அனைவரும் தாமதிக்காது பொறுப்புடன் சென்று தடுப் பூசிகளை ஏற்றிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# மக்களே வெளியே செல்லாதீர்கள்

## அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பு

(கொழும்பு)

டெல்டா திரிபு கொரோனா பரவும் நில்லயில் மக்கள் சீக்கிரம் தடுப்பூசியை பெறுமாறும் அநாவசியமாக வெளியே நடமாட வேண்டாமெனவும் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்காக உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவ தோடு, கீழ்வரும் நடைமுறைகளை கடைப் பிடிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

- தடுப்பூசிகளை விரைவில் பெறுங்கள்.
- அநாவசியமாக பயணங்கள் மேற் கொள்வதைத் தவிருங்கள்.
- மிகவும் அத்தியாவசிய தேவைகள் இருப்பின் மாத்திரம் உரிய சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி வெளியில் செல் லுங்கள்.
- பொது இடத்திற்குச் செல்லும் போதும் வெளியில் பயணம் செய்யும் போது எப்போ தும் முகக்கவசம் அணியுங்கள்.
- அறைகள், அரங்குகள், லிஃப்ட் மற்றும் வாகனங்களில் அதிக அளவில் கூடுவதைத் தவிருங்கள்.
- எப்போதும் உங்கள் கைகளை சவர் க்காரமிட்டு கழுவுங்கள்.
- 2 மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்றுங்கள்.

உங்களுக்கு நாட்பட்ட நோய்கள் இருந்தால், வேலையைத் தவிர, வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவோர் தொழிலுக்கான அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்- திலும் அமுனுகம

(கொழும்பு)

எதிர் வரும் திங்கட்கிழமை முதல் பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்துவோர் தங் களின் தொழிலுக்கான அடையாள அட்டையை வைத்திருக்க வேண் டும் என அரசாங்கம் வலியுறுத் தியுள்ளது. பொதுப்போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவை யில் ஈடுபடுவோர் பயன்படுத்து கின்றனரா? என்பது தொடர்பில் திடீர் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக் கப்படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமு னுகம தெரிவித்தர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முறையற்ற வகையில் பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படு த்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளை திடீர் சோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழ ங்கப்பட்டுள்ளது. பொதுப்போக்கு வரத்து சேவையை இடைநிறுத்தும் அளவிற்கு வைரஸ் தாக்கம் காணப்படுகிறது.

அரச உத்தியோகத்தர்கள் பணி க்கு அழைக்கப்பட்டுள்ளதால், அவர் களின் போக்குவரத்து வசதி கருதி மாத்திரமே தொடர்ந்தும் சேவைகள் முன்னெடுக் கப்படுகின்றன என குறிப்பிட்டார். (நி-8)





விடுதலைப் புலிகள் அமைப்பில் செயற்பட்டு யுத்தம் முடிந்தபின் அரசாங்கத்திடம் சரணடைந்து நீண்டகாலமாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட 15 முன்னாள் போராளிகளுக்கு நேற்றையதினம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொரோனாத் தடுப்பு செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கலந்து கொண்டு உதவித்திட்ட நிதியினை வழங்கி வைத்தார். தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் வாமதேவா தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் யாழ்.மா[illegible] யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்.மாவட்ட இராணுவ படைப்பிரிவுகளின் தளப[illegible] (படங்கள்:- சிவசாந்தன்,ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் முறையாக ஆஸி அணிக்கெதிராக இருபது-20 தொடரை வென்றது பங்களாதேஷ்



அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்கெதிராக பங்களாதேஷ் அணி முதல் முறையாக இருபது-20 தொடரொன்றை வென்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமதுல்லா 52 ஓட்டங்களையும் சகிப் அல் ஹசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில், நாதன் எலீஸ் 3 விக்கெட்டுகளையும் ஹசில்வுட் மற்றும் ஸெம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 128 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 117 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 3-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள பங்களாதேஷ் அணி தொடரையும் வென்றுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலிய அணிக்கெதிராக இருபது-20 தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும்.

அத்துடன் தொடர்ச்சியாக அவுஸ்திரேலிய அணிக்கெதிராக மூன்று போட்டிகளில் வெற்றி பெறுவதும் இதுவே முதல் முறை.

இதன்போது அவுஸ்திரேலிய அணி சார்பில், மிட்செல் மார்ஷ் 51 ஓட்டங்களையும் பென் மெக்டர்மோட் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், சொரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் நசும் அஹமட் மற்றும் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 53 பந்துகளில் 4 பவுண்ரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மொஹமதுல்லா தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# பார்சிலோனாவிலிருந்து மெஸ்ஸி விலகல்




லியோனல் மெஸ்ஸி, ஸ்பெயினின் முன்னணி கால்பந்து கழக அணியான பார்சிலோனாவிலிருந்து உத்தியோக பூர்வமாக விலகியுள்ளார்.

இதனை உறுதி செய்துள்ள பார்சிலோனா கழக நிர்வாகம், இது தொடர்பாக அறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளது.

இதனால், மெஸ்ஸி இனி எந்தக் கழகத்தில் வேண்டுமானாலும் இணைந்து விளையாடலாம். 34 வயதான ஆர்ஜென்டீனாவின் மெஸ்ஸி, பார்சிலோனாவிலிருந்து விலகியுள்ளமை அந்த அணியின் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ள போதிலும் அவர் அடுத்து எந்தக் கழக அணியுடன் இணைவார் என்ற எதிர்பார்ப்பும் மெஸ்ஸி ரசிகர்கள் மத்தியில் எகிறியுள்ளது. (4-6)

# டோனியின் டுவிட்டர் பக்கத்தின் புளூ டிக் நீக்கம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான எம்.எஸ். டோனி சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரை பற்றி ஏதாவது ஒரு செய்தி இணையத்தளத்தில் வைரலாகி வருகிறது.

சில தினங்களுக்கு முன்பு அவரது ஹெயார் ஸ்டைல் இணையத்தளத்தில் வைரலாகியது.

அந்த ஹெயார் ஸ்டைலில் இருந்த போட்டாவை அவரது ரசிகர்கள் பேஸ்புக், வட்ஸ் அப்பில் அதிகமாக ஷேர் செய்தனர்.

இந்நிலையில் தற்போது அவரைப் பற்றிய ஒரு செய்தி பெரிதும் வைரலாகி வருகிறது.

எம்.எஸ்.டோனியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் புளூ டிக்கை நீக்கியது தற்போது இணையத்தளத்தில் வைரலாகி வருகிறது.

நீண்ட நாட்களாக டுவீட் செய்யப்படாததால் டோனியின் டுவிட்டர் பக்கத்திற்கான புளூ டிக் நீக்கப்பட்டுள்ளது.

புளூ டிக்கை நீக்கியது ஏன்? என அவரது ரசிகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஜனவரி 8ஆம் திகதிக்கு பிறகு டோனி தனது டுவிட்டர் பக்கத்தில் எந்தப் பதிவும் போடவில்லை.

தனது ஓய்வு முடிவைக் கூட டுவிட்டரில் தெரிவிக்காமல், இன்ஸ்டாகிராமில் தெரிவித்தார்.

டுவிட்டரில் டோனியை பலர் ட்ரோல் செய்ததால், டுவிட்டரில் இருந்து விலகியிருப்பதாகக் கூறப்படுகிறது. (4-6)

# அங்கீகாரத்தை இழந்த இரு பயிற்சியாளர்கள்

டோக்கியோவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து தடகள வீரரை வெளியேற கட்டாயப்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் இரண்டு பெலருஸ் பயிற்சியாளர்கள் ஒலிம்பிக் அங்கீகாரத்தை இழந்துள்ளனர்.

ஆர்தூர் ஷிமாக் மற்றும் யூரி மைசெவிச் ஆகியோரே இவ்வாறு ஒலிம்பிக் அங்கீகாரத்தை இழந்துள்ளதுடன், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அவர்கள் ஒலிம்பிக்கிராமத்தை விட்டு வெளியேறியதையும் உறுதிப்படுத்தியது.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தேசிய பயிற்சியாளர் ஊழியர்களின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து தனது அணியின் விருப்பத்திற்கு மாறாக விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட 24 வயதான கிரிஸ்டினா சிமானுஸ்காயா ஞாயிற்றுக்கிழமை டோக்கியோவிலிருந்து வெளியேற மறுத்துவிட்டார்.

பெலருஸ்'க்குத் திரும்பினால் தன் பாதுகாப்பு குறித்து அஞ்சுவதாக அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

இச் சம்பவம் உலகளாவிய கவனத்தை ஈர்த்தது.

பின்னர் அவருக்கு போலந்தினால் மனிதாபிமான விசா வழங்கப்பட்டதுடன், தற்சமயம் அவர் போலந்தில் இருக்கிறார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முடக்கப்படாவிட்டால் சுகாதாரத்துறை செயலிழக்கும் அபாயம்!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் முடக்க நிலை அமுல் செய்யப்படாவிட்டால் அடுத்த இரண்டு வாரங்களில் நாட்டில் சுகாதாரத்துறை முற்றாக செயலிழந்து போகும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கையில் 98 கொரோனா மரணங்கள் அறிவிக்கப்பட்டன. அத்துடன், கொழும்பில் டெல்டா உரு திரிபு வைரஸ் மிக விரைவாகப் பதிவாகி வரும் நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொவிட் 19 தொற்று நோயாளர் தொகை முன்னெப்போதும் இல்லாதவாறு வேகமாக அதிகரித்து வருகிறது. தொற்று நோயாளர் தொகை இதே போக்கில் அதிகரித்தால் மருத்துவமனைகள் அவற்றின் பாரமரிப்பு திறன்களை முற்றாக இழந்துவிடும் என பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இப்போது நாட்டின் நிலைமை மிகவும் ஆபத்தானது. அத்துடன், சோகமானது.

நிலைமை மேலும் மோசமடையலாம் என நாங்கள் ஒரு மாதத்திற்கு முன்பே எச்சரித்தோம்.

ஆனால் பொதுமக்களோ அல்லது சுகாதார அதிகாரிகளோ எங்கள் எச்சரிக்கையைக் கண்டு கொள்ளவில்லை.

காரணம் எதுவாக இருந்தாலும் தொற்று நோயாளர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவது கவலைக்குரியது. கடந்த சில நாட்களாக தினசரி தொற்று நோயாளர் தொகை 2 ஆயிரத்து 500 இற்கும் மேல் அதிகரித்துள்ளதால் சமாளிக்க முடியாமல் சுகாதாரத் துறையினர் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் தினசரி தொற்று நோயாளர்கள் 3 ஆயிரத்து 500 வரை உயருமானால் சுகாதார சேவைகள் சீர்குலைய ஆரம்பிக்கும். இதனால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் உபுல் ரோஹண எச்சரித்தார். (நி-8)

## அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் வெளியேறுங்கள்

(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை தொடர்பில் மிக அவதானத்துடனும் பொறுப்புடனும் பொது மக்கள் செயற்பட வேண் டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வீடுகளில் இருந்து வெளியேறுமாறும் பொருத்தமான முகக்கவசங்களை அணிந்து செல்லுமாறும் அவர் வலியுறுத்தினார்.

அனைத்து வகையான முகக்கவசங்களும் இக்காலத்திற்கு பொருந்தாது என வைத்தியர்களும் விசேட நிபுணர்களும் கூறுகின்றனர்.

கொவிட் நோயாளர்களில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன், மிக வேகமாக பரவக்கூடிய பிறழ்வு நாட்டிலுள்ளது என்பதை பொது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அனைவரையும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு மிக விநயமாக கேட்டுக்கொள்கின்றோம். தடுப்பூசியை செலுத்திக்கொள்ளவில்லையென்றால் சில இடங்களுக்குச் செல்வதற்கு உங்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம்.

நாட்டில் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், சில இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை பரிசீலிப்பதற்கான சந்தர்ப்பம் எதிர்காலத்தில் உருவாகக்கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## மருத்துவமனைகளில் குறையும் நெருக்கடி-சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கொரோனா நோயாளர்களின் அதிகரிப்பினால் வைத்தியசாலைகளில் ஏற்பட்ட நெரிசல் தற்போது படிப்படியாக குறைவடைந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வீடுகளில் சிகிச்சையளிக்கும் முறைமை, அவசர நிலைமைகளின் போது மருத்துவமனை அதிகாரிகள் விரைந்து செயலாற்றுகின்றமை உள்ளிட்ட காரணங்களால் வைத்தியசாலைகளில் நெரிசல் குறைவடைந்து வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதனிடையே, தகனம் செய்யும் இடங்களில் ஏற்படக்கூடிய நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து பிரிவுகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார். (நி-8)

## சிவப்பு எச்சரிக்கையை நோக்கி நகரும் நாடு மாத இறுதியில் மோசமான விளைவுகள்

### சுகாதார வைத்திய நிபுணர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மீண்டும் கொவிட் வைரஸ் தொற்றுப்பரவல் அதிகரிக்க டெல்டா வைரஸின் வேகமான பரவலே காரணம் எனவும், நாடு சிவப்பு எச்சரிக்கையை நோக்கி நகர்வதாகவும் சுகாதார வைத்திய நிபுணர்கள் நேற்று முன்தினம் கொவிட் செயலணிக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்தையேனும் முடக்கி மக்கள் நடமாட்டத்தை நிறுத்தாவிட்டால் இந்த மாத இறுதியில் மிக மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (நி-8)

## ஆசிரியர்கள் மீது கைவைக்கமாட்டோம்

### சரத் வீரசேகர

(கொழும்பு)

ஆசிரியர்கள் மீதும் கைவைத்ததில்லை என்றும் இனி மேலும் கை வைக்கப் போவதில்லை என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குடிவரவு- குடியகல்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சி காலத்தில் நீர் தாரைப் பிரயோகம், கண்ணீர் புகைத்தாக்குதல், தடியடிப் பிரயோகம் என்பன நடத்தப்பட்டன.

ஆனால் நாங்கள் ஒரு ஆசிரியர் மீதும் கைவைத்ததில்லை. கை வைக்கப் போவதும் இல்லை. ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய எங்களை தாக்கினாலும் பொறுமையாக இருக்குமாறே பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திரு.

**மாணிக்கம் சண்முகராஜா**

(வில்லூன்றிகடு இராஜன், இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம் 24.05.1955 மறைவு 08.08.2015

திதி: 08.08.2021

உலக வாழ்வு நிலையில்லாதது என்பதை யாமறிவோம்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

(7578)

82/7, 3ஆம் ஒழுங்கை, மருத்துவதுறை வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனப் பேரணி போராட்டத்திற்கு கிராமிய உழைப்பாளர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

**அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க வலியுறுத்தியும் கொத்தலாவல சட்டமூலத்தை நீக்கக் கோரியும் நாளை திங்கட்கிழமை யாழில் மாபெரும் வாகனப் பேரணிப் போராட்டம் நடத்துவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

அந்தவகையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் நாடுபூராகவும் முன்னெடுத்து வரும் நியாயபூர்வமான போராட்டத்தின் தொடர்ச்சியாக மேற்படி போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்போராட்டத்தை வரவேற்பதுடன் அதற்கு பூரண ஆதரவை வழங்குவதாக கிராமிய உழைப்பாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் வலையமைப்பாக இயங்கும் ஏனைய அமைப்புக்களான தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், பூநகரி மாவட்ட பெண்கள் அமைப்பு, மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு, மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களும் கூட்டாக இணைந்து ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளது. (4-7)

# 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுங்கள்

## யாழில் இராணுவத் தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 30 வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுங்கள்என இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற் பட்டோர் கட்டாயமாக இந்த தடுப்பூசியினை போடுங்கள். ஏனெனில் உங்களது உயிரைப் பாதுகாப்பதற்கு இது ஒரு முக்கியமான விடயமாகும்.

அதே போல் யாழ்ப்பாணத்தில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இந்த தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் இந்த நோய்க்கு இந்த தடுப்பூசியை பெற்றுக் கொள் வதன் மூலமே இறப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

இலங்கை மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் இந்த தடுப்பூசி ஒன்றுதான் இந்த நோய்க்கு மருந்தாக காணப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (4-7-33)

# மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் தடுப்பூசி செலுத்தும் பணி தடைப்பட்டது



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தடுப்பூசி செலுத்தும் பணிகள் சில மணி நேரம் தடைப்பட்டன.




ஒவ்வாமை உடையவர்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அனுமதி பெற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தடுப்பூசி பெற்றனர்.

இந் நிலையில் தடுப்பூசி பெறவந்த பொதுமக்கள் சமூக இடைவெளி ஏதுமின்றி தடுப்பூசி பெற முண்டியடித்ததால் வைத்தியசாலை நிர்வாகம் சில மணி நேரம் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை நிறுத்தி வைத்தது.(4-7-30)

# வழிப்பறிக் கொள்ளையர்கள் இருவர் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த 3 மாத காலமாக வழிப்பறியில் ஈடுபட்டு வந்த இருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவரின் தொலைபேசி, 50 ஆயிரம்ரூபாய்பணம்கைப்பை மேலும் பல ஆவணங்களை திருடிச் சென்றமை, யாழில் உள்ள பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஒருவரின் கைத்தொலைபேசியினை திருடிச் சென்றமை, சுன்னாகப் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் கைப்பை, இரண்டு தொலைபேசி மற்றும் முப்பதாயிரம் பணம் கொள்ளையடித்தமை மற்றும் மானிப்பாயில் நபர் ஒருவரின் ,கைப்பை திருடிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும்கைப்பைமற்றும்ஏனைய ஆவணங்கள் மீட்கப்பட்டன.

குறித்த நபர்கள் தாம் போதைப்பொருட்களுக்கு அடிமையான காரணத்தால் வழிப்பறியில் ஈடுபட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்தனர்.கைது செய்யப்பட்ட இருவரும் சாவகச்சேரி பகுதியை சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். ஏனைய இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தொடர்பு கொள்வதன் மூலம் தமக்குரிய பொருட்களை மீட்க முடியும் எனவும்தெரிவித்தனர். (4-7-33)

# சைவமகாசபையினரால் மரநடுகைத் திட்டம்

(குப்பிழான்)

பசுமை தாய்மண் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் பருவ காலத்தில் அகில இலங்கை சைவமகா சபை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மரங்களை நாட்டிசிவ தொண்டர்களின் பங்களிப்புடன் பராமரித்து வருகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் கார்த்திகை மாதம் வரையிலுள்ள நாட்களில் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பைகளில் 5 அடி உயரத்திற்கு வில்வம், வேம்பு, இலுப்பை, புங்கை, மருது, ஆல், நாவல் போன்ற மரங்களை வளர்த்துத் தந்து மேற்படி திட்டத்திற்கு ஒத்துழைக்க முன்வருமாறு சிவ தொண்டர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்களிடம் அகில இலங்கை சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்தியகலாநிதி பரந்த குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4-6-18)

# 2 ஆவது கட்ட தடுப்பூசி செலுத்துமிடம் மாற்றம்

(குப்பிழான்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த மாதம் 5 ஆம் திகதி கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொண்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாம்கட்டத்தடுப்பூசி நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பாஷையூர் சென். அன்ரனிஸ் தேவாலய திருமண மண்டபத்தில் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-18)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம், தென்மராட்சி, மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சி, நெல்லிக்கிணத்தடி தான்தோன்றி கந்தசுவாமிதேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெ. தில்லையம்பல குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை அழித்தால்

# தராதரம் பாராது சட்ட நடவடிக்கை

## சுற்றாடல் அமைச்சர் அமரவீர

(கொழும்பு)

**நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும் என்பதுடன், காடழித்தல், மணல் கொள்ளையென இயற்கையை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கையெடுக்கப்படுமென சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில், இயற்கை வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பதிலளிக்கையில்,

சுற்றாடலை பாதுகாக்க ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். கடந்த காலத்தில் காடழித்தல் மற்றும் மணல் அகழ்த்தல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியா திருந்தமையை ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், தற்போது அந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளோம்.

அரசியல் கட்சிகள், அரசியல் அதிகாரம் மற்றும் ஏனைய தராதரங்களைப் பாராது இந் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் அதிகாரம் எமக்கு கிடைக்கப்பெற்றதால் இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளோம்.

பலருக்கு தண்டனைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். மணல் அகழும் செயற்பாடுகளும் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதுடன், நாட்டின் இயற்கை மற்றும் இயற்கை வளத்தைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# அதிபர்- ஆசிரியர்களின் ஆர்ப்பாட்ட பேரணி நிறுத்தம்



(கொழும்பு)

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

கொரோனாத் தொற்றின் நிலைமையைக் கருத்திற் கொண்டு வைத்தியர்கள் ஆலோசனை மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கண்டி முதல் கொழும்பு வரை முன்னெடுக்கப்பட்டு வந்த ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கங்களின் ஆர்ப்பாட்டப் பேரணி பஸ்யாலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் வெளிப்புறப் போராட்டங்கள் நிறுத்தப் பட்டதுடன் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகும் முடிவு தொடரும் என்றும் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் அறிவித்தனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 12 செவ் 11 சூரி 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்ப்பவர்<br>தொ.இ: B/2800 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: செவ். சூரி 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ:G/6604 |
| பிறப்பு: 1983 இந்து.<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 62 ¾ செவ் 8 சூரி 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:NCTதொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், தீவகம் வடமராட்சி வேண்டாம்<br>தொ.இ: B/2801 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 13 ½ செவ் 10 சூரி 11 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc பட்டதாரி, பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் மட்டும்<br>தொ.இ:G/6606 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 30 ¼ செவ் 2 சூரி 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/2803 | பிறப்பு: 1984 இந்து.<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 10 சூரி 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் (லண்டன்,அவுஸ்திரேலியா மட்டும்)<br>தொ.இ:G/6619 |
| பிறப்பு: 1967 இந்து.<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 12 ¾ செவ் 10 சூரி 3 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: BSMS,MSC, ஆயுர்வேத வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: சைவ, அசைவ போசனம் ஏற்கப்படும்.<br>தொ.இ: B/2820 | பிறப்பு: 1982 இந்து.<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 8 சூரி 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.A, Development Officer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம். (லண்டன்,கனடா)<br>தொ.இ:G/6658 |

கல்யாணமாலை
இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் ஜெல்லைதொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# சுகாதார விதிமுறைகளை பேணாத வர்த்தக நிலையங்களுக்கு சீல்

(மஸ்கெலியா)

சுகாதார விதிமுறைகளைப் பேணாது மஸ்கெலியா நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட ஐந்து வர்த்தக நிலையங்கள் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன.

மஸ்கெலியா பொதுச் சுகாதார அதிகாரிகளினால் நேற்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே ஐந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மஸ்கெலியா பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பகுதியில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கடந்த ஒருவாரப்பகுதியில் மூன்று கொரோனாத் தொற்று மரணம் இடம் பெற்றுள்ளது. இதனையடுத்து நகரில் பொதுச் சுகாதார அதிகாரிகளினால் சகல வர்த்தக நிலையங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் சுகாதார விதிமுறையைப் பேணாத வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுத்தனர். (நி-8)


# விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் இலங்கையிலும் அவரவர் கல்வித் தகைமைக்கேற்ப மணமகன், மணமகள் தாராளமாக எம்மிடம் உள்ளனர்.
+9476324 6309, VIBER + 1437244673, Viber, whatsapp , imo+94763490083 mobile srilanka+946209298 ஜேர்மனி.

**இலங்கையில் மணமகள் தேவை**

01. வயது 37 USA cityzen பட்டதாரி அவிட்டம் லக்கினத்தில் செவ்வாய்.
02. வயது 35 கனடா சிற்றிசன் செவ்வாய் 08 இல் சுயதொழில் விசாகம்.
03. வயது 35 கனடா சுயதொழில், மூலம் 15 பாவம்
04. வயது 32 கனடா அச்சுவினி 15 பாவம்
05. வயது 37 கனடா மகம், தாரம் இழந்தவர்
06. வயது 31 நியூசிலாந்து இஞ்சினியர், உத்திரட்டாதி , பாவம் 07
07. வயது 30 கனடா இஞ்சினியர் செவ்வாய் லக்கினத்தில்

**வெளிநாட்டில் மணமகன் தேவை**

01. வயது 29 சதயம் சூரி+ செவ் 07 இல் பட்டதாரி கி.பாவம் 62
02. வயது 26 கேட்டை செவ் 12 இல் 27 பாவம்
03. வயது 33 ஆயிலியம் கி. பாவம் 36 E.i.m.a.
04. வயது 26 சதயம் கி.பாவம் 20 சூரி+ செவ் 2 இல்
05. வயது 27 உத்திராடம் சூரி+ செவ் 5 இல் பாவம் 27
06. வயது 27 பூராடம் சூரி+ செவ் 11 இல் 36 கி. பாவம்
07. வயது 26 RC வேதம் கனடா பட்டதாரி இலங்கையில் மணமகன் வேண்டும்.
08. வயது 42 அனுசம் செவ்வாய் 07 இல் கிரகபாவம் 95 பட்டதாரி

(759)

+94 763 246 309 Viber , +14 372 446 737
Viber , whatsapp ,imo +94763490083 mobile srilanka


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளின் பிரேத அறைகளில் அதிகரிக்கும் இட நெருக்கடி

(கொழும்பு)

**இலங்கையில் கொவிட் மரணங்கள் சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் மருத்துவமனைகளின் பிரேத அறைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

தகனம் செய்யும் நடவடிக்கைகள் தகனசாலைகளில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவ்வாறு சரீரங்கள் அதிகளவில் வைத்தியசாலைகளில் தேங்கியுள்ளதாக வைத்திய சாலை தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கொவிட் மரணங்கள் தவிர்ந்த, ஏனைய காரணிகளில் மரணமானவர்களின் உடலங்களும் தகனம் செய்யப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மாத்திரம் நாளாந்தம் 12 முதல் 15 கொவிட் மரணங்கள் நிகழ்வதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-8)

# 500 இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

500 இலங்கை தொழிலாளர்களுக்கு இஸ்ரேலில் வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக கைத்தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிரி எழுப்பிய வாய்மொழி கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலை வாய்ப்புகள் குறித்து பத்திரிகைகளில் விளம்பரமொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், தகுதியான தொழிலாளர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, கொரிய அரசாங்கம் இலங்கைக்கு 4,500 வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளது. தற்போதைய கொவிட் தொற்று நோய் காரணமாக, கொரிய அரசாங்கம் வெளிநாட்டவர்கள் வருகைக்கு முற்றாக தடை விதித்துள்ளதால் தற்போது அந்நாட்டில் வெளிநாட்டவர்களை வரவழைப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த தடை நீக்கப்பட்டதும் இலங்கை தொழிலாளர்களை கொரியாவுக்கு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்ப முடியும் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரி-8)

# தடுப்பூசி செலுத்தாதவர்களைத் தேடி பொலிஸார் வலை வீச்சு

(கொழும்பு)

கொவிட் தடுப்பூசியின் ஒரு டோஸை கூட இதுவரையில் செலுத்திக் கொள்ளாத கொழும்பு நகரத்தில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்டவர்களைத் தேடி விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று முதல் சுகததாச விளையாட்டரங்கிற்கு குறித்த நபர்களை அழைத்து வந்து தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். (ரி-8)

# நகரம் அழகாகும் போது மக்கள் இருக்க மாட்டார்கள்

## அபிவிருத்திக்கான நிதியை உயிரைப் பாதுகாக்க ஒதுக்குங்கள் என்கிறார் முஜிபுர்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்று கொண்டிருக்கின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் எந்த வேலைத் திட்டமும் இல்லை. அதனால் நகர அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை மக்களின் உயிரைப் பாதுகாக்க ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இல்லாவிட்டால் நகரம் அழகாகும்போது அதனை அனுபவிக்க மக்கள் இருக்க மாட்டார்கள். மாறாக சவக்குழிகளே இருக்கும் எனவும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் குடி வருவோர் குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

முதலாவது அலை ஏற்பட்ட போது கொரோனாவை கட்டுப்படுத்த செயற்பட்ட சுகாதார பிரிவில் சிறந்த வைத்தியர்கள் இருந்தார்கள்.

அதனால்தான் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் அதற்கு பின்னர் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் இருந்த அனைத்து வைத்தியர்களும் அரசியல் நோக்கத்துக்காக அங்கிருந்து நீக்கப்பட்டனர்.

அதன் காரணமாகத்தான் தற்போது கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது. இந்த நிலைமைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

அதனால் அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால்



இன்று கொரோனாத் தொற்றினால் நாளொன்றுக்கு 80 இற்கும் அதிகமானவர்கள் மரணிக்கின்றனர்.

எனவே நகர அபிவிருத்திக்காக ஒதுக்கும் நிதியை மக்களின் உயிரைப் பாதுகாக்க ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இல்லாவிட்டால் நகரம் அழகாகும் போது அதனை அனுபவிக்க மக்கள் இல்லாது சவக்குழிகளே இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-8)


# ஜெனிவா நெருக்கடிக்கு உள்ளாக வேண்டாம்

(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், பல்கலைக்கழக மாணவர்கள் சுதந்திர கல்வியை பாதுகாப்பதற்காகவும் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறை ஊடாக முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

சிவில் உடையில் பொலிஸாரை அனுப்பி மாணவர்களை கைது செய்யும் வெள்ளை வான் கலாசாரத்தை மீண்டும் ஆரம்பித்து செப்டெம்பரில் பாரதூரமான ஜெனிவா நெருக்கடிக்கு முகங்கொடுக்க தயாராக வேண்டாம் என்று அரசாங்கத்தை எச்சரிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (ரி-8)

# மேலும் 8 பொருட்களுக்குத் தடை



(கொழும்பு)

சுற்றுச்சூழலுக்கு தீங்கை ஏற்படுத்தும் மேலும் 8 பொருட்களை தடை செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுற்றாடல்துறை அமைச்சு ஆலோசனைக் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டு, கோப்பைகள், கரண்டிகள் உட்பட மேலும் 8 பொருட்களே தடை செய்யப்படவுள்ளன.

உணவைப் பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களை (lunch sheets) தடை செய்யும் சட்டம் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் இங்கு வலியுறுத்தினார்.

இது தொடர்பான சுற்றிவளைப்புக்களை அதிகரிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ரி-8)

# பூஜித, ஹேமசிறிக்கு எதிராக குற்றப் பகிர்வுப் பத்திரம்

## கையளிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான குற்றப் பகிர்வுப் பத்திரத்தை கையளிக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதன்போது பூஜித ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகிய இருவரும் மன்றில் ஆஜராகியிருந்த நிலையில் அவர்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அந்நடவடிக்கைகளுக்காக குறித்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ரி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

08.08.2021
ஆடி 23, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை முன்னிரவு 7.51 மணிவரை
பூசம் முற்பகல் 10.28 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தராடம்
ஆடி அமாவாசை விரதம்

வளவன்

**மேஷம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மற்ற வர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**ரிஷபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்பட லாம்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் உதவிகள் கிடை க்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப் படையலாம், சிந்தித்து செயற்பட வேண் டிய நாள், மனச் சஞ்சலங்கள் சற்று அதி கரிக்கும் நாள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**கன்னி:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய் வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன் பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனு கூலமுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடை க்கும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடி யெடுத்து வைப்பீர்கள், போசன சுக முண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிர யாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களில் சுணக்கம் ஏற்ப டலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ள லாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தி னரிடையே அந்நியோன்னியம் அதிகரிக் கும்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு பவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாழ்க் கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மீனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

துன்பங்கள் நடுவிலே தங்கம் போல் மிளிர்.

# மன்னாரில் நாளை முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜுலை மாதம் சினோ பார்ம் முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு நாளை திங்கட்கிழமை 2 ஆவது தடுப்பூசியினை வழ ங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

மன்னார் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கு நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை மன்னார் புனித சவே ரியார் பெண்கள் தேசிய பாட சாலை மற்றும்.பேசாலை சென்.மேரிஸ் கல்லூரி ஆகிய வற்றிலும், அன்றைய தினம் மாலை 2 மணி முதல் 4.30 மணிவரை எருக்கலம்பிட்டி பிரதேச வைத்தியசாலை, மற்றும் தலைமன்னார் றோமன் கத்தோலிக்க பாட சாலை ஆகியவற்றில் சினோ பார்ம் கொரோனா தடுப்பூசி யின் 2வது தடுப்பூசி வழங் கப்படும். மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் சினோ பார்ம் கொரோனா தடுப்பூசி யின் 2 ஆவது தடுப்பூசி வழ ங்கப்படும்.

அன்றைய தினம் முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் காலை 8 மணி முதல் சினோபார்ம் கொரோனா தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி வழங்கப் படும்.நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை மடு ஆல யத்திற்கு அருகில் உள்ள வைத்தியசாலையில் காலை 8 மணி முதல் சினோபார்ம் கொரோனா தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி வழங்கப்ப டும்.

மேலும் இரணையிலுப் பைக் குளம் ஆரம்ப சுகாதார வைத் தியசாலையிலும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் சினோபார்ம் கொரோனா தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி வழங்கப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-285)

# அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க போராட்டத்திற்கு இன,மத பேதமின்றி ஒன்றிணையுங்கள்

(அக்கராயன்)

நாட்டில் தற்போது இடம் பெற்று வரும் அதிபர், ஆசி ரியர் தொழிற்சங்கபோராட் டத்திற்கு இன,மத,பேதமின்றி அனைவரும் ஒன்றிணை ந்து வலுச்சேர்க்குமாறு கிளி நொச்சி மாவட்ட அதிபர் சங் கம் மற்றும் இலங்கை ஆசி ரியர் சங்க கிளிநொச்சி கிளை என்பன கூட்டாக அறிவித்து ள்ளன.

குறித்த அறிவிப்பு தொடர் பான ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கிளிநொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்றது. குறித்த ஊடக சந்திப்பில் கல ந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தலை வர் சவரி பூலோகராஜா தெரி விக்கையில் கிளிநொச்சி மாவட்ட த்திலிருந்து போராட் டத்திற்கு வலுச்சேர்க்க எண் ணியுள்ளோம் கொரோனா நிலைமையில் பாடசாலை கள் மூடப்பட்டநிலையில் மாணவர்களின் கல்வி இழக் கக்கூடாது என்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட பாட சாலைகளைச் சேர்ந்த அதி பர்கள் ஆசிரியர்கள் பயன்படுத்தி மாண வர்களுக்கு Zoom,மற்றும் செயலட்டை ஊடாக கற் றலை மேற்கொண்டிருந் தோம் .

சம்பள முரண்பாடு தீர்க் கும் வரை அனைவரும் குறி த்த கற்றல்செயற்பாடுகளிலி ருந்து விலகியுள்ளோம் பெற் றோர்கள் எங்களோடு முரண் பாடாதீர்கள் எமது போராட்டம் தீர்வு பெற ஒத்துழைப்பு வழ ங்குங்கள் மாணவர்கள் இழ ந்த கல்வியை மீள வழங்கு வோம்.

நாளை திங்கட்கிழமை அமைச்சரவைக்கூட்டத்தில் எமக்கான சாதகமான முடிவு கிடைக்காதுவிடின் அடுத்த வாரமளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய கவனயீ ர்ப்பு போராட்டத்தை முன்னெ டுக்கவுள்ளோம் அதற்கு இன,மத, பேதமின்றி அனை வரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ந்து இலங்கை ஆசி ரியர் சங்கத்தின் கிளிநொச்சி கிளை செயலாளர் கருத்து தெரிவிக்கையில் நீண்டகால மாக அதிபர்,ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர் சங்கம் முன்னெடுக்கும் போராட் டத்தை காலத்திற்கு காலம் வருகின்ற அரசுகளும் தீர்க்க தவறுகின்றன.

இந்த அரசாங்கத்தின் கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சுபோதினி ஆணைக் குழுவை அமைத்து குறித்த ஆணைக்குழு ஊடாக அறி க்கை பெற்றும் அந்த அறிக் கையை இன்னும்நடைமுறை ப்படுத்தவில்லை அதனை நடைமுறைப்படுத் தவே போராடுகின்றோம் எனத் தெரிவித்தார். (7-4-350)



தாயகவிருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஒழு ங்கமைப்பில் லண்டனில் வசித்து வரும் ஜெயந்தன். காயத்திரி குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் மல் லாவி ஒட்டறுத்த குளம் கிராமத்தில் வசித்து வரும் யோகபுரம் மகா வித்தி யாலயத்தில் கல்விகற்கும் மாணவி ஒருவரின் கற் றல் செயற்பாட்டிற்காக துவிச்சக்கரவண்டி வழ ங்கி வைக்கப்பட்டது.

(படம்- தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நுகர்வுக்கு தகுதியற்ற 2000 கிலோ இறைச்சி எரித்தழிப்பு

(நெளுக்குளம்)

**போதுமானளவு குளிர்பதன் வெப்பநிலை இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட 2000 கிலோகிராம் கோழி இறைச்சி நேற்று எரித்தழிக்கப்பட்டதாக வவுனியா தெற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.**



வடபகுதியில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சி ஏற்றிய வாகனத்தினை வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் சோதனைக்குட்படுத்திய வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து அவற்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த இறைச்சி பாவனைக்கு உதவாது என நீதிமன்றத்தினால் உறுதிபடுத்தப்பட்டதனையடுத்து சுகாதார பரிசோதகர்களால் வவுனியா பாவற்குளம் மக்கள் குடிமனைகள் இல்லாத பகுதியில் உள்ள பொது இடத்தில் கோழி இறைச்சி தீ வைத்து எரித்தழிக்கப்பட்டது. (7-4-299)

# வவுனியா பல்கலைகழகத்தின் ஆரம்பநிகழ்வுகள் பிற்போடப்பட்டது


(நெளுக்குளம்)

வவுனியா பல்கலைகழகத்தின் ஆரம்ப நிகழ்வுகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் தனியான பல்கலைகழகமாக அண்மையில் தரமுயர்த்தப்பட்டது.

இந் நிலையில் அதன் ஆரம்பவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ள விருந்தார்.

ஆயினும் கொரோனா பரவல் காரணமாக அரச நிகழ்வுகள் அனைத்தும் இடை நிறுத்தப் பட்டுள்ளமையால். குறித்த நிகழ்வு மறு அறிவித்தல் வரை. பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (7-4-299)

# எகிறியது காய்கறி விலை



(தர்மபுரம்)

இன்றைய தினம் ஆடி அமாவாசை விரதம் கடைப்பிடிக்கபடுவதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து காய்கறி சந்தைகளிலும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

அந்த வகையில் ஒரு கிலோ கத்தரிக்காய் விலை 300,பயற்றங்காய் 400, பாகற்காய் 400, முருங்கை 400 என உள்ளூர் மரக்கறிவகைகள் அதிகரித்துள்ளதால் நுகர்வோர் காய்கறிகள் கொள்வனவு செய்வதிலும் பல சிரமங்களும் அசௌகரியங்கள் ஏற்பட்டதாக தெரிவித்தனர். (7-4-316)

# உவர் நீர் தடுப்பணை அமையுங்கள் கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு சாலை ஆற்றிற்கு குறுக்கே உவர்நீர் தடுப்பணை ஏற்படுத்துமாறு மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் இரணைப்பாலை, ஆனந்தபுரம் ஆகிய கிராமங்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக உவர்ப் பரம்பலினால் நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறி வருகின்றன. சாலை வழியாக பரவும் உவர் நீர் மேற்படி கிராமங்களை உவர் நிலங்களாக மாற்றி வருவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

சாலை வழியாக பரவும் உவர் நீர் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்பு நகர் வரை பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. தற்போது இப்பகுதி கிணறுகள் உவர் நீராக மாறுகின்றன. நிலத்தடி நீர் உவர் நீராக மாறத் தொடங்கி உள்ளது. இந்நிலையில் சாலை வழியாக மேலும் உவர் நீர் பரவாமல் இருப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (7-4-350)

# கொரோனா முடக்கல் நிலை

## பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாதிப்பு

(மன்னார்)

கொரோனா தொற்று மற்றும் முடக்கநிலை காரணமாக மன்னார் மாவட்டதில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் மீள முடியாத கடன் சுமையில் தவிப்பதாகவும் மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் அமைப்பினர் சுட்டிகாட்டியுள்ளனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற கூட்டத்திலே வளர்பிறை பெண்கள் அமைப்பின் தலைவி மேற்படி விடயத்தை சுட்டிகாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தங்களின் சுயதொழில் உற்பத்தி பொருட்களையோ மீன்களையோ சந்தைபடுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் சந்தைப்படுத்தினாலும் உரிய விலை கிடைப்பதில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புறம் இருக்க நுண்நிதி நிறுவனங்களின் கடன்களில் சிக்கியும் அவற்றை கட்ட முடியாத நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் செய்வதறியாத நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை அரசாங்கத்தின் வீட்டுதிட்ட நிதியும் பல வருடங்கள் கடந்தும் வழங்கப்படாமையினால் அதன் காரணமாக ஏற்பட்ட கடன் சுமையையும் சமாளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும்தெரிவித்தனர்.

எனவே அரசாங்கம் விரைவில் மக்களுக்கான நிவாரண உதவிகளையோ அல்லது வீட்டு திட்டங்களுக்கான மிகுதி பணத்தையோ அல்லது மாற்றுத் தொழில் வாய்ப்புக்களையோ ஏற்படுத்தி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4-285)

# விளாவோடை பகுதியில் மேற்கொண்ட அகழ்வுப் பணிகள் நிறைவு



(முறிகண்டி)

கிளிநொச்சியில் இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் அகழ்வு பணி நிறைவு செய்யப்பட்டது. கிளிநொச்சி விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் கடந்த 5 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதியை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி லெனின் குமார் பார்வையிட்டதுடன் மேலும் எச்சங்கள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், அகழ்வு பணிகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதன் அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினமும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பணியின்போது ஒரு கைக்குண்டு, தொடர்பாடல் சாதனம், இரண்டு தலைக்கவசங்கள், ரவைக்கூடுகள், உடைகள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் உணவு பொதிகள் உள்ளிட்ட பொருட்களின் எச்சங்களுடன், மனித எச்சங்களும் மீட்கப்பட்டது. இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவை மீ[illegible] பட்டுள்ள நிலையில் பணி நிறை[illegible]வுக்கு கொண்டு வரப்பட்டது.

மீட்கப்பட்டவை அனைத்தும் 25 ஆண்டுகள் பழமையானவையாக இருக்கலாம் எனவும், மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட தடைய பொருட்கள் அனைத்திலும் 97ஆம் ஆண்டுக்கு முற்பட்ட திகதியிடப்பட்ட பொருட்களாகவே காணப்பட்டுள்ள நிலையில் இரண்டும் ஒப்பீட்டளவில் ஒரே காலப்பகுதியை சேர்ந்தவையாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மீட்கப்பட்ட கைக்குண்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்க செய்யப்படவுள்ளதாகவும், அது தற்பொழுது பாதுகாப்பாக விசேட அதிரடிப்படையினரிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை அங்கு மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடைய பொருட்கள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பாரப்ப[illegible]



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபையினருக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. வவுனியா உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் நாகராஜன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றது. (படம் :- சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியை இராஜினாமா செய்யத் தயார்

## சரத் வீரசேகர சூளுரை

(கொழும்பு)

தென்னிலங்கையின் பிரபல சிங்கள நடிகைக்கு உதவிய விடயம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சூளுரைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தன்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்துவதாகவும், முடிந்தால் அதனை நிரூபிக்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையின் பிரபல்யமான சிங்கள நடிகையான பியுமி ஹன்சமாலி கொரோனா கட்டுப்பாடுகளை மீறி பிறந்தநாள் கொண்டாத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், அண்மையில் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குறித்த நடிகைக்கு உதவியதாக தகவல்கள் பரவியிருந்தன. எனினும் இந்த விடயத்தை அமைச்சர் வீரசேகர தொடர்ந்து மறுத்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் சரத் வீரசேகர தன்னுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியதோடு, இந்தக் குற்றச்சாட்டை சுமத்திய பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவிடம் முடிந்தால் இந்த விடயத்தை நிரூபிக்குமாறும் சவால் விடுத்தார். (நி-8)

# கொழும்பு துறைமுகத்தை ஆட்கொண்டது கொரோனா

## சுமார் 600 ஊழியர்களுக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பு துறைமுக அதிகார சபையில் சுமார் 600 ஊழியர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக துறைமுக வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்று முன்தினம் நிலவரப்படி, 593 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.


துறைமுகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் இந்த நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## புண்ணியத்தைச் சேர்க்கும் ஆடி அமாவாசை



### விரதம் இருப்பது எப்படி?

ஆடி அமாவாசை விரதம் இருப்பவர்கள், காலையில் எழுந்து அருகில் இருக்கும் கடல், ஆறு போன்ற நீர் நிலைகளுக்கு சென்று குளித்து விட்டு இறந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும். அதன் பிறகு முதியவர்களுக்கு அன்னதானம்வழங்க வேண்டும். அமாவாசையன்று பெண்கள் வீட்டில் காலை உணவு உண்ணாமல் இறந்த மூதாதையர்களுக்கு பிடித்தமான உணவுகளையும், பதார்த்தங்களையும் செய்ய வேண்டும். அன்றைய சமையலில் எல்லா விதமான காய்கறிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். விரதம் இருப்பவர்கள் எதுவும் சாப்பிடாமல் எத்தனை நபர்களை வணங்க வேண்டுமோ அத்தனை இலைகள் போட்டு சமைத்த உணவு, பதார்த்தங்கள், துணிகள் வைத்து அகல் விளக்கேற்றி, தூப தீபம் காட்டி முன்னோர்களை மனதில் நினைத்து வழிபட வேண்டும்.

பிறகு படைத்த உணவுகளை வீட்டிற்கு வெளியில் உயரமான இடத்தில் வைத்து காகத்துக்கு படைக்க வேண்டும். காகங்கள் உண்ட பிறகு வீட்டிற்குள் முறைப்படி பரிமாறப்பட்ட இலைகளில் உறவினர்களுடன் அமர்ந்து சாப்பிட வேண்டும். இறந்தவர்களுக்கு படைத்த துணிகளை அவர்களுக்கு பிடித்த மாணவர்கள் அணிந்து கொள்ளலாம். அமா வாசை விரதம் இருப்பவர்கள் காலை யில் சாப்பிடக்கூடாது, பகலில் சாப்பிடலாம். முறைப்படி விரதமிருந்து முன்னோர்களை வழிபடுவர்களுக்கு அவர்களின் ஆசி கிடைக்கும். முன்னோர் செய்த பாவவினைகள் நீங்கி அவர்களுக்கு முக்திபேறு கிட்டும். ஆடி அமாவாசையன்று விரதம் மேற்கொண்டால் ஆயுள் பலம் கூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் 94 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதை தெரிவித் தார்.

இதேவேளை, தனிமைப்படு த்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 453 ஆக அதிகரித்துள்ளது. (நி-8)

## கிழக்கு பல்கலைக்கழக நிர்வாக தொகுதி முடக்கம்

(மட்டக்களப்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின நிர்வாகக் கட்டடத் தொகுதி முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.(நி-8)

## 114,291 பேருக்கு ஒரு நாளில் தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 291 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் தடுப்பூசி நடவடிக்கை தொடங்கியதில் இருந்து இதுவரை முதல் டோஸ் தடுப்பூசி 10,871,332 பேருக்கும் 2,749,350 பேருக்கும் முழுமையாகவும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 240 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 170 | 180 | 170 | 200 |
| கரட் | 180 | 180 | 170 | 240 |
| பூசணி | 100 | 100 | 90 | 120 |
| புடோல் | 80 | 140 | 70 | 140 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200-250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100-110 | 120 |
| பாகற்காய் | 250 | 350 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 170 | 160 |
| பயற்றங்காய் | 100 | 260 | 250 | 200 |
| லீக்ஸ் | 200 | 280 | 240 | 280 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 200 | 150 |
| போஞ்சி | 200 | 320 | 280 | 360 |
| கத்தரிதம்புள்ள | 150 | 130 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 90 | 100 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 70-80 | 40-70 |
| இராசவள்ளி | --- | -- | --- | -- |
| வெங்காயப்பூ | 180 | 180 | 170 | 300 |
| முள்ளங்கி | 100 | 90 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 30-40 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு லடாக்கின் கோக்ராவிலிருந்து இந்திய, சீனப் படைகள் வாபஸ்

(டில்லி)

**கிழக்கு லடாக்கின் கோக்ரா பகுதியிலிருந்து இந்திய, சீனப் படைகள் வாபஸ் வாங்கியுள்ளன.**



கடந்த ஆண்டு மே மாத தொடக்கத்தில் கிழக்கு லடாக் எல்லையின் பல்வேறு முனைகளில் சீன வீரர்கள் அத்துமீறி நுழைய முயன்றனர்.

அவர்களை இந்திய வீரர்கள் தடுத்து நிறுத்தினர். கடந்த ஜூன் 15ஆம் திகதி லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய, சீன வீரர்களிடையே மிகப் பெரிய மோதல் ஏற்பட்டது. இதில் இந்திய தரப்பில் 20 வீரர்களும் சீன தரப்பில் 45 வீரர்களும் உயிரிழந்தனர்.

இதையடுத்து, ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய, சீன வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசினர். அப்போது லடாக் எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண உடன்பாடுஎட்டப்பட்டது. இதன்பின் இரு நாடுகளின் இராணுவ உயரதிகாரிகள் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தனர்.

அண்மையில் 12 ஆவது சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. இருப்பினும், கோக்ரா, ஹாட் ஸ்பிரிங் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து படைகளை திரும்பப் பெறுவதில் எந்த முடிவும் எட்டப்படாமல் இருந்தது.

12 வது சுற்று பேச்சு கடந்த புதன்கிழமை சீனாவின் எல்லைக்குட்பட்ட மோல்டோ பகுதியில் நடந்தது. ஒன்பது மணி நேரத்துக்கு மேல் நடந்த இந்தப் பேச்சு திருப்திகரமாக இருந்ததாக இருதரப்பும் தெரிவித்தன. "கோக்ரா, ஹாட் ஸ்பிரிங் பகுதிகளில் இருந்த படைகளை திரும்பப் பெற இருதரப்பும் ஒப்புக்கொண்டதாகவும் தகவல் வெளியானது.

அதன்படி, அப்பகுதியிலிருந்து இந்திய, சீனப் படைகள் திரும்பப் பெறப்பட்டன. வீரர்கள் தத்தம் நிரந்தர முகாம்களுக்குத் திரும்பினர். இந்திய, சீன எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சர்ச்சைக்குரிய இடங்களில் இரு தரப்பிலும் தலா 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் படை வீரர்கள் உள்ளனர்.

இந்நிலையில், கோக்ராவிலிருந்து இந்திய, சீனப் படைகள் பின்வாங்கியுள்ளது எல்லைப் பிரச்சினையில் நல்லதொரு முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. (8-7)

## சகோதரியின் சிகிச்சைக்காக பணம் திரட்டும் சிறுவன்




(டில்லி)

தெலுங்கானாவைச் சேர்ந்த 10 வயது சிறுவன் ஒருவன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தனது சகோதரிக்கு சிகிச்சையளிக்க பணம் திரட்டி வருகிறான்.ஹைதராபாத்தைச் சேர்ந்த சிறுவனின் 12 வயது சகோதரி மூளை புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனையறிந்த அந்தக் குடும்பம் கிடைத்த வேலையைச் செய்து அவரின் சிகிச்சைக்காக பணம் திரட்டி வருகின்றனர். குறித்த சிறுவன் தனது பங்கிற்கு சாலையோரம் பறவைகளுக்கான உணவை வைத்து விற்று பணம் திரட்டி வருகின்றான். அப்படியும் தனது படிப்பையும் விட்டு விடாது முயற்சிக்கும் சிறுவன் தனது சகோதரியின் உயிரைக் காப்பாற்றுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை வைத்துள்ளான். (8-7)

## கங்கை நதி பெருக்கெடுத்ததால் பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு




(டில்லி)

உலகின் மிகப் பெரிய நதிகளில் ஒன்றான இந்தியா- உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கங்கை நதி பெருக்கெடுத்து ஓடுவதால் மாநிலத்தில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.


கங்கை நதியின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் கரையோரத்தில் தாழ்வான பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. உத்திரப்பிரதேசம் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. இதனால் அங்குள்ள கங்கை, யமுனை நதிகளில் அபாய அளவை தாண்டி வெள்ளம் பாய்கிறது.

கங்கை, யமுனை நதிகளில் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் நதிக்கரைகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கானோரை பிரயாக்ராஜ் மாவட்ட நிர்வாகத்தினர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-7)



காற்றிலிருந்து குடிநீர் தயாரிக்கும் கருவியை ஸ்பெயினை சேர்ந்த அக்வேயர் என்னும் நிறுவனம் தயாரித்துள்ளது.

வெப்பக்காற்றை குளிரூட்டினால் உறைவு மூலம் உருவாகும் நீர் துளிகளை சேகரிக்கும். குடிநீர் பஞ்சம் அதிகம் இருக்கும் நமீபியா மற்றும் லெபனானில் அமைந்துள்ள அகதிகள் முகாம்களில் இந்த கருவிகள் இப்போது பயன்பாட்டில் உள்ளன.



கருணாநிதியின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்றைய தினம் மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது சமாதிக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## செவ்வாயில் பாறைத் துண்டுகளை சேகரிக்கும் முயற்சியில் தோல்வி



(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பு நாசா செவ்வாய்க் கோளுக்கு அனுப்பிய பெர்சவரன்ஸ் ரோவர் ஆய்வுக்காகப் பாறைத் துண்டுகளைச் சேகரிப்பதன் முதல் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

செவ்வாயில் உள்ள பள்ளத்தாக்கில் அமெரிக்காவின் பெர்சவரன்ஸ் விண்கலத்தின் ஊர்தி தரையிறங்கியுள்ளது. அந்தப் பகுதியில் உயிரினங்கள் வாழ்ந்தனவா என்பதை ஆராய்வதற்காக அங்கிருந்து பாறைத் துண்டுகளை எடுக்க முயற்சி நடைபெற்றது.

ரோவரில் உள்ள துளையிடும் கருவி மூலம் செவ்வாயின் தரையில் துளையிட்ட போதும் அதிலிருந்து பாறைத் துண்டை எடுத்துக் குழாயில் அடைக்கும் முதல் முயற்சி தோல்வியடைந்துள்ளது என நாசா தெரிவித்துள்ளது. (8-7)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :- 4 298 867**

**தொற்று :- 202 783 384**

**(நேற்றைய மாலை நிலைவரம்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாவத்திற்குப் பல கருவிகள் உண்டு. ஆனால் அவற்றிற்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி பொய். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கொரோனா மரணங்கள் மறைக்கப்படுகின்றனவா?

கொரோனாத் தொற்றால் நாடு தகித்துக் கொண்டிருக்கின்றது.

வைத்தியசாலைகளில் இடவசதியின்றி நோயாளர்கள் நிலத்தில் கிடக்கின்றனர்.

கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தவிர, இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதில் மிகப்பெரும் இடர்பாடுகள்.

நிலைமை இதுவாக இருக்கின்றபோதிலும் நாட்டை முடக்க முடியாது என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

நாட்டை முடக்கினால், பஞ்சம் பறிக்கக் கூடிய உயிர்கள் அதிகமாக இருக்கும் என்ற அச்சமே நாட்டை முடக்க முடியாது என்ற அரசின் தீர்மானத்துக்குக் காரணமாம்.

ஆக, நாட்டை முடக்குவதனூடாக கொரோனாத் தொற்றைக் குறைத்தல் என்ற நடைமுறை சாத்தியப்படமாட்டாது என்பதை வெளிப்படையாகக் கூறமுடியும்.

எனவே கொரோனாத் தொற்றைத் தடுக்கின்ற முழுப்பொறுப்பும் பொதுமக்களுக்குரியதாயிற்று.

இருந்தும் நாட்டை முடக்காத காரணத்தால் – மண்டபங்களில் வரையறுக்கப்பட்ட அளவில் மக்கள் கூடுவதற்கு அனுமதிக்கப்படுவதால், கொரோனாத் தொற்றின் தாக்கத்தை மக்கள் உணர்ந்து கொள்ளாமல் உதாசீனம் செய்கின்றனர் எனலாம்.

அதாவது ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி, மக்கள் ஒன்றுகூடுவதற்குக் கடுமையான தடைவிதிக்கும்போது மக்களிடையே ஓர் அச்சம் ஏற்படும்.

அந்த அச்சம் கொரோனாத் தொற்றின் அபாயத்தை உணர்த்தும்.

மாறாக, நாடு முடக்கப்படாமையால் கொரோனாத் தொற்றின் பேராபத்தை மக்கள் மறந்து செயற்படுகின்றனர்.

இதுகுறித்து மருத்துவத்துறையினர் கடும் எச்சரிக்கை விடுத்த போதிலும் அது குறித்து மக்கள் கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் எனவும் இருந்தும் மரண எண்ணிக்கை திட்டமிட்டு மறைப்புச் செய்யப்படுவதாகவும் எழுகின்ற குற்றச்சாட்டுக்கள் இதயத்தைப் பதற வைக்கின்றன.

ஆம், கொரோனாத் தொற்று ஏற்பட்டு நாளாந்தம் இறக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது, அரசாங்கம் மரணித்தவர்களின் எண்ணிக்கையைக் குறைவாக வெளிப்படுத்துமாயின், கொரோனா குறித்த மக்களின் விழிப்பு மந்தமாகவே இருக்கும்.

இந்த நிலைமையானது மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தவல்லது.

எனவே கொரோனாத் தொற்றால் இறப்பவர்கள் பற்றிய தகவல்கள் உண்மையானதாக இருக்க வேண்டும்.

இதில் இருட்டடிப்புகள் – மறைப்புகள் செய்யப்படுமாயின், அதைவிட்ட துரோகத்தனம் வேறுஎதுவுமாக இருக்க முடியாது.

# ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியம் 16 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு

## தொழில் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழியர் ஒருவர் பெறக்கூடிய குறைந்தபட்ச ஊதியம் தொடர்பிலான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிணங்க, குறைந்தபட்ச ஊதியம் 10 ஆயிரம் ரூபாவிலிருந்து 16 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

2016 ஜனவரி முதல் அமுலுக்கு வந்த 10 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் இது வரை குறைக்கப்பட்டிருக்கவில்லை. 2005 மற்றும் 2016 வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணமாக வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 500 ரூபாவுடன் 12 ஆயிரத்து 500 ரூபாய் வரை அதிகரித்திருந்தது. அதேபோன்று, அந்த குறைந்தபட்ச ஊதியத்திற்கு வரவு செலவு திட்ட நிவாரண தொகையாக மேலும் 3 ஆயிரத்து 500 ரூபாய் இணைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனியார் துறையின் அனைத்து ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியமாக 16 ஆயிரம் வழங்கப்பட வேண்டும் என தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த தொகைக்கமைய, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் ஒத்துழைப்பும் ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பேருந்து சாரதி ஒருவர் மயங்கி விழுந்து மரணம்

## பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

உணவு அருந்திக் கொண்டிருந்த தனியார் சிற்றூர்திச் சாரதி ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் நேற்று சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடமத்தியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் மதியழகன் (வயது- 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனியார் பேருந்து சேவை மேற்கொள்வதற்கு பஸ் வண்டி தயாராக இருந்த நிலையில் அவர் உணவருந்திக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் அவர் மயங்கிச் சரிந்துள்ளார். உடனடியாக அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அச்சுவேலி நகரம், டச்சுவீதி, இடைக்காடு, கதிரிப்பாய், மருதடி சந்தி பலாலி, செல்வநாயகபுரம் வசாவிளான், பலாலி தெற்கு, தம்பாலை, தோப்பு அச்சுவேலி, வளலாய் விமான நிலையச் சந்தி, விஜிதா மில், அராலி வீதி சங்கானை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக் குளம், விமானப்படை ரேடார், பூ- ஓயா விமானத்தள கூட்டுச் சேவை முகாம், ஈரப் பெரியகுளம் இராணுவ முகாம், கவுலும் ஆடைத்தொழிற் சாலை, குருந்துபிட்டிய மூன்று முறிப்பு இராணுவ கட்டட முகாம், தேசிய இளைஞர் பயிற்சி முகாம், நெளுங்குளம் நீர் வழங்கல் சபை, இராணுவமுகாம், வவுனியா அழகல்ல (தீருவேகம்), அளுத்கம, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், ஈரப்பெரியகுளம், கல்குண்டாமடு, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், மூன்றுமுறிப்பு, நாகரிலுப்பைக்குளம், நவகம, நளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பகல அளுத்வத்த, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், புபுதுகம, இராஜேந்திர குளம், சாம்பல்தோட்டம் வீடுத்திட்டம், தரணிக்குளம், வேரகம, விநாயகபுரம் வீட்டுத்திட்டம், ரோட்மண்ட் எலக்ட்ரோ எலக்ரிக்கல், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மணியர்குளம் (வீட்டுத்திட்டம்), நித்திய நகர், புதுக்குளம், ஆண்டிய புளியங்குளம், ரங்கீத்கம, சங்கராபுரம், வாரிக்குட்டியூர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்வழங்கல் சபை, ஆனால்நகர், வங்காலை, ஆயுர்வேத மருத்துவமனைக்கு அருவில், நெருவில் குளம், தோமஸ்புரி, வங்காலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் இன்னும் கூடுதலாகவும் கொடுக்கப்படும். ஏனெனில், உள்ளவருக்குக் கொடுக்கப்படும் இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்"

❖உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று.

❖"சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்"

❖மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன.

❖ தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன"

...டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் போக்குவரத்து பாதுகாப்பு அற்றது
# பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்
## திலும் அமுனுகம

(கொழும்பு)

**தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொதுப் போக்குவரத்து சேவை நூற்றுக்கு நூறு சதவீதம் பாது காப்பற்ற தன்மையில் காணப்படுகிறது.**

பொதுப்போக்குவரத்து சேவையில் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் முழுமையாகப் பின் பற்றப்படுகிறதா? என்பது தொடர்பில் கண்காணிக்க பாதுகாப்புத் தரப்பினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

பொதுமக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என போக்குவரத்து மற்றும் சமுதாய சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.




மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை முடக்கவது பயனற்றது. அனைத்து மாகாணங்களிலும் கொவிட் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் அரச சேவையாளர்கள் சேவைக்கு சமுகமளிக்கும் நேரத்தை மாற்றியமைக்க தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ள வேண்டிய நிலை தற்போது காணப்படுகிறது. மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்து சேவையினை முடக்கினால் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொதுப் போக்குவரத்து சேவை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்பற்ற தன்மையில் காணப்படுகிறது. கடந்த காலங்களில் இடம்பெற்ற ஒரு சில பொறுப்பற்ற செயற்பாடுகளின் காரணமாக கொவிட்-19 வைரஸ் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

ஆகவே பொதுப் பயணிகள் பேருந்துகளில் நெருக்கமாகப் பயணிப்பதை முடிந்தளவிற்கு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# வழக்கில் இருந்து விடுவிக்குமாறு பேர்ள் கப்பல் நிறுவனம் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு துறைமுக கடற்பரப்பில் தீவிபத்திற்குள்ளான "எக்ஸ்பிரஸ்" பேர்ள் கப்பலினால் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறு அறிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் அரச இராயன பகுப்பாய்வு திணைக்களம் என்பன இணைந்து அது தொடர்பான விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அம்பாந்தோட்டை கடற்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல் ஒன்றில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டிருந்த நிலையில் அதன் நிறுவனம் அதற்கான இழப்பீட்டினை வழங்கியதன் பின்னர் கப்பலை விடுவித்திருந்ததாக எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் சார்பில் முன்னிலையான சட்டவாதிகள் தெரிவித்தனர்.

அவ்வாறானதொரு சலுகையினை தமது தரப்பினருக்கும் வழங்குமாறு நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிபதி தமின் தொடவத்த, விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதால், அதனை உடனடியாக நிறைவு செய்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிக்கையிடுமாறு குறித்த நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார். (நி-8)

# மூன்று சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

வீடொன்றிலிருந்து தந்தை, தாய் மற்றும் மகனின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

28 வயதான தந்தை, 28 வயதான தாய் மற்றும் 10 வயதுடைய மகனின் சடலங்களே இவ்வாறு கல்கமுவ பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# முன்னோர்களின் ஆசீர்வாதங்களை அள்ளித்தரும் ஆடி அமாவாசை விரதம்

எல்லா நாட்களும் இறைவனையும் முன்னோர்களையும் வழிபட உகந்த நாட்களே. ஆனபோதும் சில வழிபாடுகளை முறைப்படி மேற்கொள்ள வேண்டும் என பெரியோர்கள் கூறியுள்ளனர்.

பித்ரு லோகத்தில் வாழும் முன்னோர்கள் ஆடி அமாவாசை அன்றே தங்கள் சந்ததியினரைப் பார்க்க பூமிக்கு வரத் தொடங்குவார்கள்.

தமிழ் மாதம் வரும் ஆடி மாதத்தில் கடக இராசியில் சஞ்சரிக்கும் சூரியன் சந்திரன், பூமி ஆகிய கிரகங்களுடன் ஒரே நேர்கோட்டுப் பாதையில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் அமையும் தினமே ஆடி அமாவாசை திதியாக அனுஷ்டிக்கப் பெறுகின்றது.



நம்மை நிம்மதியாக வாழ வைக்கும் பித்ரு தர்ப்பணம் ஒரு ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தான பலம் குறைந்தவருக்கு சுகமாக வாழ துணைபுரிவது தெய்வாம்சம் பொருந்திய முன்னோர்கள் தான்.

இவர்களை வழிபடும் முறைக்கு பிதுர் தர்ப்பணம் அல்லது சிரார்த்தம் என்று பெயர். இறை விருப்பப்படி மானிடருக்கு ஆசி கூறி இல்லறத்தை நல்லறமாக்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டும் அதிகாரம் படைத்தவர்கள் தேவர்களும், பித்ருக்களுமே! அமாவாசை தினம் பிதிர்க் கடன் செய்வதால் மூதாதையர், ரிஷிகள், தேவர்களின் ஆசி கிடைக்கின்றது என்பது ஐதீகம்.

நமது முன்னோர்களில் ஒருவர் இறந்த திதி, பட்சம், தமிழ்மாதம் அறிந்து, ஒவ்வொரு தமிழ் வருடமும் அதே திதியன்று (ஆங்கிலத் திகதிக்கு ஒவ்வொரு ஆண்டும் மாறிவரும்) குடும்பத்தார்கள் "பிண்டம்" செய்து வைத்து படைப்பதே சிரார்த்தமாகும்.

இதனால் குடும்பத்தில் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றன. இந்த தர்ப்பணத்தை இதேபோல அமாவாசைத் திதிகளிலும் செய்து வந்தால் மிகப்பெரும் நன்மைகள் உண்டாகும்.

ஒருவேளை முன்னோர்களின் இறந்த திதி தெரியாதவர்கள், ஆடி அமாவாசை அல்லது தை அமாவாசையன்று நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம் அல்லது சொந்த ஊரில் உள்ள ஏதாவது ஒரு கோவிலில் அல்லது வீட்டிலேயே சிரார்த்தம் செய்வது நன்று.

அதுவும் முடியாதவர்கள் ஏதாவது ஒரு அமாவாசையன்று (ஆண்டுக்கு ஒரு அமாவாசை என நமது ஆயுள் முழுக்கவும்) செய்து வருவது மிகவும் நன்மைகளையும், அளப்பரிய நற்புண்ணியங்களையும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +2,796...

மேலும் 2,796 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 327, 019 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 5 ஆயிரத்தை...

மேலும் 98 பேர் ஒரே நாளில் உயிரிழந்த சம்பவம் இரண்டாவது முறையாக பதிவாகியுள்ளது.

இதனால் நாட்டில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 17 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழில் உயிரிழந்த மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் இருவரின் மாதிரிகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

உயிரிழந்தவர்கள் 54 மற்றும் 68 வயதுகளையுடைய ஆண்கள் என்று தெரியவந்துள்ளது.

அதேபோல உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட 73 வயதுடைய பெண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக நேற்றைய பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்றுவந்த சுழிபுரத்தைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். (ம-3,33)

## இரு இந்து...

முனியப்பர் ஆலயம், பருத்தித்துறை சிவன் ஆலயம் என்பனவே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டன.

பருத்தித்துறை முனியப்பர் ஆலயத்தில் நேற்று இரதோற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை அதிகளவான பக்தர்கள் பங்கேற்றமை மற்றும் அவர்கள் முகக்கவசம் அணியாமை உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமை தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு ஒளிப்படத்துடன் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதுதொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனடிப்படையில் சுகாதார நடைமுறைகளை பேணத் தவறியதால் ஆலயத்தை எதிர்வரும் 21ஆம் திகதி வரை வழிபாடுகளை நிறுத்தி மூடுவதற்கு அறிவித்தல் ஒட்டப்பட்டது.

அதேபோன்று பருத்தித்துறை சிவன் ஆலயத்திலும் சுகாதார நடைமுறைகளை மீறி வெளிவீதியில் திருவிழாவை நடத்தியதால் அந்த ஆலய வழிபாடுகளும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்பட்டது. அத்துடன், ஆலய நிர்வாகிகளும் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டனர். (ம-3,33,60)

## 73...

டத்தில் 27 பேர், யாழ்.மாவட்டத்தில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 73 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 27 பேரும் யாழ்.மாவட்டத்தில் 24 பேரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேரும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 12 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## யாழில் பிறந்த...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிறந்த சிசுவுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிசுவும் தாயும் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிசுவுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அதன்போதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை கொரோனா பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.நகரில்...

குவிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக யாழ்.நகரம் மற்றும் தீவகப் பகுதிகளில் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சில நிகழ்வுகளுக்கு இராணுவத் தளபதியும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா கலந்து கொண்டதையடுத்து இவ்வாறு அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ம-3)

## சிறையில் அடைக்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் போராளிகளுக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபின் முன்னாள் போராளிகளை சந்தித்து கலந்துரையாடும்போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் அரசாங்கத்தினால் பொது மன்னிப்பின் அடிப்படையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று சமூகத்தில் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சிறையில் இருக்கும் ஏனையோரையும் விடுவிக்க கூடியதாக இருக்கும். உங்கள் விடுதலையைப் பற்றி பார்க்கிறார்கள், அவதானிக்கிறார்கள்.

எனவே நீங்கள் சமூகத்தில் நல்ல பிரஜையாக செயற்பட வேண்டும். அதாவது முன்னரைப் போல பிழையான வழிகளில் செல்லாது சரியான பாதை நோக்கி செல்லுங்கள். பழையவற்றை மறந்து நல்லதை சிந்தித்து சமூகத்தில் உள்ளோர் உங்களை நல்லவர்கள் என்று சொல்லும் அளவுக்கு உங்களது வாழ்க்கையை கொண்டு செல்லுங்கள்.

இராணுவம் என்ற ரீதியில் நாங்கள் முன்னாள் போராளிகளாகிய உங்களுக்கு எங்களாலான உதவிகளை செய்ய தயாராக இருக்கின்றோம்.

அதாவது வீடு கட்டித் தருவது என்றாலும் சரி வேறு ஏதாவது உதவி என்றாலும் நாங்கள் அதை செய்யத் தயாராக உள்ளோம். ஏனென்றால் அது எமது கடமையாகும்.

குறிப்பாக நீங்கள் முன்னாள் போராளிகள். நீங்கள் எமக்கு எதிராகத்தான் சண்டையிட்டீர்கள். நாங்கள் அதையெல் லாம் மறந்து உங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றோம் என்றார். (ம-3,33)

## விசுவமடுவில்...

அவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடு மாணிக்கபுரத்தினைச் சேர்ந்த 19 வயதுடைய சசிக்குமார் தனோஜிகன் என்ற இளைஞனே கடந்த 27ஆம் திகதி உந்துருளியில் பயணித்தபோது ஹயஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,281)

## பிதிர்க்கடன்களை...

அனுமதியில்லை என சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

ஆடி அமாவாசை தினமான இன்றைய தினம் இந்துக்கள் கடலில் நீராடி தமது பிதிர்களுக்கு கடன்களை நிறைவேற்றுவார்கள். கொரோனா பெருந்தொற்று காரணமாக இன்றைய தினம் குறித்த பகுதி கடற்கரைகளில் ஒன்றுகூட அனுமதியில்லை என சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்குமுகமாக கடற்கரைகளுக்கு மக்களை வரவேண்டாம்என சுகாதார பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1132
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 7 8 9 4 2 9

மெகா பவர்
திகதி 07/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0877
வெற்றி இலக்கங்கள்
A 10 37 63 78 80

மஹஜன சம்பத
திகதி 2021/08/07
சீட்டிழுப்பு இலக்கம் 4529
P 1 8 7 7 9 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2824
வெற்றி இலக்கங்கள்
I 06 16 27 29

தன நிதானய
திகதி -2021.08.07
சீட்டிழுப்பு இலக்கம் - 559
H 23 24 51 63

சீட்டிழுப்பு வாரம் 086
சீட்டிழுப்பு திகதி 07.08.2021
வெற்றி இலக்கங்கள் 02 23 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,710,580/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல. 1332
சீட்டிழுப்பு திகதி 07.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,720,104
வெற்றி இலக்கங்கள் 13 19 66 75 P

சனிதா
சீட்டிழுப்பு திகதி 07.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,503,998.30
வெற்றி இலக்கங்கள் 05 13 38 57 Q

சுப்பர் ஜக்பொட் 4,052,022/=
திகதி: 07.08.2021
வெற்றி வாரம்: 3218
வெற்றி இலக்கங்கள் 22 47 51 59 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,119,680/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1506
சீட்டிழுப்பு திகதி 07/08/2021
தினம் சனிக்கிழமை
D 09 18 54 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் 62,405,014/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
443 07.08.2021
L 14 39 45 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பெறுதி ரூ. 13,816,132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா மரணங்களை தடுக்க இருவாரமாவது நாட்டை முடக்குக

## ரஜரட்ட பல்கலை சமூக மருத்துவத்துறை பேராசிரியர் சுனெத் அகம்பொடி



(கொழும்பு)

**நாட்டில் தினசரி கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 200 தொடக்கம் 300 ஆக உயர்வதை தடுக்க இருவார கால ஊரடங்கை அமுல்படுத்துமாறு ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத்துறையின் பேராசிரியர் சுனெத் அகம்பொடி தெரிவித்தார்.**

இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க, அனைத்து நோயாளர்களையும் வைத்தியசாலைகளில் சேர்ப்பதை துரிதப்படுத்த வேண்டும். வீட்டுச் சிகிச்சை, நோயாளிகளின் போக்குவரத்து மற்றும் அவசர சேவைகள் போன்ற சேவைகளை வழங்க ஒரு சரியான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றார்.

இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க இருவார காலத்துக்கு 100 சதவீத ஊரடங்கை அமுல்படுத்த வேண்டும்.

என பேராசிரியர் சுனெத் அகம்பொடி மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# எழுமாற்றுப் பரிசோதனையில் வவுனியாவில் 41 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி

(குருமன்காடு)

வவுனியாவில் இருதினங்களில் 41 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், மகாறம்பைக்குளம் பகுதியில் ஐந்து பேருக்கும் இறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும் கூமாங்குளம் பகுதியில் ஒருவருக்கும் கொக்குவெளி இராணுவ முகாமில் ஒருவருக்கும் முதலியார்குளம் பகுதியில் இருவருக்கும் நேரியகுளம் பகுதியில் ஏழு பேருக்கும் உளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும் தோணிக்கல் பகுதியில் நான்கு பேருக்கும் நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும் மதவாச்சி பகுதியில் ஒருவருக்கும் கோயில் குளம் பகுதியில் ஒருவருக்கும் பெரிய உளுக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும் ஓமேகா ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் அனுராதபுரத்தைச் சேர்ந்த இருவருக்கும் தவசிகுளம் பகுதியில் ஒருவருக்கும் ஓமந்தைப் பகுதியில் ஒருவருக்கும் காத்தார் சின்னக்குளம் பகுதியில் ஒருவருக்கும் செட்டிகுளம் பகுதியில் இருவருக்கும் சுகாதார திணைக்கள விடுதியில் இருவருக்கும் சூடுவெந்தபுலவு பகுதியில் ஒருவருக்கும் வவுனியாவில் வசிக்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவருக்கும் வவுனியாவில் பணிபுரியும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் என 41 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் கடந்த 5 நாட்களில் நேரியகுளம் பகுதியில் 71 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-03,250)

# கொரோனா தீவிரத்திற்கு அரசாங்கமே பொறுப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

போராட்டங்களினால்தான் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளது என்று போலியான குற்றச்சாட்டை அரசாங்கம் முன்வைக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹன திஸாநாயக்க, திலிப் வெத ஆராச்சி ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இவர்கள் எவரும் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மக்களை மூடர்களாக்கும் கருத்துக்களை குறிப்பிடுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் இன்று பல்வேறு வழிமுறைகளில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதன் காரணமாகவே வீதிக்கிறங்கி போராடுகிறார்கள்.

கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ளதற்கு அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வேலையாள் தேவை
யாழ். நகரில் இயங்கும் இனிப்புப் பண்ட விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்பு (7593)
077 275 9799

வேலை ஆட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் கார்மன்ஸ்சில் தையல் தெரிந்த பெண் வேலை ஆட்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.
வீட்டுப் பணிப்பெண் தேவை. (7594)
077 051 1654
077 151 6625

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
சம்பளம் - 15000/-
0777-068-777
v2vacancies@gmail.com

அண்ணா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2439)
070 3305500
077 888 9388
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

NVQ DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.P25/0056
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை
Computer Applications Assistant CAA
[Full Time - 3 Months, Part Time - 6 Months]
ICT - NVQ LEVEL - 4 [Full Time - 6 Months]
Zoom online இல் ஆரம்பம் - 9/8/2021(Mon) 8.30 am
ICT - NVQ LEVEL - 5
Diploma in Information Technology
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655 0777 240 707

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ( நிலப்பரப்பு ) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்தில் இருந்து 400 மீற்றர் தூரம். (7577)
பார்வையிடும் நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை.
1 1/2 பரப்பின் விலை 10 இலட்சம்
077 814 7389, 077 614 7333

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2438)
0768226240 DHL

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 313

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 08.08.2021 தொலைபேசி : 021 222 3378



## கொரோனா இறப்பிலும் இருட்டடிப்பு நடக்கிறதா ?



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கம் சோகத்துடன் இருப்பதைப் பண்டிதர் பரமலிங்கம் கவனித்தார்.

என்ன விதானையார் யோசனையில இருக்கிறியள் போல. பண்டிதர் வினவினார்.

**விதானையார்:** இந்த மண்ணில இருக்கிற நாங்கள் யோசிக்காமல் இருக்கலாமோ.

இன்று ஆடி அமாவாசை விரதநாள். எங்கட மூதாதையர்களுக்காக விரதம் அனுஷ்டித்துப் புனித தீர்த்தக் கரையில தர்ப்பணம் செய்து பிதிர்க் கடனை நிறைவேற்ற வேண்டிய நாள். அப்படியெல்லாம் இப்ப செய்யமுடியாதுதானே.

**பண்டிதர்:** இஞ்சே விதானையார் இது கலிகாலம். கோயில்களைப் பூட்டுறது, ஆச்சிரமங்களுக்குச் சீல் வைக்கிறது, திருவிழா நடத்த வேண்டாம் என்று கட்டளை பிறப்பிக்கிறது போன்ற வேலைகளைத்தானே படிச்ச சமூகம் செய்து கொண்டிருக்குது.

அதர்மம் மேலோங்கி தர்மம் இல்லாமல் போற காலங்களில இப்படியான அக்கிரமங்கள்தான் நடக்கும்.

**சாத்திரியார்:** பண்டிதர் சொன்னதில நூறு வீதம் உண்மை இருக்குது. இந்தாப்பாருங்க எங்கட மூதாதையர்களின்ர பிதிர்க்கடன்களைக் கூட, எங்களால செய்து ஆறுதல் அடைய முடியவில்லை. பிதிர்க்கடன் செய்யாவிட்டால் அது பெரும் தோசம்.

ஏதோ வீடுகளில இருந்து கடவுளை நினைத்து பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதுதான் ஒரே வழி.

**கங்காணி:** ஓ! பிதிர்க் கடன்களை நிறைவேற்றி வைக்கிற ஆச்சாரியர்கள் அந்தக் காரியத்தை வியாபாரமாகக் கருதிச் செய்தாலும் பிதிர்கள் சாபம் போடும். அந்தச் சாபம் தான் இந்த முறை ஆடி அமாவாசையில பிதிர்க் கடன் செய்ய முடியாமல் போயிருக்குப் போல...

**வாத்தியார்:** என்ன கங்காணியார் சொல்லுறியள். எனக்கெண்டால் ஒன்றும் விளங்கல்ல. கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**கங்காணி:** ஆடி அமாவாசை விரதத்தின்போது கீரிமலையில தர்ப்பணம் செய்து ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவுவதற்காக ஆச்சாரியர்கள் இருப்பினம். ஆனால் அவையள் செய்யிற வழிபாட்டு முறைகளைப் பார்த்திருப்பீர்கள் தானே.

காசு சம்பாதிக்கிறதைத் தவிர, தன்னிடம் வந்தவரின்ர மனம் திருப்தியடையிற வகையில தர்ப்பணம் செய்யிறவியளோ?

எள்ளும் தண்ணியும் இறைக்கிறபோதுகூட [illegible] புனித தீர்த்தங்களில [illegible] பெயர்களைச் சொல்லாமல் ஏமாத்துற வேலைகளைச் செய்வினம். அவர்களின்ர செயலால மனம் நொந்து கீரிமலைக் கடலில மூழ்கி எழுகிறதைத் தவிர வேறு என்ன இருக்கு?

**சாத்திரியார்:** கங்காணியார் சொல்லுறதை நான் மறுக்கல்ல. ஆனால் பிதிர்க்கடனுக்கான தர்ப்பணத்தை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்று நினைத்து அதனைச் செம்மையாகச் செய்கின்ற ஒரு சில ஆச்சாரியர்களும் இருக்கினம் எண்டதையும் இந்த இடத்தில சொல்லித்தான் ஆகவேண்டும்.

**கங்காணி:** சாத்திரியார் நீங்கள் சொல்லுற மாதிரி சிலர் பிதிர்க்கடனை ஒழுங்காகச் செய்யினம். ஆனால், பெரும்பாலான ஆச்சாரியர்கள் உழைப்பை இலக்காகக் கொண்டு ஏனோ தானோ என்று கிரியை செய்யினம். அந்தப் பாவம் தான் இன்றைக்கு ஒண்டு மில்லாமல் போயிற்று.

([illegible] இவ்வாறு [illegible]) ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்)

**சிறாப்பர்:** சந்நிதியானின்ர கொடியேற்றமும் இண்டைக்குத்தானே.

**மூப்பர்:** ஓ! ஏதோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களோட திருவிழாக்களை நடத்தி முடிக்க வேண்டியதுதான்.

**விதானையார்:** சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சீல் வைச்சுப் போட்டார் எண்டு கேள்வி.

**சாத்திரியார்:** என்ன? சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சீல் வைச்சதோ! இதென்ன நாசமறுப்பு.

**விதானையார்:** சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சீல் வைத்தது தொடர்பில அப்பகுதி மக்கள் விசனமடைந்திருக்கினம். சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு சீல் வைக்கிற பின்னணியில மத விவகாரங்க[illegible] இருக்குது எண்டு அந்த ம்க்கள் பரவலாகக் கதைக்கினம்.

மூத்த விநாயகர் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் கோயில், சந்நிதியான் ஆச்சிரமம் எண்டு மதவாதம் செல்வாக்குச் செலுத்துகிறதான குற்றச்சாட்டுக்கள் வலுவாக முன்வைக்கப்படுகுது.

**சிறாப்பர்:** நானும் அறிஞ்சனான். சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு சீல் வைக்க வேணும் எண்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் விடாப்பிடியாக நிண்டவராம். அவற்ற இறுக்கத்தால சுகாதார வைத்திய அதிகாரியாலும் ஒண்டும் செய்ய முடியாமல் போயிற்றுதாம்.

உண்மையில சுகாதாரத் தொண்டர்கள் சிலரை நிறுத்தி சந்நிதியான் ஆச்சிரமத்தில நடக்கிற அன்னதானப் பணியை ஒழுங்குபடுத்தியிருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் சீல் வைக்கிற தேவை இருந்திருக்காது.

**வாத்தியார்:** சமய பேதத்தை உள்மனதில வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் செயற்படுவாராக இருந்தால், அதை ஒருபோதும் மன்னிக்கமுடியாது. அதேநேரம் கொரோனாத் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்காக பரிசோதகர் தன்ர கடமையைச் செய்திருப்பாராக இருந்தால், அதனை யாரும் குறை சொல்லவும் முடியாது.

எனவே, இது விடயத்தில யாழ். மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் இணைந்து ஒரு நீதியான விசாரணை நடத்த வேணும். இல்லையெண்டால் இந்த விடயம் பூதாகரமாகும்.

வாத்தியார் இவ்வாறு கூற, அதற்கு தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு சீல் வைத்த பின்னணி என்னவாம்?

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிக்கு எதிரி நண்பன்

# இந்தியா-சீனா-இலங்கை

**2009 இறுதிப் போருக்குப் பின்னர் இந்தியாவின் எதிரி நாடான சீனாவுடன் இலங்கை இன்னும் இறுக்கமான நட்பை பேணத் தொடங்கியமை இந்தியாவுக்கு பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி இருந்தது.**

தர்மம் வீழ்ந்து அதர்மம் மேலோங்கும் போதெல்லாம் நான் அவதரிப்பேன் என்றார் கிருஷ்ண பரமாத்மா.

எந்த இடத்தில், எந்த நேரத்தில் தர்மம் வீழ்ந்து அதர்மம் மேலோங்குகிறதோ அந்த இடத்தில் தர்மத்தை நிலைநாட்ட நான் இருப்பேன். இதுவே கிருஷ்ண பரமாத்மாவின் அவதரிப்புக்கான காரணமாகிறது.

சூதாட்டத்தில் துரியோதனனிடம் தோற்றுப் போன பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசத்தின் பின் இழந்த தமது நாட்டைப் பெற்றுக் கொள்ள கிருஷ்ண பரமாத்மாவைத் தூதனுப்புகின்றனர்.

இழந்த தமது நாட்டைத் தரும்படி கிருஷ்ண பரமாத்மா பண்டவர் சார்பில் துரியோதனனிடம் கேட்டு நிற்கின்றார்.

நாட்டை திரும்பி பாண்டவர்களுக்கு வழங்குவதை முற்றிலும் மறுத்து ஆணவத்துடன் எழுந்து நின்றான் துரியோதனன்.

காத்தல் கடவுளாம் கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களுக்கு நாடு வேண்டாம் ஐந்து நகரையேனும் வழங்குகள் எனக் கேட்கிறார்.

பதில் அல்ல என துரியோதனிடம் இருந்து வருகிறது.

சரி ஐந்து நகர் வேண்டாம், ஐந்து ஊரையேனும் வழங்குங்கள் என்று கேட்கிறார் கிருஷ்ணர்.


ஐந்து ஊரும் தர முடியாது என மறுக்கப்படுகிறது.

சரி ஐந்து ஊர் வேண்டாம், ஐந்து வீடேனும் பாண்டவர் வசிக்க வழங்கும்படி கேட்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

ஐந்து வீடல்ல பாண்டவர்களுக்கு குண்டூசி அளவு இடம் கூடத் தர முடியாது என கொக்கரிக்கிறான் துரியோதனன்.

ஐந்து வீடல்ல குண்டூசி அளவு இடம் கூட பாண்டவர்களுக்கு இல்லை என்பதே பாரதப் போருக்கு வழிவகுக்கிறது.

பாரதப் போரில் அதர்மம் அழிந்து போக தர்மம் வென்று பாண்டவர் இழந்த ஆட்சியைப் பெறுவதாய் மகாபாரதம் கூறி நிற்கிறது.



இவ் விடயத்தை வெறும் கதையாகப் பார்த்தாலும் இது பலருக்கு படிப்பினையாக அமையும் என்பதே உண்மையானது.

இந்த நாட்டில் தமிழினத்திற்கு நீதி கிடைத்ததா? என்றால் அதற்கான பதிலும் அல்ல என்றே வரும்.

பயங்கரவாதம் என்ற பெயரில் நடந்த பெரு யுத்தம் 2009 உடன் முடிவு பெற அடடா தமிழினத்திற்கு உரிமை கிடைக்கும் என அதீதமாய் நம்பினர் தமிழ் மக்கள்.

ஆனால் நடந்ததோ வேறாகியது. தமிழினத்திற்கான நீதி மறுக்க்ப்பட்டதும் பயங்கரவாதத்தை வென்றுவிட்டோம் என வெற்றி விழாக் கொண்டாடினதும் நடந்தேறியதே தவிர தமிழர்களுக்கான தீர்வென்பது மறுக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.

இதேவேளை கொல்லப்பட்ட உறவுகளை நினைத்து தீபம் ஏற்றக் கூட தமிழர்களுக்கான நீதி மறுக்கப்பட்டது.

இறந்த உறவுகளை நினைத்து நினைவேந்துவதை பயங்கரவாதச் செயற்பாடு என்பதாய் ஆட்சியாளர்கள் பார்த்தார்களே ஒழிய அதனூடே காயப்பட்ட தமிழினத்தின் மனதின் ரணம் ஆறும் மருந்தாய் பார்க்காதது பெரும் வலியைத் தந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இறுதிப் போரில் பயங்கரவாதத்தினை அழித்தொழிக்க இந்தியாவின் வகிபங்கு மிகப்பெரிது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே.

ராஜீவ் காந்தி கொலைக்கு பழி தீர்க்கும் செயற்பாடாய் அன்றைய காங்கிரஸ் அரசு இலங்கை அரசிற்கு தாராளமான உதவிகளை வழங்கியதுடன் தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்தபோது அதுபற்றி இம்மியும் கவலை கொள்ளாது இருந்தமையினை இன்றுவரை தமிழர்களின் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இந்திய அரசு தமிழினத்தை கைவிடாது என தமிழினம் உறுதியாய் நம்பியிருக்கும் போதே இத் துரோகத்தனம் நடந்தேறிற்று.

சரி நடந்தது நடந்துவிட்டது. இறுதிப்போருக்கு இந்தியா இலங்கைக்கு உதவி புரிந்ததும் அதனூடே தமிழினம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்ததும் என அத்தனையையும் மறந்து மீண்டும் இந்தியா எமக்கான உரிமைகளைப் பெற்றுத் தரும் என தமிழினம் உறுதியாய் நம்பியிருந்த வேளையில் இலங்கை அரசு இந்தியாவை விடுத்து சீனாவுடன் உறவாட ஆரம்பித்தது.

தமிழினத்திற்கு இந்தியா நீதியைப் பெற்றுத் தராததும் பல்லாயிரம் உயிர்கள் கொல்லப்பட மௌனம் காத்ததும் ''தன் பழி தீர்த்தல்'' எனும் நிலையில் இருந்த வேளை, இலங்கை சீனாவுடன் நட்பைப் பேணத் தொடங்கியிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் செயலாக அமைந்துள்ளதை இந்திய அரசு இப்போது புரிந்து கொண்டு விட்டது.

ஏனெனில் சீனாவின் தாராளமயம் இலங்கையில் பல்வேறு மாயா ஜாலங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதை இந்தியா புரிந்து கொள்ளாமல் இல்லை.

இந்திய அரசினால் அறிமுகப் படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தும்படி இந்தியா விரும்பியதும் இலங்கை சீனாவுடன் ஒட்டுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

சீனாவின் கால்தடம் இலங்கையில் பலமாக பதிந்து விட்டதை இப்போது இந்தியா புரிந்து கொண்டு விட்டது என்பதை தற்போதைய செயற்பாடுகள் பறைசாற்றி நிற்கின்றன.

ஆம், அண்மையில் நிகழ்வொன்றில் உரையாற்றிய இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் முரளிதரன் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவம் என்பவற்றை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் இந்திய அரசு உறுதியாக உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக தமிழ் மக்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவது, இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பங்களிப்புச் செய்யும் மற்றும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மையாக அமையும் என இந்தியா நம்புவதாக அவர் தெரிவித்திருந்தார்.

குறித்த பேச்சில் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது "தமிழர்களின் நியாயமான அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மையாக அமையும்" என்பதை நாம் மட்டுமல்ல இலங்கை அரசும் கவனிக்க வேண்டிய விடயம்.

அதாவது இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழினத்திற்கு நீதி வழங்க வேண்டும் என்பதை இந்தியா இலங்கை ஆட்சியாளர்களுக்கு தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

நாடு கேட்டு, நகரம் கேட்டு, ஊர் கேட்டு, வீடேனும் கேட்ட பாண்டவர்களுக்கு குண்டூசி இடமேனும் தரேன் என்று மறுத்த துரியோதனன் பாரதப் போரில் தோற்கடிக்கப்பட்டு மாண்டு போகிறான் என்ற உண்மையை இங்கு ஈண்டு கவனிக்க வேண்டும் என்பதுடன் இப்பத்தியை நிறைவு செய்து கொள்கிறோம்.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வீராதி வீரன்



உரத்த குரலில் அவன், "ஏ! பூதமே! என்னையா தேடுகிறாய்? நான் யார் என்பது தெரியாமல் பிதற்றுகிறாயா? மாவீரனான நான் ஒரே நாளில் இருநூறு பேரைக் கொன்றேன்.

முந்நூறு பேர் படுகாயம் அடைந் தனர். நான் கீழே இறங்கினால் நீ தொலைந்தாய்," என்று மிரட்டினான்.

"என்னைப் பார்த்ததும் நடுங்கியே பலர் செத்து இருக்கின்றனர். இவன் இவ்வளவு துணிவாகப் பேசுகிறானே. முதலில் இவன் வலிமையை அறிய வேண்டும். பிறகு இவனைக் கொன்று தின்ன வேண்டும்" என்று நினைத்தது பூதம்.

"உன்னைப் பார்த்தால் வலிமையானவனாகத் தெரியவில்லையே. உன் வலிமையைக் காட்டு பார்ப்போம்,"என்றது.

என்ன செய்வது என்று சிந்தித்தான். தன் சட்டைப் பையிலிருந்த வெண்ணெய் உருண்டையை எடுத்தான். மரத்தில் இருந்தபடியே அதை மேலே தூக்கிப் போட்டுப் போட்டு பிடித்தான்.

"ஏ! பூதமே! நான் தூக்கிப் போட்டு பிடிப்பது என்ன? சரியாகச் சொல். பார்ப்போம்"

"கூழாங்கல்," என்றது பூதம். "உனக்கு அறிவு உள்ளது. கூழாங்கல் என்று சரியாகச் சொன்னாய். இப்போது என் வலிமையைப் பார்," என்ற அவன் அந்த உருண்டையைத் தன் கைகளுக்குள் வைத்து அழுத்தினான். அது தூள் தூளாகிக் கீழே விழுந்தது.

இதைப் பார்த்த பூதம் திகைத்தது. "கூழங்கல்லைக் கைகளுக்குள் வைத்துத் தூள் ஆக்குகிறானே. நம்மால் அப்படிச் செய்ய முடியாதே. இவன் மிகுந்த வலிமையானவன் தான்" என்று நினைத்தது. (தொடரும்)

# மகாபாரதம்



149

மன்னன் மந்தாதா

நாபகன் என்னும் மன்னனின் மகன் அம்பரீஷன். அவன் இயற்றிய யாகத்தில் பத்து இலட்சம் அரசர் பணி புரிந்தனர்.

அவனைப் போன்ற சிறந்த மன்னன் மூவுலகிலும் இல்லை என மக்கள் புகழ்ந்தனர். அவனுக்கு பணிபுரிந்தோர் அனைவரும் புண்ணிய உலகம் அடைந்தனர். கடைசியில் அந்த மன்னனும் மாண்டான்.

சித்திரதன் என்னும் மன்னனின் மகன் சசபிந்து. நூறு நூறு யானைகளையும் ஒவ்வொரு யானைக்கும் நூறு நூறு தேர்களையும் ஒவ்வொரு தேருக்கும் நூறு நூறு குதிரைகளையும் ஒவ்வொரு குதிரைக்கும் நூறு நூறு பசுக்களையும் ஒவ்வொரு பசுவிற்கும் நூறு நூறு வெள்ளாடுகளையும் ஒவ்வொரு வெள்ளாட்டுக்கும் நூறு நூறு செம்மறியாடுகளையும் கொண்ட அளவற்ற செல்வத்தை யாகத்தின் போது தானமாக அளித்தான். அத்தகைய தான திலகனான சசபிந்துவும் மாண்டான்.

அதூர்த்தரஜஸ் என்னும் மன்னனின் மகன் கயன். அவன் ஆட்சியில் நாடெங்கும் அமைதி நிலவியது.

அவன் பல யாகங்களைச் செய்தான். யாகத்தின் போது நூறாயிரம் பசுக்களையும் பதினாறாயிரம் குதிரைகளையும் தானமாக அளித்தான்.

அசுவமேதம் என்னும் பெரும் யாகத்தின் முடிவில் ஐம்பது முழ அகலமும் நூறு முழ நீளமும் கொண்ட பொன் விளையும் பூமியைத் தானமாகக் கொடுத்தான் பொன்னும் பொருளும், போகமும் பெற்றிருந்த அந்தக் கயனும் மாண்டு விட்டான்.

ரத்தி தேவன் என்னும் மன்னன் சங்கிருதியின் மகன் ஆவான். புகழ் வாய்ந்த அவன் வேள்விச் சாலையில் இருந்த குடங்கள், தோண்டிகள், அண்டாக்கள், அனைத்தும் பொன்னாலானவை. அவன் செய்த, தர்மங்களுக்கு அளவே இல்லை.

"எங்களை நல்ல செயலுக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டு நாட்டிலும், காட்டிலும் இருந்த பசுக்கள் அம்மன்னனை வந்தடைந்தன. அத்தகைய பெருமை மிக்க மன்னனும் மடிந்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### இங்கிலாந்து- இந்திய டெஸ்ட் தொடர் எவ்வாறு அமையும் வியாசரே?

**சிறி — சுன்னாகம்**

**ஒருவருக்கு மட்டும் கொரோனா இருந்த காலத்தில் முடக்கம் அதிகமும் பலருக்கு கொரோனா வந்திருந்தும் முடக்காதத ற்கு காரணம் என்ன?**

நாட்டை முடக்குவதால் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். அது பாரிய தாக்கத்தைச் செலுத்தும். எனவே நாட்டை முடக்காமல் கட்டுப்பாடுகளை விதித்து பொருளாதாரத்தை மீட்டெடுக்கப் பார்க்கிறது அரசு.

இல்லை... இல்லை... நாட்டை முடக்காவிட்டால் அது பாரிய விளைவுகளைத் தரும். ஒன்று- இரண்டு மாதங்கள் நாட்டை முடக்கினாலே கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறது சுகாதாரத்துறை.

இந்த இரண்டு விடயங்களும் சரியாகத்தான் படுகிறது.

**ஆ.இதழினி — புலோலி**

**தான் செய்த தவறை மற்றவர் தலையில் போட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பவர்களைப் பற்றி?**

பாவம் செய்தால் அடுத்த பிறவியில் நரகத்துக்குத்தான் செல்வீர்கள் என்பது போய்,

போன பிறப்பில் நிறையப் பாவங்களைச் செய்தபடியால்தான் இந்தப் பிறப்பில் பூமி எனும் நரகத்தில் பிறந்திருக்கிறோமோ? என்று கேட்கும் நிலையே தற்போது உண்மையாகிறது.

இங்கு மனிதத்திற்கும் மனச்சாட்சிக்கும் மதிப்பே இல்லை.

வீழ்ந்தவரைத் தூக்கி விடுவதை விடுத்து அவன் முதுகில் ஏறி மிதித்துச் செல்லும் கூட்டமே மனித கூட்டம்.

**சுதன் — குப்பிழான்**

**இலங்கை மீது பொருளாதாரத் தடை வந்தால் எங்கள் நிலை எப்படி இருக்கும்?**

என் கணவன் கள்வனா என்று கேட்டு கண்ணகி மதுரையை எரிக்கும் போது பத்தினிப் பெண்கள், வயோதிபர், குழந்தைகள் தவிர்ந்து தீமை செய்யும் அத்தனை பேரும் எரியும்படி சாபமிட்டாள். அது நடந்தது.

அதேபோல அமெரிக்கா தமிழர் தவிர்ந்த பொருளாதாரத் தடை என்றெல்லாம் தடை விதிக்காது.

இலங்கைக்குப் பொருளாதாரத் தடை வந்தால் அது தமிழராகிய எம்மையும் பாதிக்கும்.




**நிலா — சுழிபுரம்**

**பணத்தைப் பெரிதாக நினைக்கும் மனிதர் பற்றி என்ன நினைக்கிறீர்?**

பாலைவனத்தில் ஒரு கோடீஸ்வரர் மாட்டி விட்டார்.

அன்றுவரை A.C இல்லாமல் இருக்காதவர் அந்தச் சுட்டெரிக்கும் பாலைவனத்தில் நடந்து நடந்து களைத்துப் போய் வீழ்ந்து கிடக்கிறார்.

நாக்கு நீருக்காய்த் துடிக்கிறது. அவரின் கைக்கெட்டும் தூரத்தில் அவரின் பொக்கட்டில் பணம் இருக்கிறது.

அந்தப் பணத்தை எடுத்து குடித்து தாகத்தை தீர்த்து விட முடியுமா?

இதைப்புரியாதவரை பணம் எனும் மோகம் மனிதனை அழித்துக் கொண்டே இருக்கும்.

**சிவா — யாழ்ப்பாணம்**

**ஒருதலைக்காதல் கத்திக்குத்தில் முடிய யார் காரணம்?**

காதல் என்பது இரு மனங்கள் சேர்வதே. இல்லை என வற்புறுத்தி காதல் வர வைப்பது வன்முறையே. ஒருவரில் காதல் வருவது எப்படி என்று கூற முடியாதது.

அவரிடம் விருப்பத்தைத் தெரிவிக்க அவருக்கு அந்தக் காதல் பிடிக்கவில்லை என்றால் விலகி விடுவதே நாகரிகம். அதை விடுத்து கத்தி எடுத்து வன்முறையில் ஈடுபடுவது உண்மைக் காதல் அல்ல.

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**



### இலங்கை மீது பொருளாதாரத் தடை வந்தால் எங்கள் நிலை எப்படி இருக்கும்?

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**இங்கிலாந்து- இந்திய டெஸ்ட் தொடர் எவ்வாறு அமையும் வியாசரே?**

இந்திய அணி இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை வென்ற வரலாறு இல்லை.

ஆனாலும் இம்முறை இந்திய அணி வலுவான அணியாக உள்ளது. இந்திய அணி இங்கிலாந்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக பலரும் கருத்துக் கூறினர்.

முதலாவது போட்டியில் அதைப் பறைசாற்றும் விதமாக இங்கிலாந்தை மிகச் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்த்தியது இந்தியா.

எனினும் இந்தியாவின் துடுப்பாட்டம் மிக மோசமாக உள்ளதை முதலாவது போட்டியில் பார்க்க முடிந்தது. பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் வெற்றி யாருக்கு என்பதை.

**ரவீனா — மானிப்பாய்**

**சினிமாத்துறை தற்போது சின்னத்திரைப் பக்கம் சாய ஆரம்பித்து விட்டதே?**

கொரோனாவின் உச்சம் சினிமா எனும் பிரமாண்ட வணிகத்தை முடக்கிப் போட்டு விட்டது என்பதே உண்மையானது.

தற்போது அனைவரும் சின்னத்திரைப் பக்கம் ஈர்க்கப்பட்டு விட்டனர்தான்.

ஆனாலும் திரைப்படங்கள் ஓடிடி தளங்களிலேயே வெளிவருகின்றன.

இது திரையரங்கம் மற்றும் அதைச்சார்ந்த தொழிலாளர்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை உணர முடிந்துள்ளது.

கொரோனா முடியப் போவதில்லை. திரையரங்குகள் திறக்கப்படப் போவதுமில்லை அவ்வளவே.

**தாரு — வதிரி**

**எல்லாவற்றிற்கும் முடிவு இருக்கிறது என்கிறார்கள். இந்தக் கொரோனாவுக்கு முடிவு இருக்கிறதா வியாசரே?**

கொரோனா முடியும் என நீங்கள் நினைத்தால் தயவு செய்து அந்த நினைப்பை மறந்து விடுங்கள். கொரோனாவுடன் வாழப் பழகுங்கள். சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள்.

எம் பாதுகாப்பு எம் கைகளில் என்பதை என்றும் மறந்துவிடாதீர்கள். முகக்கவசம் உயிர்க்கவசம். அதை அகற்ற நினைக்காதீர். அடிக்கடி கைகளைக் கழுவுவது அவசியமானது என்பதை இம்மியும் மறக்காமல் செயற்படுங்கள். எல்லாம் சரிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது ஹிசாலினியின் குரல்



நேற்று எரித்தார்கள் இன்று புதைத்தார்கள்
நாளை மீண்டும் தோண்டப்போகிறார்கள்

கண் மூடியிருக்கும் நீதி தேவதையே உண்மையிலேயே
நீ பார்வையற்றவள் இது என் குரல்

அடங்கி, ஒடுங்கி அடிமையாயிருந்து மாண்ட பின்னும் நிம்மதியாய்
உறங்க முடியவில்லை போதும் உன் நீதி

இன்னும் என்னைப்போல் எத்தனை சிறுமிகள் எவராவது வீட்டிலோ? இந்த
ஹிசாலினியோடு முடியட்டும் ஹிசாலினிகளது தொடர்கதை


வல்வைக்கமல்

## விடியல் தோறும்

ஒவ்வொரு விடியலும் இயற்கையின் ஒலிகேட்டு
கண்விழித்திடும் போது உள்ளமும் துள்ளி எழுந்திட வேண்டுமே...
உடலும் உள்ளமும் உற்சாகம் பெற்றிட வேண்டுமே
ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு நடையிலும்
சந்தோசச் சாரலாய் ரசிக்கும் மனமாக வேண்டுமே...
கண்விழிக்கும் தருணம் உள்ளம் தொடும் சந்தோசச் சிதறல்கள்
நாள்முழுவதும் வளர்ந்திட வேண்டுமே
புரிகின்ற மனமும் ஏற்றுக்கொள்ளும் அனுபவமும்
உன் வழிகாட்டியாக வேண்டுமே...

தி.திருமாலினி,
சங்கத்தானை

## வாழ்க்கைப் புயல்



திருமண வாழ்க்கையிலே சந்தேகப்புயல் அடித்தாலே
திண்டாடும் குடும்பங்களை பாரினிலே பாராயோ!
கோடுவரை செல்லும் கொடுமையைத்தான் பாராயா!
விதி என்று விடுவதா சதி என்று சொல்வதா?


கணவர்- மனைவிக்கிடையே சந்தேகம் ஒன்று வரக்கூடாதே
குடிப்பழக்கம் உள்ள துணைவர் துன்பித்தால் குதிப்பாரே
தூரநின்று வேடிக்கை பார்ப்பதை நிறுத்திடுவோமே
விநயமாகப் பேசி தீர்வைக் கண்டிட வேண்டுமே!

சகோதர உறவு வாழ்க்கையில் ஒருமுறையல்லவா
சச்சரவுகள் ஏற்படுவது சகஜமல்லவா?
பணத்தால் பந்த பாசத்தால் ஏற்படலாமே
காணி சொத்துக்களால் சொந்தங்கள் பிரியலாமே!

உறவுகளின் தொல்லையால் ஊரை விட்டே போகலாமே
உந்தன் வாழ்க்கையில் நிம்மதியைத் தேடுவாயே!
ஊரார் சொல்வதை உன்னிப்பாய் கேட்காதே!
உனக்கென்று வாழ்க்கையை நீயே தீர்மானிப்பாயே!

பெ.தனா, தெல்லிப்பழை


## ஊசிகள் கைகொடுக்குமா?



பேரிடரொன்று கொடிய நோயாக
போகுமிடங்களையெல்லாம்
தன்னுள் ஆக்கிரமித்து வாழ்விடங்களை எல்லாம்
இறுகச் சுற்றிவளைத்து மானுடர்களை அடக்க
மாண்டுபோகும் நிலையில்
ஊசிகள் கைகொடுக்குமா?
அன்றேல் கை விரிக்குமா?
கொடிய நோய் பல வடிவங்களை எடுத்து
உக்கிரமாய் உறுமிக்கொண்டிருக்க
தொற்றுக்களிலிருந்து
தெளிந்துவிட்டோமென்று வலிமை கொண்டோர்
கர்ச்சித்துக் கொண்டிருக்க உலகை அளக்கும் தகுதி
நமக்கில்லை என்று நம்மவர்கள் நொந்து கொண்டிருக்க
மானிடர்களின் ஏக்கங்களைக் களைய
ஊசிகள் கைகொடுக்குமா?
அன்றேல் கைவிரிக்குமா? மீண்டெழும் முயற்சிகள்
முகிழ்ந்து ஊசித்திருவிழா ஊரெங்கும் காட்சி கொடுக்க
யாமெல்லாம் மகிழ்ந்தளித்த வாழ்க்கைக்கு
ஊசிகள் வரமாகுமா, அன்றேல் சாபமாகுமா?
எம்மை வாழவிடு எமக்கு வழிவிடு
உந்தன் பெரும் பசிக்கு எம்மை இரையாக்காதே
அங்கே போய்விடு அவர்களும் மனிதர்கள்தான்...

த.ஐங்கரன்
கிளி/ பூநகரி ஸ்ரீ வி.வி

## மௌனத்தின் தேடல்- 532



## வறுமையின் கொடுமை

போர் தந்த பரிசால்
தலைவனை இழந்த தலைவிதியால்
நெஞ்சுரம் கொண்டு
குடும்பத் தலைமை ஏற்று
வறுமையின் கொடுமையால்
உதிரத்தை வியர்வையால் சொரிந்து
அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
பசியால் வாடிய பிள்ளையின்
பசித்துன்பம் போக்க
தலைமேல் பாரக்கல்லு சுமந்து
பிள்ளை பசிபோக்கும் அன்னை நீ
பாரதி கண்ட புதுமைப்பெண்ணே
பராசக்தியின் வடிவமே

கும்பவாழியன்
உடுப்பிட்டி

## வாழ்வு வளமாவது எப்போது?

வாட்டி வதைத்திடும் வெயிலிலும்
தீண்டிடும் அரவங்களின்
கொடூரத்திலும்
கொட்டிடும் குளவிகளின்
கொடிய கொடுமையிலும்
கொழுந்து பறிக்கும் மலையகத்து
மக்களின் சுமைகள் மிகுந்த வாழ்வு
வளமாவது எப்போது?

தங்கத்தமிழன், காரைநகர்

## தன்மானம் காத்திடு

கொரோனா வைரஸை விட
கொடியவர்கள் இந்த காமுகர்கள்
காமுகன் கையில் சிக்கிவிடாது
விரைந்து செல் மகளே
வீரப் பெண்ணாக- உன்
உயிரையும் மானத்தையும் காப்பாற்று
இல்லையேல் துஷ்பிரயோகத்தில்
இறந்தவர்களின் எண்ணிக்கையில்
நீயும் அடங்கிவிடுவாய்
வீரத்தை நெஞ்சில் வைத்து
விரைந்து ஓடிவிடு
தன்மானத் தமிழ் மகளாக

சி.கஜா,முரசுமோட்டை

## மௌனத்தின் தேடல்- 533



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நீதி தேவதை...

போரால் கொடுமை, புலம்பெயர்வு காணாமை
ஆக்கல், கொடும் நீதி அடிமை தனை நீங்கா
ஆக்கிரமிப்பு பசிக்கு படைப்பலம் மரணதண்டனைக்கு
மலர்மாலை மகிழ்வு மந்திரிப்பதவி நீதி தேவதை
மரணித்து நெடுங்காலம் இங்கே பெண்மை பிழைக்கட்டும்

கந்தபாலன், நல்லூர்

## சுமைதாங்கி யாரோ?

வறுமையை விரட்டியே ஒழித்திட
திடத்துடன் பாறாங்கல்லை சுமந்து
உழைத்து குழந்தைகளின்
பசிப்பிணியைப் போக்கிட
துடித்திடும் பெண்ணின்
தலைச்சுமையை மிஞ்சிடும்
மனச்சுமைதனை தாங்கிடும்
சுமைதாங்கி யாரோ

மங்களம் மனோரஞ்சன்
கல்முனை-02

## சேலை முடிச்சவிழ்க்கும்

குடிகாரக் கணவனுக்கு குடும்பம் தரவந்தாயோ
மிடிதாரும் மகவுக்கு மெய்ப்பணாய் வந்தாயோ?
சேலை முடிச்சவிழ்த்து
சில்லறைக்கு வாரும் சோம்பல்
சோதரனுக்கு உடன்பிறப்பாய் வந்தாயோ
மீளாக்கடன் வட்டிக்கு
விரட்டியதால் வந்தாயோ

த.சிவகாமி,
நல்லூர்

## வறுமைக்கு இட்ட...

ஆற்றா வறுமைக்கு ஆற்றும் முயற்சி இதா
கூற்றுவனே வந்தாலும் குறுகிப் பிச்சை எடுத்தல்
கோலமெடுக்காமல் இது வறுமைக்கு இட்டவாய்
அடைப்பா வாழ்க பெண்மை போற்றிட மனிதம் மாறட்டும்

தமிழின்தாசன், தாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பெருமழையின் துயரங்களும் பாடங்களும்

**'இது மிக மோசமான வெள்ளம்' என்று சொல்லியிருக்கிறார் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங். சீன அரசும் ஆய்வாளர்களும் புதிய திட்டங்களுடன் வரக்கூடும். இந்த வெள்ளத்திலிருந்து சீனா மட்டுமல்ல, உலக நாடுகளும் தங்களுக்கான படிப்பினைகளைப் பெற வேண்டும்.**



ஜூலை 17 அன்று தொடங்கியது அந்தப் பெருமழை. ஜூலை 20 அன்று உக்கிரமடைந்தது. நாளதுவரை வடிய வில்லை. இன்னும் ஜெங்ஜோ நகரம் வெள்ளக் காடாகத்தான் இருக்கிறது. சீனாவின் மையப் பகுதியில் அமைந் திருக்கும் ஹெனான் மாநிலத்தின் தலைநகர் இது. மஞ்சள் நதிக்கரை நகரம்.

ஜூலை 20 அன்று மாலை 4 மணிக் கும் 5 மணிக்கும் இடைப்பட்ட ஒரு மணி நேரத்தில் பெய்த மழையின் அளவு 202 மில்லிமீற்றர் (8 அங்கு லம்). ஜூலை 17 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட மூன்று நாட்களில் பெய்த மழை 640மிமீ. ஜெங்ஜோ நகரில் ஓராண்டில் பெய்யக்கூடிய சராசரி மழை யளவு 640மிமீ. அதாவது, ஆண்டு முழுதும் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் பெய்தது. அதில் மூன்றில் ஒரு பங்கு ஒரு மணி நேரத்திற்குள் கொட்டித்தீர்த்தது.

வீதிகளில் வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் பொம்மைகளைப் போல் மிதந்தன. கட்டடங்கள் பலவற்றுள் வெள்ளம் புகுந்தது. மின்சாரமும் தண்ணீரும் இணையமும் தடைப்பட்டன. ஜெங்ஜோ நகரைச் சுற்றியுள்ள 12 நகரங்களும் பல்வேறு கிராமங்களும் பாதிக்கப்பட்டன. 5 இலட்சம் ஏக்கருக்கு மேல் பயிர்கள் பாழாகிவிட்டன. அணைக் கட்டுகள் நிரம்பி வழிகின்றன. இலட்சக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங் களுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக இருக்கலாம். இதுவரை 70இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக் கின்றனர்.

### அரசு சொல்லும் காரணங்கள்

இப்போது இரண்டு கேள்விகள் எழு கின்றன. முதலாவதாக இப்படியொரு பெருமழையை நிர்வாகம் எதிர்பார்க்க வில்லையா? ஹெனான் மாநிலத்துக்குக் கோடையில் பெருமழை என்பது புதிய தல்ல. பொதுவாக, அது சூறாவளியுடன் சேர்ந்து வரும். இந்த முறை இன்-ஃபா என்று பெயரிடப்பட்ட சூறாவளி, பல்லா யிரம் மைல்களுக்கு அப்பால் மையம் கொண்டிருந்தபோதே இந்தப் பெருமழை நகரைத் தாக்கிவிட்டது. இது எதிர்பாரா தது. வானிலை மையத்தால் முன்ன தாகக் கணிக்க முடியவில்லை.

இரண்டாவது கேள்வி, நகரின் மழை நீர் வடிகால்கள் என்னவாயின? அவை போதுமானவையாக இல்லையா? இத ற்கு நகராட்சி பதிலளித்திருக்கிறது. 'சீனாவின் பல நகரங்களும் இருநூறா ண்டு வெள்ளத்தைக் கடத்திவிடக்கூடிய வடிகால்களைக் கொண்டவை. ஆனால், இந்த மழை ஆயிரம் ஆண்டுகளில் பெய்திராத பேய் மழை' என்பது அந்தப் பதில். ஜெங்ஜோ நகரத்தின் மழைமானி கள் 1951இல் நிறுவப்பட்டவை. அதாவது, கடந்த 70 ஆண்டுகளில் பெய்த மழைக் குத் தான் கணக்கு இருக்கிறது. அப்படியா னால் அதை வைத்துக்கொண்டு, எப்படி இருநூறாண்டு வெள்ளம், ஆயிரமாண்டு மழை என்றெல்லாம் சொல்கிறார்கள்?

குறைவான ஆண்டுகளுக்கு மட் டுமே தரவுகள் இருந்தாலும் வானி யியலாளர்களும் பொறியியலாளர்களும் ஐம்பது ஆண்டுகளில், நூறாண்டுகளில் பெய்வதற்குச் சாத்தியமுள்ள அதிகபட்ச மழையைக் கணக்கிடுவார்கள். இவை முறையே ஐம்பதாண்டு மழை, நூறா ண்டு மழை எனப்படும். இந்த அடிப்ப டையில்தான் 'இருநூறாண்டு மழை க்கான வடிகால்களை அமைத்திருந் தோம், ஆனால் இது ஆயிரமாண்டு மழை' என்கிறது நிர்வாகம். விரைவில், இந்தப் பேரிடர் குறித்துக் கூடுதல் தரவுகளோடு ஆய்விதழ்களில் கட்டு ரைகள் வெளியாகும். அப்போது, 'ஆயிர மாண்டு மழை' என்கிற நகராட்சியின் கூற்று சரிதானா? என்பதில் தெளிவு ஏற்படலாம்.



### ஆய்வாளர்கள் சொல்லும் காரணங்கள்

எனில், சர்வதேச ஆய்வாளர்கள் வேறு இரண்டு காரணங்களைச் சுட்டு கிறார்கள். முதலாவதாக, சீனாவில் அதிகமான எண்ணிக்கையில் கட்டப்பட் டிருக்கும் அணைகள். இவை ஆறு குளங்களை இணைக்கும் நீர்வழிப் பாதைகளின் இயல்பான போக்கை மாற்றிவிட்டன, அவற்றின் திறனை வெகுவாகக் குறைத்துவிட்டன.

இரண்டாவதாக, பருவநிலை மாற்ற மும் புவிவெப்பமாதலும், உலகின் பல இடங்களில் பெய்யும் மாமழைக்குக் காரணமாக அமைகின்றன என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள். உலகம் முழுமையிலிருந்தும் வெளியே றும் பசுங்குடில் வாயுக்களில் 27வீதம் சீனாவைச் சேர்ந்தவை. இதில் சீனா தான் முதலிடம் வகிக்கிறது (அமெரிக்கா இரண்டாவது இடம் 11வீதம், இந்தியா மூன்றாவது இடம் 6.6வீதம்). தான் ஒரு வளரும் நாடு, தனக்குப் பசுங்குடில் வாயுக்களைக் குறைப்பதில் கூடுதல் காலஅவகாசம் தர வேண்டும் என்று சீனா சர்வதேச அரங்கில் கோரிவரு கிறது. ஆனால் இயற்கை, கால அவகா சம் வழங்கத் தயாராக இல்லை. இனி யும் காலம்தாழ்த்தாமல் சீனா இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண் டும். மேலும், நூறாண்டு, இருநூறா ண்டு மழையைக் கணக்கிடும் வரை முறைகளையும் பருவநிலை மாற்றத் துக்கு இணங்க மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

### நமக்கான பாடங்கள்

இந்தப் பெருமழையில் நமக்கான பாடங்களும் இருக்கின்றன. முதலா வதாக, கிராமங்களைக் காட்டிலும் நகரங்களில்தான் வெள்ளத்தின் பாதி ப்பு அதிகமாக இருக்கும். ஏனெனில், நகரங்களில்தான் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் மேலும், அங்கு வெள்ள த்தை உறிஞ்சக்கூடிய மண் தளங்கள் குறைவாக இருக்கும். ஆகவேதான், உலகின் பல நகரங்களிலும் நூறாண்டு, இருநூறாண்டு வெள்ளத்தைக் கடத் தும் வடிகால்கள் அமைக்கப்படுகின்றன.

அரசு, ஒவ்வொரு நகரின் மழை யளவு குறித்தும் விரிவாக ஆராய வேண்டும். இப்போதைய வீதியோர வடிகால்களின் கொள்ளளவைப் பரிசோ தித்து அவற்றை மேம்படுத்த வேண் டும். வீதியோர வடிகால்கள் பிரதான வடிகால்களோடு முறையாக இணை க்கப்பட வேண்டும். இந்தப் பிரதான வடிகால்கள்தான் நீரைக் கடலிலோ ஆற்றிலோ சேர்ப்பிக்கும். இவை நூறா ண்டு அல்லது இருநூறாண்டு வெள்ள த்தைக் கடத்தத்தக்கதாக வடிவமை க்கப்பட வேண்டும். இரண்டாவதாக, புவிவெப்பமாதல் என்பது இனியும் சூழலியலாளர்களின் பிரச்சினை மட்டும் அன்று.

'இது மிக மோசமான வெள்ளம்' என்று சொல்லியிருக்கிறார் சீன ஜனா திபதி ஜி ஜின்பிங். சீன அரசும் ஆய்வா ளர்களும் புதிய திட்டங்களுடன் வரக்கூடும். இந்த வெள்ளத்திலிருந்து சீனா மட்டுமல்ல, உலக நாடுகளும் தங்களுக்கான படிப்பினைகளைப் பெற வேண்டும்.

**த இந்து**

நீங்களும் எழுத்தாளரே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்.
• அரசியல் • ஆன்மிகம் • பொழுதுபோக்கு • "வியாசர்" கேள்விகள்
• வாழ்வில் மறக்க முடியாத விடயங்களை எழுதுங்கள்.
தரம் கண்டு பிரசுரிக்கப்படும். "உங்களை உலகறிய செய்கிறோம் நாம்"
முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
சிறு "பத்தி" எழுத்துக்கள் வரவேற்கத்தக்கது.
ஆசிரியர், வலம்புரி, சங்குநாதம்,
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அமெரிக்காவில் ஓங்கி வளர்ந்த நரபலி

பதினைந்தாம் நூற்றாண்டில் மத்திய மெக்சிக்கோ பிராந்தியத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்த ஆஸ்டெக் மக்கள், கொடூர குணத்துக்கும் இரத்த வெறிக்கும் பேர் போனவர்கள். கடந்த ஆண்டு அகழ்வாய்வாளர்கள் அசாதாரணமான பழங்கால மனித மண்டை ஓடுகளால் கட்டப்பட்ட கோபுரத்தை கண்டுபிடித்த போதுதான் இவர்களின் மிருக குணம் தெரிய வந்தது.

**யார் இந்த ஆஸ்டெக் மக்கள்?**

பொதுவாக தற்போது ஆஸ்டெக் என அழைக்கப்படும் கலாசாரத்தில் நவாட்டெல் மொழி பேசும் மெக்சிக்கோ மக்கள், தற்போது மெக்சிக்கோ நகரம் அமைந்திருக்கும் இடத்தில் டெனோச்டிட்லான் நகரில் வாழ்ந்தார்கள்.

டெனோச்டிட்லான், டெக்ஸ்கோகோ, த்லாகோபான் போன்ற பழங்குடியினர் இணைந்து நிறுவிய பேரரசை பற்றி விபரிக்க வேண்டுமானால், அதை "ஆஸ்டெக்" என்கிற ஒற்றை வார்த்தை மூலம் குறிப்பிடலாம்.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்சிக்கோ பழங்குடிகள் மத்திய மெக்சிக்கோ பகுதிக்கு வந்தனர். டெக்ஸ்கோகோ ஏரியின் சேறும் சகதியும் நிறைந்த தீவில் டெனோச்டிட்லான் நகரை அவர்கள் நிறுவினர்.

தங்களுக்காக குரல் கொடுப்பவரான லாடோஆனியின் ஆளுகையில், செயற்கையாக உருவான தீவில் மக்காச்சோள சாகுபடியில் புதிய வேளாண் முறைகளை நேர்த்தியான வகையில் இந்த மக்கள் மேம்படுத்தினர்.

பிபில்டின் எனப்படும் உயர்குடி பிரபுக்கள் மற்றும் மாசெகுவால்டின் எனப்படும் சாதாரண மக்களும் கலந்ததாக ஆஸ்டெக் சமுதாயம் காணப்பட்டது. டெசுகாட்லிபோகா, டிலாலோகா, கிட்சால்குவாடலி போன்ற தெய்வங்களின் வழிபாடு இச்சமூகத்தின் ஓர் அங்கமாக விளங்கியது.


இந்த மக்கள், தங்களுடைய வாழ்விடத்தை பாதுகாக்க வலுவான படைபலத்தை கொண்டிருந்தனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் டெனோச்டிட்லான், டெக்ஸ்கோகோ, த்லாகோபான் ஆகிய நகரங்களில் வாழும் பழங்குடியினர் ஆண்ட அரசுகள் இணைந்த மூவர் கூட்டணி, தங்களுக்கு அருகருகே இருந்த நகரங்களை கைப்பற்றி ஆஸ்டெக் பேரரசை நிறுவினர். பின்னர் இவர்கள் தங்களை மெக்சிக்கோ என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

அந்தக்கால கட்டத்தில் டெனோச்டிட்லான் நகர மக்கள் தொகை இரண்டு இலட்சத்தில் இருந்து மூன்று லட்சத்துக்கு உள்ளாக இருந்தது.

இந்த டெனோச்டிட்லான் நகரில் மிகப்பெரிய ஆலயமான படிக்கட்டு வடிவிலான பிரமிட் கோயில் இருந்தது. இங்குதான் பெருமளவிலான நரபலி கொடுக்கப்பட்டது. இந்த நரபலி நடைமுறை மெசோ அமெரிக்க கலாசார காலம் முதல் வழி வழியாக பின்பற்றப்பட்டு வருகிறது.

ஆனால் மத்திய மெக்சிக்கோவின் பெரும்பாலான இன குழுக்கள், அடிப்படை கலாசார பண்புகளை பகிர்ந்து கொண்டதால் ஆஸ்டெக் கலாசாரத்தை அடையாளப்படுத்தும் பண்புகள், ஆஸ்டெக்குகளுக்கு மட்டுமே உரியவை எனப் குறிப்பிட்டுக் கூறி விட முடியாது. இதே காரணத்திற்காக ஆஸ்டெக் நாகரிகம் என்ற கருத்துத் தோற்றத்தை, ஒரு பொது இடை அமெரிக்க நாகரிகத்தின் சமகால நாகரிகமாக அறிய முடிகிறது.



**ஆஸ்டெக் சாம்ராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது எப்படி?**

ஆஸ்டெக் நாகரிகத்தின் வீழ்ச்சி கொடூரமான குடியேற்றவாதத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அறியப்படுகிறது. ஹெர்னான் கோர்டெஸ் தலைமையிலான ஸ்பெயின் படைகள் 1521 இல் மெக்சிக்கோவுக்குச் சென்றன.

ஆஸ்டெக்குகளின் எதிரிகளான ட்லெக்சகாலாக்களுடன் கூட்டுச்சேர்ந்து கொண்ட ஸ்பெயின் படையினர், ஆஸ்டெக் பேரரசனான இரண்டாம் மொக்டெஸுமாவை கொலை செய்தனர். எங்கெல்லாம் டெனோச்டிட்லான் இருந்தார்களோ அங்கெல்லாம் ஸ்பெயின் படையின் ஆதிக்கம் காணப்பட்டது.

இந்த போர் தாக்கத்துடன் தட்டம்மை, சின்னம்மை போன்ற நோய்களும் பரவியதால் சிறுபான்மையினராகி விட்ட பழங்குடிகள் அடியோடு மடிந்தனர். அத்துடன் ஆஸ்டெக் சாம்ராஜ்ஜியமும் முடிவுக்கு வந்தது.

**ஆஸ்டெக் ஆலயத்தில் நரபலி கொடுக்கப்பட்டது ஏன்?**

ஆஸ்டெக்குகள், "கடவுள் எதை எல்லாம் கொடுத்தாரோ அதை எல்லாம் அவருக்கே திருப்பித் தர வேண்டும்," என்பதை உறுதியாக நம்பினர்.

மனித குலத்தை உருவாக்க கடவுள்கள் தங்களையே தியாகம் செய்து கொண்டதாக புனையப்பட்ட கதைகளை அவர்கள் காலங்காலமாக பேசி வந்தனர்.

லால்டெகுட்லி என்ற ஒரு கதையில் தனது உடலை இரண்டாகப் பிளந்து நிலத்தை கடவுள் உருவாக்கியதாகவும் அதில் பிறந்த மனிதர்கள், தங்களுடைய இரத்தத்தை உணவாக அளித்து கடவுளுக்கு தங்களுடைய நன்றியை செலுத்தி வந்ததாகவும் கூறினர்.

இதுமட்டுமின்றி, உலகில் ஐந்து யுகங்கள் உள்ளதாகவும் தாங்கள் ஐந்தாவது யுகத்தில் இருப்பதாகவும் ஆஸ்டெக்குகள் நம்பினர்.

தங்களுக்காக உடலில் இருந்து இரத்தம் சிந்தி மனிதர்களை உருவாக்கிய கடவுளுக்கு கைமாறு செய்ய நரபலி ஒன்றே வழி என ஆஸ்டெக்குகள் நம்பினர். சூரியனுக்கு படையலாக மனித இரத்தம் வழங்கப்படாமல் போனால், உலகம் முடிவுக்கு வந்து விடும் என அவர்கள் ஆணித்தரமாக நம்பினர்.

பிற புனைவுக் கதைகளில் இடம் பெறுவது போல மனித நரபலி கொடுத்தால் பொன் கிடைக்கும், பொருள் கிடைக்கும், சக்தி கிடைக்கும், குழந்தைப்பேறு கிடைக்கும் என்பது போல சுயநலமாக இல்லாமல் மனித குலத்துக்கான நரபலியாகவே தங்களுடைய படையலை ஆஸ்டெக்குகள் கருதினர்.

மனித குலம் தழைக்க நரபலி அவசியம் என்று அவர்கள் நம்பினர். கடவுளுக்கு மனிதர்கள் பட்ட சமயக் கடன் என்பது போல அவர்கள் எண்ணினர்.

இந்த புனைக் கதைகளை நம்பி எவ்வளவு மனித உயிர்களை ஆஸ்டெக்குகள் காவு கொடுத்திருப்பார்கள் என்பதை புள்ளியியல் ரீதியாக கணக்கிடுவது கடினம். ஆனால், அவர்கள் வாழ்ந்த காலத்தில் நரபலிக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்தனர், அதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்று மட்டும் இங்கே பதிவு செய்கிறோம்.

**நரபலிக்கு மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்களா?**

நரபலி கொடுப்பதை ஒட்டுமொத்த ஆஸ்டெக் சமூகமே ஒரு புண்ணிய நோக்கமாகக் கொண்டிருந்தது. அதனால், நரபலிக்கு சிலர் தன்னார்வலர்களாக வந்தனர். சில நேரங்களில் போரில் கைப்பற்றிய நகரங்களில் வாழ்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களும் நரபலி கொடுக்கப்பட்டனர்.

சில நேரங்களில் ஐந்து பேர் ஒரே நேரத்தில் நரபலி கொடுக்கப்பட்டனர். சிலர் இறைவனுக்காக உயிர்ப் பலி கொடுக்க அவதரித்தவர்கள் என்ற பெயருடன் நரபலி கொடுக்கப்பட்டனர். முக்கிய திருவிழாக்களில் இந்த வகை நபர்கள் கொல்லப்பட்டனர்.

மனித குலத்துக்காக நடக்கும் உயிர்ப் பலியோ, போரில் கொல்லப்பட்டு ஏற்படும் உயிர்ப் பலியோ - அந்த மக்கள் அனைவரும் இறந்த பிறகு மதிக்கப்படுவார்கள் என்ற பொதுவான நம்பிக்கையை மெக்சிக்கோ மக்கள் கொண்டிருந்தனர்.

இது நவீன கால உயிர்த் தியாகம் செய்யும் இராணுவ வீரர்களின் தியாகத்துக்கு ஒப்பானதாக இருந்து வந்துள்ளது.

உயிர்த்தியாகம் செய்யாமல் சாதாரணமாக இறக்கும் மக்கள், "மிக்ட்லான்" என்ற இடத்துக்கு செல்வார்கள் என்றும் அது நரகம் போல இல்லாமல் இரவற்ற அசௌகரியமான சூழலைக் கொண்டிருக்கும் என்றும் அங்கிருந்தபடி மோட்சத்துக்கான வாழ்வை நோக்கி இறந்தவர்கள் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் என்ற ஐதீகத்தையும் மெக்சிக்கோ மக்கள் கொண்டிருந்தனர்.

அதுவே உயிர்ப்பலி மூலம் தியாகம் செய்தவர்களாக இருந்தால், அவர்கள் இறந்த பிறகு சூரியனுடன் நான்கு ஆண்டுகளும் பிறகு பட்டாம்பூச்சி போல சிறகடித்து மகிழ்ச்சியாக வாழ்வர் என்றும் பிறகு அவர்கள் சொர்க்கத்தில் சோமபானம் அருந்தியபடி களிப்புடன் இருப்பார் என்றும் அந்தப் பழங்குடிகள் நம்பினர்.

யதார்த்தத்தில், ஆஸ்டெக்குகள் வாழ்ந்த காலத்தில் நகரங்களைக் கைப்பற்றும் நோக்கிலும் கடவுளைப் போற்றுகிறோம் என்ற பெயரிலும் பல கொடூர கொலைகள் அந்த காலத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளன.

நகரங்கள் கைப்பற்றப்படும்போது ஒரு வீரனாக பிடிபடுபவர், தன்னுடைய தலைவிதியை துணிச்சலுடன் ஏற்கும் பக்குவமுடையவராக இருந்திருக்கிறார். பலி கொடுக்கப்பட்ட மற்றவர்கள், அடிபட்டும் உதைபட்டும் மரண மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும், அவர்களின் மரண ஓலத்துக்கு சுற்றி நின்றவர்கள் சாட்சியாக மட்டுமே இருந்ததை ஆஸ்டெக்குகளின் வரலாறு உணர்த்துகிறது.

-BBC-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்த புகைப்படம்

1951, மார்ச் 14. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் 72 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம், நியூ ஜெர்ஸியின் பிரின்ஸ்டன் சென்டரில் நடந்து கொண்டிருந்தது.

ஐன்ஸ்டீனின் நண்பர்கள், பத்திரிக்கையாளர்கள், புகைப்படக்காரர்கள் என சிலர் அதில் கலந்து கொண்டனர்.

அனைவரின் கமராவும் ஐன்ஸ்டீனை விதவிதமாக புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்க, எல்லோரும் உற்சாகமான முகத்துடன் காணப்பட்டனர்.



ஆனால்... புகைப்பட நிபுணராக இருந்த ஆர்தர் சச்சே மட்டும் சற்று பதற்றத்துடன் இருந்தார்.

"நம் பத்திரிக்கையில் வெளியிட, நல்ல புகைப்படம் ஒன்றுகூட கமராவில் சிக்கவில்லையே. விழா வேறு முடிந்து விட்டது. ஐன்ஸ்டீனும் கிளம்பத் தயாராக இருக்கிறார். இப்போது என்ன செய்வது...?"

கமராவை கையில் வைத்துக் கொண்டு, அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்தார் ஆர்தர். ஐன்ஸ்டீனை நெருங்க எவ்வளவோ முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை.

கொண்டாட்டத்தின் களைப்பில் இறுகிய முகத்துடன் காரில் ஏறினார் ஐன்ஸ்டீன்.

இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இன்று படமெடுக்க முடியாது என நினைத்துக் கொண்டே ஐன்ஸ்டீனின் கார் அருகே வேகமாக ஓடினார் ஆர்தர்.

"சேர்...பிளீஸ். நான் இன்று உங்களை சரியாகப்புகைப்படம் எடுக்கவில்லை. ஒரே ஒரு புகைப்படம் மட்டும் எடுத்துக் கொள்கிறேன். கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள்..." என சொல்லியபடியே கமராவை இயக்கத் தயாராக இருந்தார் ஆர்தர்.

உண்மையில் கமராவுக்கு போஸ் கொடுக்கும் மனநிலையில் அப்போது ஐன்ஸ்டீன் இல்லை.

மிகவும் பணிவுடன், "சேர்...கொஞ்சம் சிரிக்கலாமே..." என ஐன்ஸ்டீனிடம் ஆர்தர் சொல்ல, அப்போது ஐன்ஸ்டீன் என்ன நினைத்தாரோ தெரியவில்லை; திடீரென தனது நாக்கை வெளியே காண்பித்து பின்பு உள்ளே மடெக்கென இழுத்துக் கொண்டார்.

இதை சற்றும் எதிர்பாராத ஆர்தர் திகைத்துப் போய் நிற்க, அவரையே அறியாமல் அந்த நிகழ்வு அப்படியே புகைப்படமாக கமராவில் பதிவாகியிருந்தது.

அடுத்த நாளே இந்தப் புகைப்படம் மூலம் ஆர்தர் மிகவும் பிரபலமானார்.

"ஐன்ஸ்டீன் அப்போது மிகவும் சோர்வாக இருந்தார். இருந்தும் நான் புகைப்படம் எடுத்து விட வேண்டும் என உறுதியாக இருந்தேன். நாக்கை வெளியே நீட்டி அவர் போஸ் கொடுத்தை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மின்னல் வேகத்தில் எல்லாம் நடந்து விட்டது..." என ஒரு பேட்டியில் ஆர்தர் சொல்லியிருப்பார்.

ஐன்ஸ்டீனின் குறிப்பிட்ட இந்தப் படம் இன்றளவும் அவருக்கென தனி ஒரு அடையாளத்தை தேடித் தருகிறது.

உலகம் முழுக்க இருக்கும் பல சிறுவர்களுக்கு ஐன்ஸ்டீன் அறிமுகமாவது இந்தப் படத்தின் மூலம் தான்.

அதுசரி, புகைப்படம் வெளியான பின்பு அதைப் பற்றி ஐன்ஸ்டீன் சொன்னது என்ன? ஐன்ஸ்டீனை அந்தப் புகைப்படம் மிகவும் கவர்ந்திருக்கிறது. ஆர்தரை தொடர்பு கொண்டு பாராட்டியது மட்டுமல்லாமல், அதன் ஒன்பது பிரதிகளை அனுப்பும்படி கேட்டிருக்கிறார்.

அதில் தன் உருவத்தை மட்டும் தனியாக எடுத்து, ஸ்கையொப்பமிட்டு நெருங்கிய நண்பர்களுக்கு பரிசளித்திருக்கிறார்.

இன்றும் அந்த பிரதிகளை சிலர் வைத்திருப்பதாக தகவல்கள் அடிக்கடி வெளியாகின்றன. சமீபத்தில் அதில் ஒன்று, இந்திய மதிப்பில் சுமார் ஒரு கோடிக்கு ஏலம் போயிருக்கிறது.

தன்னுடைய எழுபத்து இரண்டாவது பிறந்த நாளில், அதாவது இறப்பதற்கு நான்கு வருடங்கள் முன்பு எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம் ஐன்ஸ்டீனை அடுத்தடுத்த தலைமுறைக்கு எளிதில் கொண்டு சேர்க்க உதவும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# வாங்க பழகலாம்... பெருந்தொற்றுக் கால நாகரிங்கள்

இந்த நிமிடம் வரைக்கும், கொரோனா அலை ஓயவில்லை. உலகம் முழுவதும்... கொரோனா வைரஸ் நம்முடன் தொடர்ந்து இருக்கப் போகிறது என்கிறார்கள் மருத்துவர்கள். இந்த நிலையில் உலகம் முழுக்க பின்பற்ற ஆரம்பித்திருக்கும் பெருந்தொற்றுக் கால நாகரிகம் (Pandemic Etiquette) பற்றி விளக்குகிறார் சென்னை மருத்துவக் கல்லூரியின் சமூக மருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் பிரியா.

**'வாடி செல்லம்', 'வாடா தங்கம்' போதும்!**

"வயதில் மூத்த விருந்தினர்களை, வணக்கம் சொல்லி வரவேற்பது நம் வழக்கம். கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்தால், விருந்தினர் நம்மையோ, நாம் விருந்தினரையோ கைகளை, தோளைத் தொட்டு வரவேற்பது தெரியும். இளைய் தலைமுறையினர் 'ஜென்டில் ஹக்' கொடுத்து நட்பையும் அன்பையும் பகிர்ந்து கொள்கிறார்கள். இன்னும் சில வருடங்களுக்கு இந்தத் தொடுதலையும் அணைப்பையும் தவிர்த்துவிட்டு, பெரியவர்களை 'ரொம்ப ஃப்ரெஷ்ஷா இருக்கீங்க' 'உங்க வீட்ல எல்லாரும் நல்லாயிருக்காங்களா' என்று சொன்னபடி வரவேற்கலாம். சிறியவர்களிடம் 'வாடி செல்லம்', 'வாடா தங்கம்' என்ற வார்த்தைகளில் மட்டும் அன்பை வெளிப்படுத்தலாம்.

**'கொரோனா பரப்பப் போறது யாரு?'**

கொரோனா எண்ணிக்கை குறைகிற நேரத்தில் உறவினர்களையோ, நண்பர்களையோ சந்திக்கச் செல்வோம். வெகுநாள் கழித்து நேருக்கு நேர் பார்க்கிற மகிழ்ச்சியில் உடனே முகக்கவசத்தை நீக்கி விடுகிறோம். அப்படி நீக்காவிட்டால், 'என்கிட்ட இருந்து உனக்கு கொரோனா வந்துடும்னு பயப்படுறியா? இல்ல உன்கிட்ட இருந்து எனக்கு வந்துடும்னு பயப்படுறியா' என்று கேலி செய்து முகக்கவசத்தை நீக்க வைக்கிறோம். இந்த இரண்டையும் தவிருங்கள்.

**இதுவல்ல விருந்தோம்பல்!**

நீரிழிவாளர்கள் விருந்தாளிகளாக வீட்டுக்கு வரும்போது, 'இன்னிக்கு ஒருநாள் ஒரேயொரு லட்டு சாப்பிட்டா ஒண்ணும் ஆயிடாது' என்று கட்டாயப்படுத்தி அவர்களை இனிப்புச் சாப்பிட வைக்கும் பழக்கம் பலருக்கும் உண்டு. நீரிழிவு போன்ற இணை நோய்கள் இருப்பவர்கள்தாம் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதால் இதைத் தவிருங்கள்.

**ஒன்லைனிலும் அட்சதை போடலாம்!**

மணவறையில் தாத்தா, பாட்டி அருகில் அமர, தாய்மாமன் சீர் செய்ய, அத்தை தாலி எடுத்துத் தர என்று உறவினர்கள் சூழ திருமணம் செய்வதுதான் நம் கலாசாரம். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் 'எல்லோருக்கும் அழைப்பிதழ் கொடுத்தே ஆக வேண்டும்' என்கிற அழுத்தம் ஒருபக்கம், 'அழைத்தவர்கள் எல்லோரும் வந்துவிட்டால் என்ன செய்வது' என்கிற பயம் மறுபக்கம் எனத் திருமண வீட்டார் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், இ-இன்விடேஷனையே பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளலாம். தாய்மாமன், அத்தை போன்ற நெருங்கிய உறவினர்கள் கூட தாங்களாகவே முன் வந்து 'நாங்கள் ஒன்லைனிலேயே அட்சதை போட்டு ஆசீர்வதிக்கிறோம்' என்று சொல்லலாம்.



**குழந்தைகளைக் கொஞ்ச வேண்டாம்!**

சின்னக் குழந்தைகளைத் தொட்டுக் கொஞ்சு வது, முத்தம் கொடுப்பது போன்றவற்றைத் தவி ருங்கள்.

**மரண வீடுக்குச் சென்றே ஆக வேண்டுமா?**

"நல்லதுக்குப் போகலைன் னாலும் கெட்டதுக்குக் கட்டாயம் போயிடணும்' என்பது நம் வழக்கம். இறப்பு நிகழ்ந்த வீட்டில் ஒரே ஒருவருக்கு கொரோனா இருந் தாலும் துக்க வீட்டுக்கு வந்த அனைவருக்குமே பரவி விடும். எனவே இந்தக் காலகட்டத்தில் இதையும் தவிர்ப்பதே சரி. வட்ஸ்அப் குரூப் ஆரம்பித்து அதில் இறந்தவரின் நல்ல இயல் புகளைப் பகிர்ந்து கொள் ளலாம். ஆறுதலாகவும் இருக்கும். மொத்தத்தில் அன்பு மாறாமல் நம்முடைய வழக்கங்களை மட்டும் மாற்றிக் கொள்வோம். இதுதான் பெருந்தொற்றுக் கால நாகரி கம்" என்கிறார் டாக்டர் பிரியா.

# வெற்றி பெற்றதும் வீரர்கள் ஏன் ஒலிம்பிக் பதக்கங்களை கடிக்கிறார்கள்?

ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் வீரர்கள், அந்தப் பதக்கத்தை தங்கள் வாயில் வைத்து கடிப்பது போன்ற புகைப்படத்தை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள். மைக்கேல் பெலப்ஸ், உசைன் போல்ட், சிமோன் பைல்ஸ் போன்ற பிரபல வீரர்கள் பலரும் ஏன் இப்படி செய்கிறார்கள்?

ஆரம்ப காலங்களில், பணப்பறிமாற்றத்திற்கு தங்கத்தை பயன்படுத்தும் வழக்கமே இருந்து வந்தது. இதனால் தங்கக்காசின் உண்மைத்தன்மையை அறிவதற்காக வியாபாரிகள் அதை கடித்துப் பார்த்து சோதிப்பார்கள். தங்கம் மிருதுவான உலோகம் என்பதால், லேசாக கடித்தால் கூட அதில் தடம் பதிந்துவிடும்.

அதற்காக, ஒலிம்பிக் சம்பியன்களும் தங்களுக்கு



அளித்த பதக்கத்தின் உண்மைத்தன்மையை சோதிக்கத்தான் இப்படி கடிக்கிறார்கள் என நினைத்து விடாதீர்கள். 1912 இற்குப் பிறகு ஒலிம்பிக்கில் வெல்லும் வீரர்களுக்கு சுத்தமான தங்கத்தில் செய்யப்பட்ட பதக்கங்கள் வழங்கப்படுவதில்லை. பிறகு ஏன் வீரர்கள் தங்கள் பதக்கத்தை கடிக்கிறார்கள்? எல்லாம் புகைப்படத்திற்காகத்தான். புகைப்பட கலைஞர்களின் தொல்லை தாங்க முடியாமல் தான், அவர்கள் கேட்டு கொண்டதற்காகவே இப்படி போஸ் கொடுக்கிறார்கள்.

பதக்கத்தைக் கடிப்பது போன்ற வீரர்கள் புகைப்படம் அடுத்தநாள் காலை பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் வெளிவரும்போது அதன் வீச்சே தனி. இதுபோன்ற புகைப்படங்களே மக்களின் கவனத்தை அதிகமாக ஈர்ப்பதோடு அதிக விற்பனையும் ஆகிறது.

2010 குளிர்கால ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற ஜேர்மனிய வீரர் டேவிட் மோய்லர், பதக்கத்தைக் கடிப்பது போன்று புகைப்படத்திற்கு போஸ் கொடுக்கையில் அவரது பல் உடைந்த சம்பவமும் நடந்தேறியுள்ளது. "புகைப்பட நிருபர் கேட்டுக் கொண்டதற்காக பதக்கத்தை கடித்தபடி கொஞ்ச நேரம் நின்றிருந்தேன். பின்னர் இரவு சாப்பிடும்போதுதான் என்னுடைய ஒரு பல்லை காணவில்லை என்று கவனித்தேன்" எனச் சிரிக்கிறார். வேறு எந்த வீரரும் இப்படி பல் மருத்துவரிடம் சென்று நாம் பார்த்ததில்லை. ஆனால் இப்படி பதக் கத்தை கடிப்பது ஒரு பாரம்பரியமாகவே ஒலிம்பிக்கில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

பிரபல டென்னிஸ் வீரர் நடால் கூட, கோப்பை வென்றதும் அதைக் கடித்தபடி புகைப்படத்திற்கு போஸ் கொடுப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது பதவிக்காலத்திற்கு தயாராகும் கோட்டாபய

"நரகத்துக்கான பாதை நன்னோக்கத்துடனேயே வகுக்கப்படுகிறது" என்ற மணிகொழி கோட்டாபய அரசாங்கம் நேர்மையான நோக்ககத்துடன் செயற்படுவதாக உரிமை கோரி கொள்கின்ற போதிலும், அதன் மோசமான செயற்பாடுகளுக்கு பிரயோகிக்கப்படக்கூடியதாகும்.

"செயல்வீரர்" என்றும் (புலிகள் இயக்கத்தை ஒழித்தமைக்காக)" ஒழித்துக் கட்டுபவர்" என்றும் புகழப்படுகின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலுக்கு முன்னதாக அவர் உறுதியளித்த " சுபீட்சமும் சீர்மையும் கொண்ட எதிர்காலத்தை "நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதில் தொடர்ந்து தடுமாறிக்கொண்டிருக்கிறார்.

"ஒழித்துக்கட்டுபவரின்" முயற்சிகளில் பெருமளவானவற்றை தற்போது தொடருகின்ற கொவிட்-19 பெருந்தொற்று பாதித்துவிட்டது என்பது வெளிப்படையானது. இடையறாது பரவும் தொற்றுநோய் கடந்த மாதம் 3 இலட்சம் என்ற எல்லையைத் தாண்டிவிட்டது. ஆனால், அந்த மாதத்தில் தினசரி சராசரி புதிய தொற்று 1504 மே 26 ஏற்பட்ட மிகவும் உயர்ந்த சராசரி தொற்றின் 47 சதவீதமாக இருந்தது என்பது ஒரு சிறிய ஆறுதலாகும்.

தொற்றுநோயினால் முடங்கிப்போன சுற்றுலாத்துறை, வெளிநாட்டு அனுப்பீடுகள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவை இன்னமும் மீட்சியடைய வேண்டியிருக்கிறது.

இது மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்திருப்பதுடன் அத்தியாவசிய பாவனைப்பொருட்களின் வலைகளை வானளாவ உயர்த்தியிருக்கிறது.

ஆனால், தொற்றுநோயோ அல்லது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளோ மூழ்கிக்கொண்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்பதற்கும் சுற்றுச்சூழலுக்கு நேசமான சமுதாயமொன்றை உருவாக்குவதற்கும் என்று கூறிக்கொண்டு கடுமையான சில நடவடிக்கைகளை ஜனாதிபதி அறிமுகப்படுத்துவதை தடுக்கவில்லை. சேதன பசளை பயன்பாட்டை பிரபல் யப்படுத்துவதற்கு இரசாயன பசளைகள் இறக்குமதி தடை, தொலைபேசிகள், வாகனங்கள் இறக்குமதி தடை ஆகியவை இதில் அடங்கும்.

ஜனாதிபதி கோட்டாபய தனக்கு விருப்பமான இராணுவ அதிகாரிகளை மேற்பார்வை கமிட்டிகளின் தலைவர்களாகவும் நிர்வாக பதவிகளுக்கும் நியமித்துக் கொண்டு ஏற்கனவே நாட்டை நிர்வகித்துக்கொண்டுவருகிறார்.

கிரிமினல் நடவடிக்கைகளுக்காக குற்றவாளிகளாகக் காணப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு மன்னிப்பு அளித்திருக்கும் ஜனாதிபதி அத்தகைய நடவடிக்கைகளுக்காக ஆயுதப்படைகளின் அதிகாரிகள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுகிறார்.

இவையெல்லாம் அவரது தலைமைத்துவத்தின் கீழ் நிர்வாகம் இராணுவமயப்படுத்தப்படுகின்றது என்ற பரந்தளவு சந்தேகத்தை கிளப்பியிருக் கின்றது.

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், ஓகஸ்டில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் ஒன்றும் ஆச்சரியத்தை தரவில்லை.

அதை இன்னொரு இராணுவமயமாக்கல் முயற்சியாக பலரும் நோக்குகிறார்கள். இராணுவமயமாக்கல் இப்போது



மதிப்புக்குரிய கல்வித்துறைக்குள் பிரவேசிக்கிறது.

இந்த சட்டமூலம் கடேற் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் ஒரு இராணுவ பயிற்சி நிறுவனமாக விளங்கும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை முழுமையான ஒரு பல்கலைக்கழகமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும். சட்டம், பொறியியல், முகாமைத்துவம் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் கல்வி கற்பதற்கும் மாணவர்களை இப்பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதை சட்டமூலம் விதந்துரைக்கிறது.

இந்த பல்கலைக்கழகம் இராணுவ அதிகாரிகளை கூடுதலாகக்கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படும். ஒன்பது பேரைக்கொண்ட ஆளுநர் சபையில் ஐந்துபேர் தற்போது சேவையில் இருக்கும் படை அதிகாரிகளாக இருப்பர்.

சட்டமூலத்தின் வார்த்தைப் பிரயோகங்கள் இந்த பல்கலைக்கழகம் ஒரு இராணுவ நிறுவனம் போன்று நிர்வகிக்கப்படும் என்பதை காட்டுகின்றன. மாத ஆரம்பத்தில் இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் உறுப்பினர்களால் சட்டமூலத்துக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட இயக்கத்தை அடக்குவதற்கு பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளில் இறங்கினர்.

ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் சிலர் கொவிட் சுகாதார ஒழுங்குவிதிகளை மீறியதாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து அந்த ஒழுங்கு விதிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிளம்பின.

பொருளாதாரம் ஒரு நெருக்கடியில் இருந்து இன்னொரு நெருக்கடிக்கு நொண்டி நகர்ந்துகொண்டிருக்கிறது. உலக நாடுகளினதும் நிறுவனங்களினதும் கடன் திருப்பிச்செலுத்தும் ஆற்றலை மதிப்பீடு செய்கின்ற சர்வதேச அமைப்பான "மூடீஸ்" கடந்த மாதம் இலங்கை பொருளாதார நிலைவரம் பற்றி இன்னொரு கவலைக்குரிய எதிர்வுகூறலைச் செய்திருக்கிறது.

பிணையில்லாமல் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்துவதில் இலங்கைக்கு இருக்கக்கூடிய ஆற்றலை மூடீஸ் படியிறக்கம் செய்திருக்கிறது.

இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு நிலவரம் நாடு கடன்களை மீளச்செலுத்துவதில் தவணை தவறக்கூடிய ஆபத்தை தோற்றுவிக்கக்கூடியதாகவுள்ளது என்று மூடீஸ் கூறியிருக்கிறது.

ஜூலை இறுதியில் முதிர்ச்சியடையவிருந்த 100 கோடி டொலர்கள் சர்வதேச பிணைமுறிகளை செலுத்திமுடிக்க அரசாங்கம் கடுமையாக பாடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் மூடீஸின் இந்த நடவடிக்கையை அநாவசியமானது என்று"ம் தவறான நேரத்திலானது என்றும் இலங்கை நிதியமைச்சு வர்ணித்திருக்கிறது.

இலங்கையில் முதலீட்டுச் சூழல் பற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை மட்டமான அபிப்பிராயத்தையே வெளியிட்டிருக்கிறது.

ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு போதுமான சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் இருக்கின்ற அதேவேளை, அவற்றின் நடைமுறைப்படுத்தல் பலவீனமானதாகவும் ஒழுங்கற்றதாகவும் பாரபட்சமானதாகவும் இருக்கிறது.

அமெரிக்க பங்குதாரர்களும் முதலீடு செய்யக்கூடியவர்களும் பெரிய உட்கட்டமைப்பு திட்டங்களிலும் அரசாங்கத்தின் கொள்வனவுகளிலும் ஊழல் பற்றி குறிப்பாக கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த பிரச்சினைகளை கவனிப்பதாக அரசாங்கம் உறுதி கூறியிருக்கின்றது. ஆனால், கொவிட்டுக்கு எதிரான நடவடிக்கைகளே முன்னுரிமை பெறுகின்றன. பிரதான கட்சிகள் அதிகாரத்துக்கு வந்த பின்னரோ அல்லது அதிகாரத்தை இழந்த பின்னரோ ஒன்றுக்கு எதிராக மற்றையது ஊழல் வழக்குகளை தொடர்ந்து முன்னெடுப்பதில்லை" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய இருளார்ந்த சூழ்நிலையில், ஜனாதிபதியின் இளைய சகோதரரும் ராஜபக்ஷ குடும்பத்தின் ஐந்தாவது உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவியேற்றிருக்கிறார்.

அமைச்சராக அவரது நியமனம் திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு அவர் வகிக்கின்ற செல்வாக்குமிக்க அரசியல் பாத்திரத்தை முறைசார்ந்ததாக மாற்றுவதாக மாத்திரமே அமைகிறது. அவர் அமெரிக்க பிரஜையாகவும் இருப்பது பற்றி யாருமே (எதிர்க்கட்சியும் கூட) கவலைப்பட்டதாக தெரியவில்லை.

நிதி எதுவும் இல்லாத நிதியமைச்சர் என்று தனது புதிய பதவியை பாராளுமன்றத்தில் பசில் ராஜபக்ஷ கிண்டலடித்தார். அது உண்மையான ஒரு கூற்றேயாகும். அரசியல் ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பட்ஜெட் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிய சிக்கலான பணி அவருக்கு இருக்கிறது.

அதேவேளை, வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைத்திருக்கும் இலங்கையர்கள் டிசம்பர் 31க்கு முன்னர் அந்த பணத்தை நாட்டுக்குள் கொண்டு வந்தால், அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றை பசில் தனது முதல் நடவடிக்கையாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவருகிறார்.

வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைத்திருப்போர் வரி அறவிடத்தக்க தங்களது பணத்தொகையை வெளியிட்டால் விசாரணைகளில் இருந்தோ அல்லது வழக்கு தொடுக்கப்படுவதிலிருந்தோ அவர்கள் பாதுகாக்கப்படுவர்.

ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பொருளாதார சுபீட்ச இலக்கை தற்போதைய பதவிக்காலத்தில் அடைய தன்னால் இயலாமல்போகும் என்று யதார்த்தமாக சிந்திக்கிறார் போலத்தெரிகிறது.

அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அண்மையில் சந்தித்த அவர் தனது முன்னுரிமைக்குரிய விவகாரங்கள் குறித்து பேசினார்.

தனது இலக்குகளை அடைய தனக்கு மேலும் ஐந்து வருடங்கள் இருக்கின்றன என்று கூறிய ஜனாதிபதி இரண்டாவது பதவிக்காலத்துக்கும் தேர்தலில் போட்டியிடவிருப்பதை சூசகமாக வெளிப்படுத்தினார்.

இலங்கையின் பெருவாரியான பிரச்சினைகளுக்கு முடிவைக்காண்பதற்கு இரண்டாவது பதவிக்காலம்கூட போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்.

இனங்களக்கு இடையிலான நல்லிணக்கம், புதிய அரசியலமைப்பு, மனித உரிமைகள் மீறல்களுக்கான பொறுப்புக்கூறுதல் என்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. இத்தகைய பின்புலத்தில் "த பிளேக்" என்ற தனது நூலில் பிரெஞ்சு அறிஞரான அல்பேர்ட் கேமஸ் கூறிய வார்த்தைகளே நினைவுக்கு வருகின்றன.

அவர் சொன்னார்: "மொத்தத்தில் மனிதர்களிடம் கெட்ட தன்மைகளைக் காட்டிலும் நல்ல தன்மைகளே அதிகம். அது எப்படியானாலும் அது அல்ல உண்மையான பிரச்சினை. அவர்கள் கிட்டத்தட்ட அறியாமை நிறைந்தவர்களாக உள்ளனர்.

அதைத்தான் நாம் குற்றம் அல்லது சிறந்த பண்பு எனக் கருதவும் செய்கிறோம். இதில் மிகவும் சகிக்க முடியாத குற்றம் என்னவெனில் ஒன்று குறித்து அறியாமை உடையவர்களும் கூட எல்லாம் தெரிந்தவர்களைப் போலக் காட்டிக் கொள்வதும், அதனூடாகக் கொலை செய்வதற்குத் தாங்கள் உரிமை உடையவர்கள் என உரிமை கோருவதும் தான்." சுலபமாக விடுபட இயலாமல் போகக்கூடிய "சகிக்க இயலாத இந்த குற்றத்துக்குள்" இலங்கை அகப்பட்டிருக்கிறது போல் தோன்றுகிறது.

-கேணல் ஆர்.ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## முதல் பலி

அது இப்பொழுது சாத்தியமல்ல. முதல் காரணம் இது சித்திரை மாதம். பௌர்ணமி போய் இன்று நான்காவது நாள். இந்த மாதத்துக்கு கோதாவரியுடன் கடலின் பேரலைகள் பனைமர உயரத்துக்கு மோதுகின்றன.

அந்த இடத்தை அணுக வேண்டாமென அரசாங்கப் படகுகளுக்கே உத்தரவு உண்டு. அப்படியே அந்த அபாயத்தை எதிர்த்த வெண்மதி கிளம்புமுன் மரக்கலங்களை அடையலாமென்றால் இடையே சுங்கச்சாவடி இருக்கிறது. சுங்கச் சாவடியில் நமது படகுகள் தேக்கப்பட்டு வெண்மதி கிளம்பிவிட்டால் அலைகள் உக்கிரம் மிக அதிகமாகிவிடும்.

அப்புறம் கோதாவரி கடல் சங்கம எல்லைக்குள் போவதைவிட பீமன் கையால் வெட்டுண்டு போவது மிகவும் சௌகரியமானது. ஆகையால் அந்த வழி பயனில்லை. பயனுள்ள ஒரே வழி கீழ்க்கோட்டை வாசல் ஒன்றுதான். அந்த வழியைத்தான் அமீர் குறிப்பிட்டான். அந்த வழியைத்தான் நானும் தேர்ந்தெடுக்கிறேன். அமீரின் நீர்க்குடங்கள் அவற்றுக்குப் பெரிதும் உதவுகின்றன.

அந்தக் குடங்களும் நாமும் செல்ல வேண்டிய முறையை அகூதா ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர் சுட்டிக் காட்டிய வீரர்கள் திட்டம்தான் சிறந்தது. நீர்க்குடங்களில் ஒளிந்து காஞ்சனாதேவி, அவர் பணிப் பெண்கள் இருவர், குணவர்மர் வரலாம், அமீர் வண்டி ஓட்டலாம். நானும் இளைய பல்லவனும் வண்டியின் பின்புறம் இருப்போம்.

இதெல்லாம் முன்னால் நாம் ஒப்புக்கொண்ட ஏற்பாடுகள். ஆனால் வண்டி கடலோரத்தை அடைவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. இதோ பாருங்கள் என்று கூறிவிட்டுத் தன் ஆள்காட்டி விரலால் சுவரிலிருந்த ஒரு பெரும் புள்ளியைச் சுட்டிக் காட்டினான்.

அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பாஷணைகளில் இளைய பல்லவன் கலந்து கொள்ளவில்லை. திட்டம் வெகு தெளிவாகப் புரிந்திருந்தது அவனுக்கு. அநபாயன் அந்தப் புள்ளியைத் தொட்டுக் காட்டியதும் தலையை மட்டுமே அசைத்தான் சோழர் படைத்தலைவன்.

ஆனால் காஞ்சனாதேவி தன் அஞ்சன விழிகளை அந்தப் புள்ளியின் மீது நிலைக்கவிட்டு, "அந்த




இடம் நாம் இப்பொழுதிருக்கும் அமீரின் வீடுதான்." என்றாள்.

"இல்லை அமீரின் வீட்டுக் கொல்லைப்புறம் இது. வீட்டுக்கு இதோ இரு குறிகள் போட்டியிருக்கிறேன்" என்று திருத்திச் சொன்ன அநபாயன், "இன்றிரவு சரியாக ஐந்தாவது நாழிகை துவங்கியதும் நீங்களும் உங்கள் தந்தையும் பணிப்பெண்களும் நீர்க்குடங்களில் பதுங்குவீர்கள்.

அமீரின் பெருவண்டி பன்னிரண்டு பெரும் குடங்களை ஏற்றிக்கொள்ளக் கூடியவை. ஆறு குடங்களில் நீர் இருக்காது. நீங்களிருப்பீர்கள். இன்று மாலைக்குச் சற்று முன்பாகவே அகூதாவின் கப்பல்களுக்கு நீர் சேகரிக்கும் படலம் துவங்கும்.

இரண்டு மரக் கலங்களிலிருந்தும் அகூதாவின் மாலுமிகளும் அடிமைகளும் நீர்க்குடங்களை ஊருக்குள் கொண்டு வந்து வண்டிகளில் கொண்டு போய்க் கொண்டிருப்பார்கள்..." என்றான் அநபாயன்.

"மிகவும் சரி. அப்பொழுதுதான் இந்த வண்டி வரும் போது சந்தேகம் இருக்காது. மற்ற வண்டிகளைப் போலவே இதையும் நினைப்பார்கள்" என்று அகூதா இடைமறித்துக் கூறினான்.

"ஆம் சீனத் தலைவரே! அப்பொழுது தான் சந்தேகம் ஏற்படாது. நாம் கூடிய வரையில் தைரியத்துடன் இந்த வீட்டின் கொல்லப்புறத்தை விட்டுக் கிளம்பலாம். அமீர் வண்டியோட்டுவதில் யாருக்கும் சந்தேகமும் ஏற்படக் காரணமில்லை. அப்படிச் சந்தேகம் ஏற்பட்டால் மூன்று இடங்களில் ஏற்படலாம்" என்ற அநபாயன், அந்த இடங்களைத் தன் விரலால் சுட்டிக் காட்டி, "முதல் இடம் கீழ்க்கோட்டை வாயில், இரண்டாவது இடம் அதை அடுத்துக் கடலலைகள் மோதும் கரைக்குச் செல்லும் பாதை, மூன்றாவது இடம் கடலோரம். இந்த மூன்று இடத்தில் எந்த தடை நேர்ந்தாலும் ஒரு பலி நிச்சயம்" என்று விளக்கினான்.

இதைக் கேட்டதும் அந்த அறையில் சில விநாடிகள் நிசப்தம் சூழ்ந்தது. 'திட்டத்தின் வெற்றிக்குப் பலி வேண்டுமா? பலி யாரைக் கொடுப்பது' என்ற கேள்விகள் அங்கிருந்த முகங்களில் எழுந்து தாண்டவமாடின. ஒரு முகத்தில் மட்டும் கேள்வி தாண்டவமாடவில்லை.

பதில் மட்டும் தாண்டவமாடியது. வெகு அலட்சியமாக ஆசனத்திலிருந்து எழுந்து பதிலை உதிர்த்த இளையபல்லவன் குரல் அந்த அறையை கணீரென்று ஊடுருவியது. "பலி இதோ இருக்கிறது.

அதுவும் முதல் பலி" என்று தன் மார்பில் கையை வைத்துக் காட்டிய அவன் நுதலில் வீரக்களை சுடர் விட்டது. இதழ்களில் வீர நகையொன்றும் தவழ்ந்தது. அது மட்டுமல்ல, "பலி கொடுப்பதானால் கொடுக்கும் இடம் அதோ" என்று தன் விரலையும் சுவரிலிருந்து கோடுகளை நோக்கிச் சுட்டிக் காட்டினான் இளையபல்லவன். அத்துடன் அநபாயனை நோக்கி, "இதைவிடப் பெரும் பாக்கியம் எந்த வீரனுக்கும் கிடைப்பது அரிது. இந்தப் பலியெனும் பாக்கியத்தை எனக்களியுங்கள் இளவரசே" என்று அபாரத் துணிவும் தியாக வேட்கையும் நிரம்பிய சொற்களை உதிர்த்தான் சோழர்களின் படைத்தலைவன்.

### கை சொன்ன கதை

அமீர் வீட்டு அந்தரங்க அறையின் வண்ணச் சுவரிலே சுண்ணக்கட்டி கொண்டு கோடுகள் தீட்டப்பட்டதுமே திட்டத்தின் விபரங்களைத் திண்ணமாகப் புரிந்து கொண்ட இளையபல்லவன், கிழக்குக் கோட்டை வாயிலைக் குறிப்பிட்டு, முதல் பலியை இந்த இடத்தில் கொடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியதன்றி, தன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று அந்த நரபலியாகத் தன்னை ஏற்க வேண்டுமென்று கேட்டதும் அந்த அறையில் பயங்கர மௌனமே ஒரு விநாடி நிலவியது.

அடுத்த விநாடி எழுந்த கேள்வியும் அங்கிருந்த ஆண் மக்களிடமிருந்து எழவில்லை. "கூடாது! கூடாது! யாரும் பலியாகக் கூடாது!" என்று காஞ்சனாதேவியின் கிள்ளைக் குரலே அந்த அறையில் ஊடுவிச் சென்றது.

பலி கொடுக்க வேண்டிய இடத்தைச் சுவரில் விரலால் சுட்டிக் காட்டி நின்ற அநபாயன் தன் ஈட்டி விழிகளை அந்தக் கடாரத்து இளவரசியின் பங்கஜ முகத்தின் மீது மிகவும் பரிதாபத்துடன் திருப்பினான்.

அவள் நிலை மீறி உணர்ச்சி பொங்கச் சொற்களை வெளியிட்டதன் காரணம் அவனுக்கு நன்றாகப் புரிந்தேயிருந்தது. 'இங்கு கடாரத்து இளவரசி பேசவில்லை. அவள் காதல் பேசுகிறது.' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட அநபாயன், "இந்தப் பலி கொடுத்தால் மற்றவர்கள் பிழைக்கலாம் தேவி. இல்லையேல் இன்னும் ஒரே நாளில் நாமனைவரும் கலிங்கத்தின் வாள்களுக்குப் பலியாவோம்" என்றான். "வாழ்ந்தால் கூடிவாழ்வது. வீழ்ந்தால் கூடிவீழ்வது என்ற தத்துவம் உயரியதல்லவா?" என்று கேட்டாள் காஞ்சனாதேவி பளிச் சென்று.

இம்முறை அநபாயனுக்குப் பதில் இளையல்லவனே பதில் கூறினான். காஞ்சனாதேவி இருந்த பக்கம் திரும்பிக் கூடப் பாராமல் எதிரே சுவரிலிருந்த கோடுகளிலேயே கண்களை நாட்டிக் கொண்டு "தனி மனிதர்களுக்கு அந்தபத் தத்துவம் சரி தேசி நாடுகளுக்கல்!" என்று பதில் கூறினான் இளையபல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாசமலர்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பாடியவர் : ஜமுனா ராணி



பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்
நான் அதை பாடவில்லை ஹோய்
பாவையின் முகத்தை பார்த்தார் ஒருவர்
நான் அதை பார்க்கவில்லை

கூடொன்று கண்டேன் குயில் வர கண்டேன்
குரலால் அழைக்கவில்லை ஹோய்
குரலால் அழைக்கவில்லை
ஏடொன்று கண்டேன் எழுதிட கண்டேன்
நான் அதை எழுதவில்லை ஹோய்
நான் அதை எழுதவில்லை
குணமும் அறிவும் நிறைந்தவர் என்றார்
நான் அதை சொல்லவில்லை
நான் அதை சொல்லவில்லை

(ஆடி முடிந்தது ஆவணி வந்தது
பாடிய பைங்கிளி உள்ளம் மலர்ந்தது
நாடகம் போலே தூது நடந்தது
காதலர் கண்ணாலே)

பாவையின் முகத்தை பார்த்தார் ஒருவர்
நான் அதை பார்க்கவில்லை
பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்
நான் அதை பாடவில்லை ஹோய்
பாவையின் முகத்தை பார்த்தார் ஒருவர்
நான் அதை பார்க்கவில்லை

நான் சொன்ன வார்த்தை அவர் மட்டும் கேட்டார்
சிரித்தார் பேசவில்லை ஹோய்
சிரித்தார் பேசவில்லை
அவர் சொன்ன வார்த்தை நான் மட்டும் கேட்டேன்
சிரித்தேன் காணவில்லை ஹோய்
சிரித்தேன் காணவில்லை
இருவர் நினைவும் மயங்கியதாலே
யாரோடும் பேசவில்லை
யாரோடும் பேசவில்லை

(ஆடி முடிந்தது ஆவணி வந்தது
பாடிய பைங்கிளி உள்ளம் மலர்ந்தது
நாடகம் போலே தூது நடந்தது
காதலர் கண்ணாலே)

பாவையின் முகத்தை பார்த்தார் ஒருவர்
நான் அதை பார்க்கவில்லை
பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்
நான் அதை பாடவில்லை ஹோய்
பாவையின் முகத்தை பார்த்தார் ஒருவர்
நான் அதை பார்க்கவில்லை....

# சாப்பிடுவதே தொழில்

"அவர் வயதுப் பெண்கள் ஒரு நாளில் சராசரியாக 2,000 கலோரி உணவை எடுத்துக்கொள்வார்கள் என்றால் இவர் 23,000 கலோரி வரை எடுத்துக்கொள்கிறார்.

ஒரே நேரத்தில் 48 சிக்கன் துண்டுகள், 6 கிலோ நூடில்ஸ், 137 வாழைப் பழங்கள் என அசால்டாக அதகளம் செய்கிறார்.

பெரும்பாலும் ஆண்களே கலந்துகொள்ளும் சாப்பாட்டுப் போட்டிகளில் ஒரு பெண்ணாக டஃப் கொடுக்கிறார் கினோஷிடா.

36 வயதான இவர் ஜப்பானிய உணவுகள் மட்டுமன்றி இந்தியா, தாய்வான், மெக்ஸிக்கோ, கொரியா எனப் பன்னாட்டு உணவுகளை ருசிப்பதையும் வீடியோவாக்குகியிலோ எந்த மாற்றமும் ஏற்படாததுதான். 5.2 அடி உயரமும் 50 கிலோவுக்கும் குறைவான எடையும் உள்ள கினோஷிடாவுக்கு இயல்பா கவே மெலிந்த தேகம்.

அதிகம் சாப்பிடுவதால் எந்த உடல் உபாதைகளும் ஏற்படவில்லையாம். "என் உடற்கூறுக்கு (Anatomy)

**"அவர் வயதுப் பெண்கள் ஒரு நாளில் சராசரியாக 2,000 கலோரி உணவை எடுத்துக் கொள்வார்கள் என்றால் இவர் 23,000 கலோரி வரை எடுத்துக் கொள்கிறார். ஒரே நேரத்தில் 48 சிக்கன் துண்டுகள், 6 கிலோ நுடில்ஸ், 137 வாழைப்பழங்கள் என அசால்டான அதகளம் செய்கிறார்".**



தான் நன்றி சொல்ல வேண்டும். மருத்துவரிடம் பரிசோதித்தபோது என் வயிறு மிகவும் தனித்தன்மையுடன் இருப்பதாகவும் நான் சாப்பிடும் அனைத்தையும் நிரப்பிக்கொள்ளும் வகையில் அது விரிந்து கொடுப்பதாகவும் கூறினார்" என்பவர், தன் உடல் நிலையை மருத்துவரிடம் பரிசோதிப்பதையும் சாட்சி வீடி யோவாக வெளியிட்டுள்ளார்.

வீடியோக்கள் ஷூட் செய்யாத நேரத்தில் சராசரி மனிதர்கள் சாப்பிடும் அளவே அவரும் சாப்பிடுகிறார். அது ஒருபோதும் தனக்குப் போதுமானதாக இருக்காது என்றாலும் உடல்நலம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகக் குறைவாகவே சாப்பிடுவதாகக் கூறு கிறார்.

"என் சிறுவயதில் ஒரு நாள் கூட வயிறு நிறைய நான் சாப்பிட்டதே இல்லை" என்ப வர் 5.49 மில்லியன் சப்ஸ் கிரைபர்களுடன் அதிக வரு மானம் ஈட்டும் யூடியூப் செலி பிரிட்டியாக மாறியிருக்கிறார். சிறு வயதில் போதிய உணவு கிடைக்காததால் உளவியல் ரீதியாக அவர் உணவுக்கு அடிமையாகியிருக்கலாம்.

அவர் சராசரி மனிதர்களை விட அதிகம் சாப்பிடுவதற்கு இதுவும் காரணமாக இருக்கலாம் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள்.

"சும்மா சாப்பிட்டு சாப்பிட்டுத் தூங்குற...", "சாப்பிடுறதைத் தவிர வாழ்க்கைல ஏதா வது உருப்படியா செய்யுறியா?" - யார் மீதாவது வசைச் சொற்களை பிரயோகிக்கும் போது சாப்பாட்டையும் துணைக்கு அழைத்துக் கொள்வோம். ஆனால், சாப்பிடுவதையே தன் கரியராக மாற்றி, யூடியூப் சனலையும் தொடங்கி பிரபலமாகியிருக்கிறார் ஜப்பானைச் சேர்ந்த யுக்க கினோஷிடா.

'சாப்பிடும் புரொபஷனல் போட்டியாளர்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் கினோஷிடா ஆரம் பத்தில் ஜப்பானில் பொதுமக் கள் மத்தியில் நடத்தப்படும் சாப்பாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வந்தார். 100 பர்கர் களை ஒரே நேரத்தில் சாப்பிடும் வீடியோவை வெளியிட்டு 2014 ஆம் ஆண்டு தன் யூடியூப் சனலை (Yuka Kinoshita) தொடங்கினார். ஃபுட் ரெவ்யூ, சாப்பாட்டுப் போட்டி என புரொமோஷன் செய்தும் வருமான

ம் ஈட்டுகிறார்.

அவர் வயதுப் பெண்கள் ஒரு நாளில் சராசரியாக 2,000 கலோரி உணவை எடுத்துக்கொள்வார்கள் என்றால் இவர் 23,000 கலோரி வரை எடுத்துக்கொள்கிறார். ஒரே நேரத்தில் 48 சிக்கன் துண்டுகள், 6 கிலோ நூடில்ஸ், 137 வாழைப்பழங்கள் என அசால்டாக அதகளம் செய்கி றார். கினோஷிடா ஒரு நேரத்தில் சாப்பிடுவது சராசரி மனிதர்கள் ஒரு வாரத்துக்கு எடுத்துக்கொள்ளும் ஒட்டுமொத்த உணவு. அதிக உணவுகளை வேகமாகச் சாப்பிடுவது இவரது ஸ்பெஷல்.


கினோஷிடாவின் வீடியோ க்கள் டிரெண்டு ஆக காரணம், எத்தனை கிலோ உணவை ஒரே நேரத்தில் சாப்பிட்டாலும் அவருடைய தோற்றத்திலோ, எடை

### கினோஷிடாவுக்கு ஒரே குறிக்கோள்தான்...

"ஜப்பானிலிருக்கும் அனைத்து ரெஸ்டோரண்ட் உணவுகளையும் ருசித்துவிட வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளிப்போகும் ஆர்.ஆர்.ஆர். திரைப்படம்



தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய 5 மொழிகளில் பிரமாண்டமாக உருவாகியுள்ள திரைப்படம் ஆர்.ஆர்.ஆர்.

ராஜமவுலி இயக்கியுள்ள இப்படத்தில் ராம்சரண் தேஜா, ஜூனியர் என்.டி.ஆர், அஜய் தேவ்கன், ஆலியா பட் உள்ளிட்டோர் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. சமீபத்தில் கூட இப்படத்தில் இருந்து, நட்பு எனும் பாடல் அனிருத் குரலில் பாடி வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது.



மேலும் வருகிற ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி 5 மொழிகளில் பிரமாண்டமாக இப்படத்தை வெளியிடவும் திட்டமிட்டு இருந்தனர்.

இந்நிலையில் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி இப்படம் வெளிவராது என்றும், அடுத்த வருடம் ஜனவரி 26 ஆம் திகதி தான் இப்படம் வெளிவரும் என்றும் தகவல் கூறப்படுகிறது.

ஆனால் இதுகுறித்து, படக்குழுவிடம் இருந்து அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## சிலம்பரசனின் புதிய பட போஸ்டர்




# அமைதி பட திரை விமர்சனம்

ஈழத்தமிழர்களான கௌதம் மேனனும், பாபி சிம்ஹாவும் போர்ச் சூழலில் எல்லையோரம் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர். அந்தச் சமயத்தில் ஒரு சிறுவன் எல்லைப் பகுதியைக் கடக்க முயல்கிறான். இதைப் பார்த்த பாபி சிம்ஹா, அந்தச் சிறுவனைப் பிடித்து விசாரிக்கின்றார். எல்லைக்கு அப்பால் உள்ள ஒரு வீட்டில் தனது தம்பி மாட்டிக் கொண்டதாகவும், அவனை மீட்க தான் செல்வதாகவும் அந்தச் சிறுவன் கூறுகிறான்.

'நீ அங்கு சென்றால் உன்னை கொன்று விடுவார்கள்' என அந்த சிறுவனை எச்சரிக்கும் பாபி சிம்ஹா, அவனுக்காக ரிஸ்க் எடுக்க துணிகிறார். எல்லைக்கு அப்பால், அந்த



சிறுவன் கூறிய இடத்துக்கு உயிரைப் பணயம் வைத்து செல்லும் பாபி சிம்ஹாவுக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது. அது என்ன? என்பதே படத்தின் மீதிக்கதை.

கௌதம் மேனனும், பாபி சிம்ஹாவும் ஈழத்தமிழர்களாக நடித்துள்ள



னர். வழக்கமாக ஆங்கிலம் கலந்த தமிழை பேசும் கவுதம் மேனன், இந்தப் படத்தில் ஈழத்தமிழை பேசி அசத்தி இருக்கிறார். பாபி சிம்ஹாவும் நேர்த்தியாக நடித்துள்ளார். சிறுவன் தருணும் இயல்பாக நடித்து அசத்தி உள்ளார்.

'அமைதி'யை மையமாக வைத்து இப்படத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ். போர்ச் சூழலில் இருக்கும் பதற்றத்தை நேர்த்தியான திரைக்கதை மூலம் திறம்பட கையாண்டுள்ளார். சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசையும், ஸ்ரேயாஸ் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் படத்திற்கு பலமாக அமைந்துள்ளன.

# ஊடகவியலாளராக சிவகார்த்திகேயன்



நடிகர் சிவகார்த்திகேயன் தற்போது தமிழ் சினிமாவின் டாப் நடிகராக விளங்குபவர், இவரின் திரைப் படங்கள் தொடர்ந்து ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வெற்றியடைந்து வருகிறது.

இதனிடையே அடுத்ததாக இவர் நடிப்பில் டாக்டர், அயலான் உள்ளிட்ட திரைப்படங்கள் வரிசையாக வெளியாக உள்ளது, இது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சிவகார்த்திகேயன் தற்போது 'டான்' என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை சிபி சக்கரவர்த்தி என்பவர் இயக்கி வருகிறார். இப்படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு தற்போது பொள்ளாச்சியில் நடைபெற்று வருகிறது

இப்படத்தின் ஷூட்டிங் ஸ்பாட் எடுக்கப்பட்ட ஒரு சில புகைப்படங்கள் இணையத்தில் கசிந்துள்ளது. அதில் சூரி பைக் ஓட்டுவது போன்றும் அவரின் பின்னால் சிவகார்த்திகேயன் பைக்கில் உட்கார்ந்து இருப்பது போன்ற காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

மேலும் சிவகார்த்திகேயன் கழுத்தில் ஒரு கமரா இருப்பதை அடுத்து அவர் இந்த படத்தில் ஒரு போட்டோ கிராபர் அல்லது பத்திரிகையாளர் வேடத்தில் நடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெஸ்ட் கிரிக்கெட்டான டெஸ்ட் கிரிக்கெட்டில் வெல்லப்போகும் அணி எது?



இலங்கையிடம் வாங்கிய அடியின் மனவலிக்கும், அதீத கொண்டாட்டங்கள் நிறைந்த ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட்டுக்கும் நடுவில், வெள்ளை ஆடையில் உலா வரும் உண்மையான கிரிக்கெட்டைக் காண இருக்கிறோம். இந்திய கிரிக்கெட் காதலர்கள்; அவுஸ்திரேலியத் தொடருக்கு அடுத்தபடியாக, ஆவலுடன் எதிர்நோக்கும் தொடர், இந்தியா, இங்கிலாந்தில் ஆடும் டெஸ்ட் தொடர்கள்தான்.

அவுஸ்திரேலியாவின் பவுன்சர்கள் முன்வைக்கும் அதே சவாலினை, இங்கிலாந்தின் டியூக் பாலின் ஸ்விங் குகளும் சரிசம அளவில் வைக்கும். இதையும் தாண்டி, ராகுல் டிராவிட் தொடங்கி, ஹோலி வரை, ஃப்ளின் டாஃப் தொடங்கி, ஆண்டர்சன் வரை, எல்லோருக்குள்ளும் தீர்க்கப்படாத கணக்குகளும், பரிசல் செய்யப்படாத பகையும், அதை நேர் செய்வதற்கான யுத்தங்களும் களத்தில் நடந்தேறி, போட்டியின் சுவாரஷ்யத்தை வேறு தளத்துக்கு எடுத்துச் செல்லும்.

இங்கிலாந்தில் ஒரு டெஸ்ட்டில் வெல்வதையே இந்தியா, சாதனையாகப் பார்க்கும் சூழ்நிலைதான் இது வரையிலும் நடந்திருக்கிறது. இங்கிலாந்து மண்ணில், இந்தியா ஒரு தொடர் வெற்றியைப் பதிவு செய்து, 14 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அப்படி இருக்க, ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், இந்தியாவின் பலம், பலவீனம், வெற்றி வாய்ப்புகள் என்னென்ன.

### காயக் கதைகள்!

சிராஜின் அற்புதப் பந்து வீச்சில், டெஸ்ட் தொடங்குவதற்கு முன்பே, தனது அணியைச் சேர்ந்த இரு விக்கெட்டுகளை இழந்து விட்டது இந்தியா. ஏற்கனவே, வாஷிங்டன் சுந்தர், சிராஜால், விரலில் காயம்பட்டு இந்தியா திரும்பிய நிலையில், தற்போது, மயங்க் அகர்வாலும் சிராஜின் ஷார்ட் போலினால், தலையில் காயம் பட்டு, முதல் டெஸ்ட்டில் இருந்து விலகி உள்ளார். "கரம் சிரம் சிராஜிடம் பத்திரம்" என சக வீரர்களையே சொல்ல வைத்ததோடு, தனது ஸ்விங் கிங் திறனாலும், ரெட் போல் கிரிக்கெட்டில் அவருடைய ரெகார்டுகளாலும் தவிர்க்க முடியாத வீரராகி விட்டார் சிராஜ்.

### :பேப் 4 இல் இருவர்!

ஹோலியின் சதத்துக்கான காத்திருப்பு, மாதங்களைத் தாண்டி, ஆண்டுக் கணக்கைத் தொட்டுவிட்டது. இத்தொடரில், பத்து இன்னிங்ஸ்களில் களமிறங்க இருக்கும் ஹோலி, அதில் நிச்சயம் ஒன்றல்ல பல சதங்களை அடிக்க வேண்டுமென்பதே ரசிகர்களின் ஆசை.

### ஓப்பனர்களின் ஓப்பனிங் தகராறு!

இந்தியாவின் ஓப்பனர்கள் ஸ்லாட்டில், ஒன்றில் ரோஹித்தின் பெயர் எழுதப்பட வேண்டும் என்பது எழுதப்படாத விதி. எனினும், அந்த மற்றொருவர் யார் என்ற குழப்பம் நீடித்தது. கில் இல்லாத நிலையில், மயாங்க் அகர்வாலும் காயத்தால் விலக, கே.எல்.ராகுலைத் தவிர அது வேறு யாராக இருக்க முடியும்?! ராகுலைப் பொறுத்தவரை, 2018 இல் இங்கே வைத்து சதம் அடித்த பின்பு, தன்னை நிரூபிக்க, போதுமான போட்டிகள், அவருக்குக் கிடைக்கவில்லை. அப்படி இருக்க, இந்தத் தொடர், அவருக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். இன்னமும் சொல்லப் போனால், அயல் நாடுகளில், டெஸ்ட் போட்டிகளில், தன்னை நிலைநிறுத்திக் கொள்ள போராடும் ரோஹித்துக்கும் இது ஒரு முக்கிய தொடர்தான்.

### துளைகளுள்ள கப்பல்!

இந்தியாவின் பட்டிங் லைன் அப், ஏழு அல்லது எட்டாவது வீரர் வரை நீளுமென்றாலும் அது எந்தளவுக்கு வலிமையாக இருக்கிறது என்பது தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கப் போகிறது.

### தொடரும் டெயில் எண்டிங் சோகம்!

இந்தியாவால், எண்ட் கார்டு போட முடியாத முக்கிய பிரச்சினை டெய்ல் எண்டர்கள் பிரச்சினைதான். இந்தியாவின் பௌலர்கள் டாப் 3 வீரர்களைக் கூட, சுலபமாக வீழ்த்துவார்கள். ஆனால், பின்வரிசை வீரர்களை அனுப்புவது தான் அவர்களுக்குக் கடினமான காரியம். அதேநேரத்தில் இந்திய வீரர்கள், பட்டிங் செய்யும் போதும், மற்ற அணிகளைப் போல், டெய்ல் எண்டர்கள் இணைந்து, 60-80 ரன்கள் குவித்தது எல்லாம் இங்கே எட்டாவது அதிசயமே.

### அஷ்வினா, ஜடேஜாவா?

இங்கிலாந்து என்னதான் வேகப் பந்து வீச்சுக்கு ஆதரவளிக்கும் மைதானங்கள் என்றாலும் பொதுவாக அங்கே ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பரில் நிலவும் தட்பவெப்ப சூழல், ஸ்பின்னருக்கு கைகொடுக்கும். அதனால், ஸ்பின்னர்களது பங்கும் முக்கியமானதாகிறது. இந்தியாவைப் பொறுத்த வரை, நம்பத்தகுந்த ஆல் ரவுண்டராக, தன்னை பலமுறை ஜடேஜா நிரூபித்திருக்கிறார், அவருக்கு இணையாக தற்சமயத்தில் அஷ்வினுடைய செயற்பாடும் சிறப்பாகவே இருக்கிறது. கவுன்ட்டி போட்டியிலும் அதனைக் காட்டி இருந்தார் அஷ்வின். எனவே இந்த இருவரில் யாரென்பது அணிக்குக் கடினமான முடிவே!

### ஹோலிக்கு செக்!

பட்ஸ்மேனாக மட்டுமின்றி, கப்டனாகவும் தன்னை நிரூபிக்கும் அவசியம் ஹோலிக்கு உள்ளது. ஏனெனில், டெஸ்ட் சம்பியன்ஷிப்பினை இழந்ததில் இருந்து அவருக்கு எதிராக எழுப்பப்படும் கேள்விகளுக்கான ஒரே பதில், ஒரு பெரிய வெற்றியாக மட்டுமே இருக்க முடியும். எனவே அதையும் கருத்தில் கொண்டே ஹோலி செயற்படுவார்.

### கிரீன் டாப் விக்கெட்டுகள்!

பச்சைப் பசேலென்ற புல்தரைகள், இந்தியாவை, நான்கு வேகப் பந்து வீச்சாளர்களோடு களமிறங்கத் தூண்டலாம். அப்படி நடந்தால், இஷாந்த், பும்ரா, ஷமி, சிராஜ், முதன்மைத் தேர்வாக இருப்பார்கள்.

### டாப் ஆர்டர் வீரர்கள் திணறல்!

இங்கிலாந்துக்கு சமீப காலமாக, டாப் ஆர்டர் வீரர்களின் பட்டிங் திருப்தி கரமானதாக இல்லை. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற இந்திய தொடரில் இருந்து, அதன்பின் வந்த எல்லாப் போட்டிகளிலும் இது தான் நிலைமை. இது அவர்களுக்கு மிகப் பெரிய தலைவலியாக இருந்து வருகிறது.

### ஸ்டோக்ஸ் இல்லா குறை!

இங்கிலாந்தைப் பொறுத்தவரை, பென் ஸ்டோக்ஸ் மிகமிக முக்கியமானவர். இதையேதான், ரூட்டும் குறிப்பிட்டிருந்தார். அவர் இல்லாத நிலையில் அங்கே உருவாகி இருப்பது பெரிய வெற்றிடமே. இது இங்கிலாந்துக்கு மிகப்பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

### ஆண்டர்சன் என்னும் ஆக்கிரமிப்பாளன்!

இந்தியாவுக்கு எதிராக, இதுவரை 118 விக்கெட்டுகளை சாய்த்துள்ள ஆண்டர்சன், காலம் காலமாக பெரிய அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறார். ஹோலியை மட்டும் இதுவரை ஐந்து முறை ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார் ஆண்டர்சன். 2018 தொடரில் ஹோலி ஆண்டர்சனை சிறப்பாக சமாளித்திருந்தாலும் இந்த முறை என்ன நடக்கும் என்பதைப் பொருத்திருந்தான் பார்க்க வேண்டும். டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய சாதனைக்குரிய மூன்றாவது இடத்தை, கும்ப்ளே உடன் ஆண்டர்சன். பகிர்ந்து கொண்டுள்ளார். ஆண்டர்சன். ஸ்டூவர்ட் பிராடும், இந்தியாவிற்கு எதிராக 70 விக்கெட்டுகளை வீழ்த்தி, அச்சுறுத் துகிறார். இந்த இருவருமே இந்திய பட்ஸ்மேன்களுக்கு நெருக்கடி கொடுப் பார்கள்.

சமீப காலமாக, பிளேயிங் லெவனை, முன்னதாகவே அறிவிப்பதை டிரெண்டாக மாற்றிக் கொண்டிருந்த இந்தியா, இந்த முறை, டாஸின் போது அறிவிப்போம் என்று சொல்லி இருக்கிறது. ஆண்டர்சன், போட்டிக்கு முந்தைய பேட்டியில், "இந்தியா, பிட்ச் புல் நிறைந்ததாக இருப்பதைப் பற்றிக் கேள்வி எழுப்பக் கூடாது.

நாங்கள் இந்தியாவுக்குச் சென்ற போது, அவர் களுக்குத் தகுந்தாற் போல் தான் களம் இருந்தது" என்று தொடர் தொடங்குவதற்கு முன்னதாகவே, உரசல்களுக்கும் மோதல்களுக்குமான முன்னோட்டத்தைக் காட்டியுள்ளார். இங்கிலாந்தில் 14 ஆண்டுகால தோல்விக்கு முற்றுப் புள்ளி வைக் குமா ஹோலியின் படை... உங்கள் கருத்து என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பெருஞ்சுவர்

சுவர்களைக் கட்டும் பணி சீனாவின் மிக முக்கியமான மூன்று அரச வம்சங்களான சின் ஹான் மிங் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து நடந்தது.

தொடக்க காலக் கட்டத்தில் மண், மரம், கற்கள் ஆகியவற்றால் கட்டப்பட்ட இந்த சுவர் பின்னர் செங்கல், சுண்ணாம்புக் கற்கள், ஓடுகள் இவைகளால் நவீன தொழில்நுட்பத்தின் உதவியோடு வலுப்படுத்தப்பட்டது.


சீனாவை ஒன்றுபட்ட நாடாக உருவாக்க முக்கிய காரணியாக இருந்தவர் சின் வம்சத்து அரசன் 'சின்' சிஹுஹவாங். (இவர்களது வம்சத்து பெயர் தான் காலப் போக்கில் சீனாவாக மாறியது).

13 வயதிலேயே அரியணை ஏறிய சின் 21 வயதிலேயே பலம் பொருந்திய அரசனாக தன்னை மாற்றிக் கொண்டார். அவரது 39 வயதுக்குள் சீனாவின் ஒட்டுமொத்தப் பகுதிகளும் அவரது ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. புத்திக்கூர்மையும் ஆளுமைத் திறனும் ஒருங்கே பெற்ற சின், சீனாவை உருவாக்கிய சிற்பி என்று புகழ்ப்படுகிறார்.

சின் சிஹுஹவாங் கட்டடங்கள் கட்டுவதிலும் மண் சிற்பங்களை உருவாக்குவதிலும் விருப்பம் கொண்டவர். அவரது கல்லறையை சுற்றிலும் அவரது விருப்பப்படி பாதுகாப்புச் சிப்பாய்கள் நிற்பது போன்ற 6 ஆயிரம் மண் சிற்பங்கள் (டொரகோட்டா) வைக்கப்பட்டுள்ளன. இவரது காலத்தில் தான் சீன எல்லையின் சிறு சிறு சுவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மிக நீளமான சுவர் எழும்பியது.

மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் மிக நீளமான அமைப்பான 'சீனப்பெருஞ்சுவர்' சுமார் 6400 கி.மீ.தூரத்துக்கு நீண்டு இன்று உலகெங்கும் உள்ள மக்களை ஈர்த்து வருகிறது. கொரியாவுடனான சீன எல்லைப் பகுதியில் யாலு நதிக்கரை அருகே தொடங்கும் இந்த சுவர் கோபி பாலைவனம் வரை அமைக்கப்பட்டுள்ளது. சிறு சிறு சுவர்களாக கட்டப்படும் போதும் சரி ஒருங்கிணைப்பட்ட போதும் சரி கட்டுமானப் பணியில் இலட்சக்கணக்கான மக்களை பலி வாங்கிய இந்தச் சுவரை ஒரு சாரார் உலகின் மிக நீளமான மயானம் என்று குறிப்பிடுகின்றனர்.

சுமார் 9.8 மீ.உயரமும் 5 மீ. அகலமும் கொண்ட இந்த சுவரின் இணைச் சுவர்கள் மற்றும் ஆங்காங்கே மலைத் தொடர்களுக்கு ஏற்றாற்போல் உட்பகுதிகளுக்குள் கட்டப்பட்ட துணைச் சுவர்களையும் கணக்கிட்டால் ஒட்டுமொத்தமாக 21,196 கி.மீ.நீளம் உடையது இச்சுவர்.



சீனப் பெருஞ்சுவரில் உள்ள 'வைப் டவர்'

இந்த சுவர் அமைந்திருக்கும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மொத்தம் ஒன்பது பிரிவுகளாக (படாலிங், பீகிங் குபெய்கு, மிய்யான் யு, சிமிட்டய், ஷிவாங்குவலன், ஜியுனய் குவான், ஹாங்குவா சாங், ஜியான் கு, ஜின் ஷின் லிங்) பிரித்துள்ளனர். இடைக்காலத்தில் இயற்கைச் சீற்றங்களாலும் பொதுமக்கள் தங்கள் தேவை கருதி சுவரை உடைத்துக் கற்களை எடுத்துச் சென்றதாலும் சில பகுதிகள் சீர்குலைந்து போயின.

இருந்தாலும் தற்போதைய சீன அரசின் சுற்றுலாத்துறை மிகச் சிறப்பாக சீனப் பெருஞ்சுவர்ப் பகுதிகளைப் பராமரித்து வருகிறது. 1987 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு சீனப் பெருஞ் சுவரை புராதனச் சின்னமாக அறிவித்தது.

பெருஞ்சுவர் எத்தனை நீளமோர் அத்தனை நீளம் அதற்குப் பின்னே உலவும் சுவாரசியமான கதைகள். மனிதர்கள் எந்த தேசத்திலிருந்தாலும் எந்தக் கலாசாரத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் நம்பிக்கைகள், உணர்வுகள் அனைத்தும் வித்தியாசமின்றி ஏதோ ஒரு கோட்டில் இணைந்து விடுகின்றன.

சீனப்பெருஞ்சுவரின் ஓரிடத்தில் 'அழுகைக்கல்' என்று குறிப்பிடப் படும் மலைப் பகுதியில் உள்ள பாறைகளில் சில காலடித்தடங்கள் அழுத்தமாகக் காணப்படுகின்றன.

அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த மக்கள் அந்த இடத்தை பயபக்தியுடன் வணங்கி வருகின்றனர். அந்த காலடித்தடங்கள் கி.மு. 250 களில் வாழ்ந்த மெங்க் கியாங்க் நு என்ற பெண்ணுடையவை என்று அந்தப் பகுதி மக்களால் கருதப் படுகிறது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2375

### சோமிகா

கல்யாண வீடுகளில் "கெட்டிமேளம்" என்ற சத்தத்தைவிட



"பந்தி ரெடி" என்ற சத்தமே இனிமையானது

### யுவன்

கழுவி ஊத்திட்டு காப்பி குடுத்தா அது "ஐ" கடை



காப்பி குடுத்திட்டு கழுவி ஊத்தினா அது "கம்பனி மீட்டிங்"

### றஹ்மான்

2 k கிட்ஸ்: "லவ் பண்ற விடயத்த அப்பாக்கிட்ட சொல்ல பயமா இருக்குன்னா"




90S கிட்ஸ்: "சைக்கிள்ல போகும் போது செருப்பு கழண்டுவிழுந்ததையே சொல்ல பயந்தவங்க நாங்க, போவியா"

### பிரகாஷ்




### சந்தோஷ்

me: செல்லம் நான் செத்துட்டா என்ன பண்ணுவ?
lover: ஏன்டா இப்புடி பேசுற நானும் செத்திடுவேன்



மச்சான் நான் செத்துட்டா என்ன பண்ணுவ?
friend: உண்மையாவே செத்துட்டியான்னு check பண்ணுவேன்

### ஆதி

ஏன்டா டாக்டர், வக்கீல்னு ரெண்டு பொண்ணுக ஜாதகமும் வேண்டாம்னு தரகர்கிட்ட சொல்ற?



ஆமா மச்சி வக்கீல்கிட்டயும் டாக்டர்கிட்டயும் பொய் பேசக் கூடாதாம் அதனாலதான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 257

## கொரோனா பெருந் தொற்று நிலையை வெற்றிகொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

3 ஆம் உலக மகா யுத்தம் என வர்ணிக்கப்படும் கொரோனா நெருக்கடி நிலை இன்னும் சில வருடங்களுக்கு தொடரப் போகிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இன்னும் பலபல அலைகள், முடக்கல்கள், தளர்த்தல்கள், கட்டுப்பாடுகள், தட்டுப்பாடுகள், புதியவகை திரிபுகள், தடுப்பூசிகள், புதிய புதிய திட்டங்கள் மாற்றங்கள் என இந்த சிக்கல் நிலை சில ஆண்டுகளுக்கு தொடரப் போகின்றது.



இந்த நிலையை மனதில் கொண்டே எமது சுகாதார சமூக பொருளாதார நிலைகளை தக்க வைத்து வலுப்படுத்தும் திட்டங்கள் தீர்மானிக்கப்பட வேண்டி இருக்கிறது.

இந்த திட்டங்கள் தனி மனிதன், குடும்பம், ஊர், பிரதேசம், நாடு என பல மட்டங்களிலும் நிகழ வேண்டி இருக்கிறது. அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாக கருத்திலெடுப்போம்.

1. சமூக இடைவெளி, முகக்கவசம், கைகழுவுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகளை கொரோனா அலை எழுந்தாலும் தாழ்ந்தாலும் தொடர்ச்சியாக கடைப்பிடிக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்துதல்.

2. தடுப்பூசிகளை தயங்காமல் போடுவதுடன் மற்றவர்களையும் போடுமாறு ஊக்கப்படுத்துதல்.

3. மிகப் பாரிய பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்நோக்கி இருப்பதால் அநாவசிய செலவுகள் அனைத்தையும் நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். தனி மனிதன், குடும்பம், நிறுவனங்கள், ஆலயங்கள் என அனைத்து மட்டங்களிலும் இது கடைப்பிடிக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

4. உள்ளூர் விவசாய உற்பத்திகளை ஊக்கப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றிக்கு கிராம மட்டத்திலே புதிய யுத்திகளை வகுக்க வேண்டிய நிலை இருக்கிறது.

5.கோவில்களினூடாக கொரோனா பரவும் நிலை அவதானிக்கப்படுகிறது. இதன்மூலம் பல குருமாரையும் இழந்திருக்கின்றோம். அதற்காக கோயில்களுக்குச் செல்ல வேண்டாம், கும்பிட வேண்டாம் என நீண்டகாலத்திற்குத் தடைவிதிப்பது ஆரோக்கியமாக அமையாது. இது பலரின் உள ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது. எனவே தொற்று ஏற்படாத வகையிலே கோயில் நடவடிக்கைகள், பூசைகள் என்பன திட்டமிடப்பட வேண்டி இருக்கிறது. இதற்காக புதிய முறைகளை அறிமுகம் செய்ய முடியும்.

6. கற்றல் செயற்பாடுகள் பாரிய தாக்கத்திற்கு உட்பட்டிருக்கிறது. பல மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை கைவிடும் நிலை எழுந்திருக்கிறது. இணையவழிக் கல்வி முறையும் பலரை சென்றடைவதில்லை. அத்துடன் இதனால் மாணவர்களின் உடற்பயிற்சி நிலையும் மன ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

இந்த சிக்கல் நிலையைக் கையாள்வதற்கு பெற்றோர்களின் பெரும் பங்களிப்பு முக்கியமானதாக நிற்கிறது.

- மாணவர்களை கல்வியைத் தொடர ஊக்குவித்தல்.
- இணையவழி கற்றலை கண்காணித்தல்.
- வீடுகளில் சிறுவர்களின் உடற்பயிற்சியை ஊக்குவித்தல்.
- அவர்களின் மன ஆரோக்கியத்தைக் கருத்திலெடுத்தல்.



போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது.

1. நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக மக்களின் உடற்பயிற்சி நிலை வெகுவாகக் குறைந்திருப்பது அவதானிக்கப்படுகிறது. இதனால் தொற்று நோய்களின் தாக்கவீதம் அதிகரித்து வருகிறது எனவே,

- வீட்டுத்தோட்டம் செய்வதை ஊக்குவித்தல்.
- போக்குவரத்திற்கு துவிச்சக்கரவண்டி பாவனையை அல்லது நடத்தலை ஊக்குவித்தல்.

போன்ற செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டி இருக்கிறது.

1. உள்ளூரிலே உற்பத்தியாகும் ஆரோக்கியமான உணவுகளின் பாவனையை ஊக்கப்படுத்தி இதன்மூலம் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துதல். இது கொரோனாவின் தாக்கங்களை குறைப்பதற்கு உறுதுணையாக அமையும்.

இதுபோன்ற பல திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தொடர் கலந்துரையாடல்களை கிராம மட்டத்தில் ஒழுங்கு செய்தல். எனவே கொரோனா பெருந் தொற்று நிலையை வெற்றி கொள்ள அனைவரினதும் ஒற்றுமையான பங்களிப்பு அவசியமாகி நிற்கின்றது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org